# தொல்லியல் ஆய்வுகள்

பேராசிரியர் டாக்டர்
கே. வி. இராமன்

சேகர் பதிப்பகம்
66, பெரியார் தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை-600 083.

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the book | TOLLIYAL AYVUGAL |
| Author | Dr. K. V. RAMAN |
| Date of birth | 1934 |
| Translator | — |
| Language | Tamil |
| Edition | First |
| Copyright holder | K. V. RAMAM |
| Paper used | 12 kg. White printing |
| Size of the book | 18×12 cms |
| Printing points used | 10 |
| No of Pages | 175 |
| No of copies printed | 1200 |
| Printer | VETRI ACHAGAM, Madras-600 005. |
| Binding | Card Board |
| Price | Rs. 7-00 |
| Publisher | SEKAR PATHIPPAGAM Madras-600 083. |
| Subject | Essays on History and Archaeology |
| Call Number | V 71 : g L 7 |

## உருவாக்கியோர்


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | — | டாக்டர் கே. வி. ராமன் |
| முகப்பு ஓவியம் | — | ஜி. கே. மூர்த்தி<br>இந்திய அரசின் முதற் பரிசு<br>பெற்றவர் (1977) |
| பிளாக்குகள் | — | கமல் பிராசஸ் |
| நூல் அச்சிட்டோர் | — | எஸ். குப்புசாமி, வெற்றி அச்சகம் |
| முகப்பு ,, | — | ஷியாம்,<br>பிரபு பிரிண்டிங் ஹவுஸ் |
| பிழை திருத்தம் | — | பேராசிரியர்<br>மா. ரா. இளங்கோவன் எம்.ஏ. |
| பைண்டர் | | என். ஜானகிராமன் |
| பதிப்பாளர் | — | வெள்ளையாம்பட்டு சுந்தரம்<br>சேகர் பதிப்பகம் |

# அணிந்துரை

வரலாற்றுப் பேரறிஞர்
டாக்டர் கே. கே. பிள்ளை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றும் டாக்டர் K. V. ராமன் அவர்கள் அத்துறைக்கு ஆற்றியுள்ள தொண்டினை நாடு நன்கறியும். தென் இந்தியாவில் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட பல முக்கிய அகழ் வாய்வுகளில் அவர் பங்கேற்றார்; பூம்புகார், காஞ்சிபுரம், நாகார்ஜுனகொண்டா, கேரளத்திலுள்ள கொடுங்கல்லூர் போன்ற பழம் பெரும் ஊர்களில் விஞ்ஞான முறைப்படி அகழ்வாய்வுகள் நடத்தி அவற்றைப்பற்றி அவ்வப்போது அறிக்கைகளும் கட்டுரைகளும் வெளியிட்டுள்ளார்.

ஒரு நாட்டுக் கலாசார—பண்பாட்டு வரலாற்றைக் கணிப்பதற்குத் தொல்லியல் ஆய்வுகள் பயனுள்ளவையாக அமைந்துள்ளன. ஆனால் தென் இந்தியாவில் இத்துறை போதுமான அளவு இன்னும் வளரவில்லை.

டாக்டர் ராமன், பூம்புகாரில் செய்த அகழ்வாய்வுகள் அந்நகரம் முழுமையும் அழிந்து விட்டது என்ற எண்ணத்

தைப் போக்கி, பல பகுதிகள் புதையுண்டுக் கிடக்கின்றன என்னும் உண்மையைக் காட்டுகின்றன, அங்கு வெளிக் கொணரப்பட்ட மூன்று முக்கிய கட்டங்கள் குறிப்பாக, பௌத்தப் பள்ளியொன்றும், உரோமானியர் விட்டுச் சென்றுள்ள சான்றுகளும், தமிழக வரலாற்றில் புதிய அத்தியாயத்தைச் சேர்த்துள்ளன, அச்சான்றுகள் சங்க இலக்கியச் சான்றுகளுடன் ஒத்துள்ளன.

தமிழகத்தில் கிடைத்துள்ள பிராமி கல்வெட்டுகள், தொண்டை மண்டலத்தில் சமண சமயத்தைப்பற்றிப் பல புதிய செய்திகள், பாண்டியர்களின் சமயத் தொண்டு, அவர்களின் பழைய நகரமான உக்கிரன்கோட்டை— இவற்றைப் பற்றிய புதிய கல்வெட்டுச் சான்றுகளுடன் கூடிய கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அனுபவம் மிக்க, பண்பட்ட ஆராய்ச்சியாளரான டாக்டர் ராமன், அகழ்வாய்வுகள் மூலம் கிடைத்த சான்றுகளைத் தமிழ் மக்கள் எளிதாகத் தெரிந்து கொள்ளும் வகையில், தமிழில் இந்நூலை வெளியிடுவதை நான் மனமார வரவேற்கிறேன். தொல்லியல் முன்னேற்றங்களைப் பற்றி மேலும் இது போன்ற நூல்களை அவர் தொடர்ந்து எழுதிட வேண்டுமெனவும் விரும்புகிறேன்.

கே. கே. பிள்ளை

# முன்னுரை

இந்தியத் தொல்பொருள் துறையில் பணியாற்றும் போது தலைசிறந்த பல தொல்லியல் வல்லுநர்களோடு நெருங்கிப் பணியாற்றும் வாய்ப்பும், நம் நாட்டில் அண்மையில் நடந்தேறிய பல முக்கிய அகழ்வாராய்ச்சி களில் பங்கு பெறும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தன.

குறிப்பாகத் தமிழகத்தில் பூம்புகார், காஞ்சி முதலான தொன்மைச் சிறப்புமிக்க நகரங்களில் அகழ் வாய்வு செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன். அந்த அகழ்வாராய்ச்சி களைப்பற்றி அவ்வப்போது கட்டுரைகள் மூலமும் சொற் பொழிவுகள் வாயிலாகவும் விளக்கியுள்ளேன். அத்தகைய கட்டுரைகளின் தமிழாக்கமே இந்நூல். இவை தவிர கல்வெட்டுகள் சமய வரலாறு முதலிய துறைகளைத் தழுவிய கட்டுரைகளும் இங்குச் சேர்க்கப் டுள்ளன.

இதில் உள்ள நிழற்படங்களைத் தந்துதவிய இந்தியத் தொல்பொருள் துறையினர்க்கும், சென்னைப் பல்கலைக் கழகத்தினர்க்கும் எனது நன்றி உரியது.

எனது ஆங்கிலக் கட்டுரைகளைத் தமிழாக்கம் செய்தளித்த விரிவுரையாளர் திரு P. சண்முகம் அவர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்கள் திருவாளர்கள் பொன்னுசாமி, C. சுந்தரம், பி. ரங்கநாதன், சந்திர குமார் ஆகியோருக்கும் எனது நன்றி.

தமிழாக்கம் செய்யப்பட்ட கட்டுரைகளைப் படித்துச் செம்மையாகத் திருத்திச் செப்பமிட்டு, அச்சுப் பிழை திருத்தம் செய்துதவிய பேராசிரியர் மா. ரா. இளங்கோவன் அவர்களுக்கு எனது நன்றி உரியது.

இந்நூலினைத் தமிழில் வெளியிடுவதற்கு எனக்கு ஊக்கமூட்டி, மிக்க ஆர்வத்தோடு குறுகிய காலத்தில் சிறந்த முறையில் வெளியிட்ட சேகர் பதிப்பக உரிமையாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கும் என் நன்றியுரித்தாகும்.

இந்நூலுக்குச் சிறந்ததொரு அணிந்துரையை வழங்கியுள்ளார் என் மதிப்பிற்குரிய பேராசிரியரும் வரலாற்றுப் பேரறிஞருமான டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள். அன்னாருக்கு என் மனம் நிறைந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

கே. வி. ராமன்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | அகழ்வாய்வுகள் – பழந்தமிழர்த் தொழிலியலறிவு | .... | 9 |
| 2. | காவிரிப்பூம்பட்டினத்தில் அகழ்வாய்வுகள் | ... | 29 |
| 3. | உறையூரில் அகழ்வாராய்ச்சி | ... | 43 |
| 4. | கேரளத்தில் அகழ்வாய்வுகள் | ... | 55 |
| 5. | புதிய கற்காலம் – புருஸ்பூட் தொண்டு | ... | 71 |
| 6. | பாண்டியரின் உக்கிரன் கோட்டை | .... | 85 |
| * | படங்கள் | | 89—96 |
| 7. | பாண்டிய நாட்டிலுள்ள சில வீரக்கற்கள் | ... | 101 |
| 8. | தொண்டை மண்டலத்தில் சமண சமயம் | ... | 111 |
| 9. | பாண்டியர்களின் சமய நெறிமுறைகள் | ... | 135 |
| 10. | தமிழ் பிராமி கல்வெட்டுகள் — ஒரு வரலாற்று மதிப்பீடு | ... | 145 |


---

## அன்புப் படையல்

காவிரிப்பூம் பட்டினத்தில் நான் அகழ்வாய்வுகள் நடத்திய பொழுதெல்லாம் உடனிருந்து பணியாற்றி உதவிய அவ்வூர்த் தொழிலாளர் பெருமக்களுக்கும் அன்பர்களுக்கும் இந்நூலினை அன்புக் காணிக்கையாக்கி நிறைவு கொள்கிறேன்.

– ஆசிரியர்

---

# 1

# அகழ்வாய்வுகள் — பழந்தமிழர்த் தொழிலியலறிவு

## முன்னுரை

தமிழகத்தில் நடைபெற்றுள்ள தொல்லியல் ஆய்வுகளும், அகழ்வாய்வுகளும் பழந்தமிழ் நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டினையும், கலைமேம்பாட்டினையும், கைத் தொழில் திறத்தினையும் பல அரிய ஆதாரங்களால் விளக்கு கின்றன. இவற்றுள் சில ஆதாரங்கள், பழந்தமிழ் இலக் கியங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற செய்திகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றன.

குடிமக்கள் பலர் மேற்கொண்டிருந்த பலவகைப்பட்ட கைத்தொழில்களின் நுணுக்கங்களைப் பற்றிய புதுமையான, இதுவரையும் தெரியாத பல உண்மைகளை இந்த அகழ் வாய்வுகள் புலப்படுத்தியுள்ளன.

அழகான ஒப்பனையுடன் உண்டாக்கப்பட்ட மட் பாண்ட வகைகள், நல்ல கலைத்திறன் கொண்ட சுடுமண் உருவங்கள், பலவகையான இரும்புக் கருவிகள், கண்ணாடி யாலும், பல வண்ணக்கற்களாலும் ஆக்கப்பட்ட அழகு

மிக்க மணிகள், தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களால் ஆக்கப்பட்ட சில பொருட்கள் அகழ்வாய்வுகளின் மூலம் கிடைத்துள்ளன.

பழங்கால மக்கள் இந்தப் பொருட்களை உண்டாக்கப் பயன்படுத்திய மூலப்பொருட்கள் கிடைத்தவிதம், அவற்றை உருவாக்கப் பயன்படுத்தபட்ட தொழில் நுணுக்கங்கள், சாதனங்கள் போன்றவற்றைப் பற்றியெல்லாம் இந்தப் பொருட்களின் மூலம் நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

அகழ்வாய்வுத் தெளிவுகளை ஆதாரமாகக் கொண்டு, பழைய வரலாற்றுக் காலத்துத் (தமிழ்நாட்டில் கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை நிகழ்ந்த சில முக்கியமான கைத் தொழில்கள் அல்லது கிராமப்புறத் தொழில்கள் பற்றி அறிவது தான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மட்பாண்டத் தொழில்

மனிதன் கண்டுபிடித்த மிகவும் பழைய தொழில்களில் மட்பாண்டம் வனைதலும் ஒன்றாகும். புதிய கற்காலத்தில் மனிதன் உணவுக்காக அலையும் நிலையிலிருந்து, வேளாண்மை செய்து உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் நிலையை எய்தினான். உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை எதிர்காலத் தேவைக்காகச் சேர்த்து வைக்கின்ற அவசியம் ஏற்பட்டது. இந்த அவசியத்தின் விளைவாக மட்பாண்டங்கள் உருவாக்கப்பட்டன. இந்த மட்பாண்டங்கள் முதலில் கையாலும், பிறகு சக்கரத்தின் உதவி கொண்டும் செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த மிகப் பழைய மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளின் மேற்பரப்பு வழவழப்பாகவும், சாம்பல்நிறம் கொண்டதாகவும் உள்ளது. வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பையம்பள்ளி என்ற இடத்தில் இந்த மட்பாண்ட வகை

மிகவும் பழங்காலத்தைச் சேர்ந்த படிவுகளில் (Layers) கிடைத்துள்ளன.[1]

இந்த ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்ட மண் அடுக்குகள், தோராயமாக கி.மு. 1400–ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது.[2] இவை மைசூர் மாநிலத்திலுள்ள பிரம்மகிரி, தக்கலக்கோட்டை, ஆந்திர மாநிலத்திலுள்ள நாகார்ச்சுனகொண்டா போன்ற இடங்களில் கிடைத்துள்ள பளபளப்பான சாம்பல் நிற ஓடுகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இவை சக்கரத்தால் செய்யப்பட்டவையாகும். இவற்றுடன், கையினால் செய்யப்பட்ட கரடு முரடான ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இரும்புக் காலத்தைச் சார்ந்த பெருங்கல் பண்பாடு (Megalithic Culture) முழு வீச்சில் இருந்தபொழுது மட்பாண்டத்தொழில் மிகவும் உன்னத நிலையில் இருந்தது. அக்காலத்தில் மக்கள் தொகையும் சற்று பெருகியது. அவர்களின் தேவையும் விருப்பமும் வேறுபட்டதும், வளர்ச்சி அடைந்ததாயும் இருந்தன. ஆகவே, அந்த மக்களின் தேவைக்குத் தகுந்தவாறும், விருப்பத்திற்குத் தகுந்தவாறும் அதிகமான மட்பாண்டங்களை, மட்பாண்டத் தொழிலாளர் ஆக்கித்தர வேண்டியிருந்தது. அதனால் பலவித வடிவங்கள் கொண்ட மட்பாண்டங்கள் நிறைந்த அளவில் தயாரிக்கப்பட்டன.

### வண்ணப் புனைவு

அந்தக் காலத்து மக்கள் உருவாக்கிய மிக முக்கியமான மட்பாண்ட வகையைத் தொல்லியல் ஆய்வாளர்கள் 'கருப்பு சிவப்புப் பானை ஓடு' (Black and Red ware sherd) என்று அழைக்கின்றனர். இந்தக் கருப்பு சிவப்பு வண்ணமானது, கவிழ்த்து வைத்துச் சுடுகின்ற (Inverted Firing) ஒரு தனிப்பட்ட சுடுமுறை கொண்டு பெறப்

பட்டதாகும். களிமண்ணைக் கொண்டு உருவாக்கப் பட்ட இந்த மட்பாண்டங்களைச் சூளையில் வைத்துச் சுடும்போது, அவைகளைக் கவிழ்த்து வைத்துச் சுடுவதால் காற்று புகாத உட்பகுதியும், வாய்ப்பகுதியும் கரு நிறமாகவும், காற்று படுகின்ற வெளிப் பகுதி முழுதும் சிவப்பு நிறமாகவும் ஆகி ஆடுகின்றன.[8] பளிச்சென்று நன்கு மெருகேற்றிய மேற்பரப்பைக் கொண்டு திகழ்ந்த இந்த மட்பாண்ட வகைதான் அந்தக் கால மட்பாண்ட வகைகளில் மிகவும் சிறந்ததாகக் கொள்ளப்பட்டது. இவற்றில் உள்ள மினுமினுப்பானது உப்பு சேர்த்து மெருகிடும் ஒரு செய்முறையால் பெறப் பட்டிருக்க வேண்டும்.

இந்த மட்பாண்டங்களைச் சுடுகையில், சூளையில் அடுக்கப்பட்டுள்ள எல்லா மட்பாண்டங்களும் நன்ருக வெந்து நெருப்புச் சுவாலைகள் அணைந்த நிலையிலும் ரத்தச் சிவப்பு நிறமாகக் காட்சி அளிக்கும். அப்பொழுது அந்தப் பாண்டங்களின் மீது ஈரப் பசையுள்ள உப்புத் தூள் தூவப்படும். மிகுந்த வெப்பத்தால் இந்த உப்புத்தூள் உருகி மட்பாண்டத்தின் மேல்பரப்பு முழுதும் பரவுவதால், பாத்திரம் மினுமினுப்பைப் பெறுகிறது.

தொல்லியல் ஆய்வாளர்கள் தங்களுடைய கண்டு பிடிப்புகளுக்குக் காலக்கணிப்பு செய்வதற்கு இந்தக் கருப்பு சிவப்பு ஓடுகள் பெரிதும் துணைபுரிகின்றன. அதனுல் இது முக்கியம் வாய்ந்த ஒரு காலக்கண்ணுடி யாகக் கருதப் படுகிறது.

தென்னிந்தியாவிலும், தக்காணத்திலும் கி.மு. 300 முதல் கி.பி. 100 வரை கணிக்கத்தக்க படிவுகளில் (Layers) இந்த ஓடுகள் கிடைத்துள்ளன. ஆனுல் மத்திய இந்தியாவிலும், வடமேற்கு இந்தியாவிலும் இந்த ஓடுகள் சில இடங்களில் கி.மு. 1500க்கு முன் கணிக்கக் கூடிய

செப்புப் பண்பாட்டுக் காலத்தவை (Chalcolithic Culture) கிடைத்துள்ளன.

இந்தக் கருப்பு சிவப்பு மட்பாண்டத்தின் மற்ருெரு வடிவம் பழுப்பு அல்லது காவி நிறம் பூசப்பட்ட மட்பாண்டமாகும் (Russet Coated Pottery). இது கி.பி. முதல் நூற்ருண்டளவில் வழக்கில் வந்தது. கருப்பு சிவப்பு மட்பாண்டத்திற்கான அதே செய்முறையில் செய்யப்பட்டு, அதேபோல் மினுமினுப்பையும் கொண்டு திகழ்கின்றது. இந்த மட்பாண்டம், குறுக்கும் நெடுக்குமான கோடுகள், அலேயலேயான கோடுகள் போன்ற பல வகையான வனப்பு மிக்க வரிக் கோடுகளேக் கொண்டுள்ளது. இந்த வேலைப்பாடுகள் இந்த மட்பாண்டத்திற்கு ஒரு தனித்தன்மையைக் கொடுக்கின்றன. குறிப்பாக மதுரை, கோவை, சேலம் போன்ற மாவட்டங்களிலும், கன்னட மாநிலத்திலும் இந்த மட்பாண்ட ஓடுகள் ஏராளமான அளவில் கிடைத்துள்ளன.[4]

தமிழ் நாட்டுக் குயவர்கள் புதிய நுணுக்கங்கள் பலவற்றை எளிதில் ஏற்றுக் கொள்ளுகின்ற தன்மை படைத்தவர்களாக இருந்தார்கள். கி.பி. முதல் நூற்ருண்டளவில் தென்னிந்தியாவிற்கும் ரோமாபுரிக்கும் இடையில் வணிகத் தொடர்புகள் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்ததஞல், ரோமாபுரியில் தயாரான முக்கியமான அழகு மிக்க மட்பாண்டங்கள் தென்னிந்தியாவிற்கு வந்து சேர்ந்தன.

ரௌலட்டட் (Rouletted) என்றழைக்கப் படுகின்ற மட்பாண்டமானது நேர்த்தியான களிமண்ணேக் கொண்டு ரோமாபுரியில் செய்யப்பட்டதாகும். அந்தக் களிமண் வகையும், பதம் செய்யப்பட்ட முறையும் தனித்தன்மை வாய்ந்திருந்தது. இது ரோமாபுரியில் மட்டும் தான் செய்யப்பட்டது. இந்த 'ரௌலட்டட் மட்பாண்டங்களே'

ரோம் நாட்டு வணிகர்கள் முதன் முதலில் தென்னிந்தியா விற்குக் கொண்டு வந்து பயன்படுத்தினர்கள்.

இந்த மட்பாண்டம் வெகு விரைவில் எல்லோராலும் விரும்பப்பட்டதால், இதே போன்ற மட்பாண்டங்கள் இங்கேயும் செய்யப்பட்டன. இவை அரிக்கமேடு, காவிரிப் பூம்பட்டினம், உறையூர், செங்கமேடு, காஞ்சி போன்ற இடங்களில் கிடைத்துள்ளன.[5] இந்த ஓடுகளில் மிகவும் நேர்த்தியானவை ரோமாபுரியிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டவை, நேர்த்தி குறைவாக இருப்பவை இங்கேயே செய்யப்பட்டிருக்க வேண்டும்.[6]

ரோமாபுரி மட்பாண்டங்கள் தமிழகத்தில் ஏற்படுத்திய மற்ருெரு விளைவு, 'ஆம் போரா' என்றழைக்கப்படுகின்ற கூர்முனை ஜாடிகள் ஆகும். இவை ஏராளமான எண்ணிக்கையில் செய்யப்பட்டன. இவை அரிக்கமேட் டில்தான் முதன் முதலில் கண்டறியப்பட்டன. இவற்றில் தான் ரோமானியர் தங்கள் நாட்டு மதுபானத்தைச் சேர்த்து வைத்திருந்தனர். ஆனல், பிறகு இவை காஞ்சிபுரம், காரைக்காடு (தென் ஆர்க்காடு) போன்ற இடங்களில் நடை பெற்ற அகழ்வாராய்ச்சிகளின் மூலமாக ஏராளமான எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை ஒரு சிக்கலான செயல் முறைப்படி செய்யப் பட்டனவாகும். இது மேற்புறம் சக்கரத்தாலும், அடிப் புறம் கையாலும் செய்யப்பட்டு, ஒரு கெட்டியான மட்பூச் சின் மூலமாக இரண்டும் இணைக்கப்பட்டுள்ளன. உள் நாட்டுக்குயவர்கள், புதிய தொழில் நுணுக்கங்களை ஏற்று, அவற்றை இங்குப் பயன்படுத்தியும் இருக்கிருர்கள் என்பதை அறிய முடிகின்றது.

காஞ்சிபுரத்தில், ரோமாபுரியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட, இளஞ்சிவப்பு நிறங்கொண்ட 'ஆம் போராக்' களும், உள்ளூர்க் குயவர்களால் செய்யப்பட்டு மங்கிய

சிவப்பு நிறத்துடன் காட்சியளிக்கின்ற 'ஆம்போராக்'களும் ஒரே படிவுகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.[7]

## செங்கற்கள், ஓடுகள், சுடுமண் பொருட்கள்

செம்புப் பண்பாட்டுக்கால (Chalcolithic Age) மத்திய இந்தியாவில் பல இடங்களில் சுடப்படாத செங்கற்களைக் கொண்டு கட்டடங்கள் கட்டப்பட்டன. அந்தக் காலச் கட்டத்தை சேர்ந்த ஆதாரங்கள் தமிழ்நாட்டில் போதுமான அளவில் இல்லை. இருந்தபோதிலும் காவிரிப்பூம்பட்டினத்தில் கி. மு. 250-ஆம் ஆண்டளவிலேயே சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டடங்கள் கட்டப்பட்டதற்கான ஆதாரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.[8]

இங்கே கண்டு பிடிக்கப்பட்ட நீர்த்தேக்கத்தின் முகப்பும், பழந்தமிழர் பெற்றிருந்த கட்டுமான பொறியியல் மேம்பாட்டினைப் பறைசாற்றுகின்றது. இந்தப் படகு மேடைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள செங்கற்கள், தென்னிந்தியாவில் கிடைத்துள்ள பழைய செங்கற்களெல்லாவற்றையும்விட அளவில் மிகவும் பெரியனவாகும். அதன் அளவு $24'' \times 12'' \times 3''$ ஆகும். இங்குக் கிடைத்துள்ள மிகச்சிறிய செங்கற்களின் அளவு $17'' \times 17'' \times 3''$ ஆகும். இந்தச் செங்கற்கள் நன்ருகப் பதப்படுத்தப்பட்ட களிமண்ணைக் கொண்டு செய்யப்பட்டு, ஈராயிரம் ஆண்டுகளாக கடல்நீரின் உவர்ப்புக்கு ஈடுகொடுத்து நிற்கின்றது.

படகு மேடை போன்ற பொதுவான கட்டட அமைப்புகளுக்குப் பெரிய, நன்கு உழைக்கக்கூடிய செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது, ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகளில் ஈடுபட்டிருந்த வணிகக் குழுக்களால், செங்கல் உற்பத்தித் தொழில் ஆதரிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவிக்கின்றது குடியிருக்கும் வீடுகள் போன்ற

சாதாரண கட்டடங்களுக்குச் சிறிய அளவிலான செங்கற்கள் பயன் படுத்தப்பட்டிருக்கலாம்.

காவிரிப்பூம்பட்டினத்துப் புத்த விகாரத்திற்குப் பயன் படுத்தப்பட்ட செங்கற்கள், செயல்திறனையும், ஒப்பனை மேம்பாட்டையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. இச்செங்கற்கள், பலவகைப்பட்ட வார்ப்பட உருவங்களையும் கட்டடத்தில் அது பயன்படுத்தப்பட்டிருக்கின்ற இடத் திற்குத்தகுந்த சரிவான மூலை அமைப்புகளையும் கொண் டுள்ளன. சூளையில் வைத்துச் சுடப்படுவதற்கு முன்பாக, இந்தச் செங்கற்களில் நல்ல களிமண்ணைக் கொண்டு வளைவு களும், பக்க அமைப்புகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

அகழ்வாய்வில் கண்டு பிடிக்கப்பட்ட ஓடுகள் வீட்டுக் கூரைக்குப் பயன்படுத்தப் படுவனவாகும். இவை மிகவும் கவர்ச்சியுடையனவாக உள்ளன. நாம் இன்று பயன் படுத்துகின்ற உட்குழிவான வடிவம் கொண்ட ஓடுகளைப் பழந்தமிழர் பயன்படுத்தவில்லை. அவர்கள் ஆறு அங்குல நீளமும், இரண்டு அங்குல அகலமும் கொண்ட நீண்ட சதுர தட்டை ஓடுகளைப் பயன் படுத்தி னார்கள்.

இந்த ஓடுகள், கட்டடக்கூரையில் உள்ள கை மரத்தின் மீது, ஒன்றன் மேல் ஒன்றாக இடைவெளி விடாது அடுக்கப் பட்டிருக்கலாம் என்று தெரிகின்றது. இந்த ஓடுகள் ஒரே சீரான அளவைக் கொண்டுள்ளதனால், இவை அச்சுக்களில் வைத்து மிகுந்த எண்ணிக்கையில் செய்யப்பட்டிருக்கலாம். இந்த நீண்ட சதுர அமைப்பு கொண்ட ஓடுகள், வரலாற்றுத் தொடக்கக் காலத்து இடங்களான காஞ்சியிலும், புகாரிலும் கிடைத்துள்ளன.

சுடுமண் உருவங்களையும், பொம்மைகளையும் ஆக்குவது மற்றொரு முக்கிய கிளைத்தொழிலாக இருந்தது. இவை

விளையாட்டுப் பொருள்களாகவும், வழிபாட்டுப் பொருள் களாகவும் பயன் படுத்தப்பட்டன.

இந்தப் பொம்மைகள் முதலில் கைகளால் செய்யப் பட்டன. பிறகு வழிபாட்டு உருவங்களின் தேவைகள் அதிகரிக்கவே, அச்சுக்களின் மூலம் பெருமளவில் உருவாக்கப்பட்டன. ஒற்றை அச்சுக்களில் உருவாக்கப் பட்ட சுடுமண் பொம்மைகளும், இரட்டை அல்லது இரு பக்க அச்சுக்களில் உருவாக்கப்பட்ட உருவங்களும் அகழ் வாராய்ச்சிகளின் மூலம் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. குழந்தையுடன் கூடிய அழகிய அன்னையின் உருவம், ஒப்பனை மிக்க மங்கையின் வடிவங்கள், காதணிகள், சொக்கட்டான் காய்கள் (Chess) போன்ற இன்னும் பிற எண்ணற்ற பொருட்கள் எல்லா அகழ்வாய்வு களிலும் கிடைத்துள்ளன. சிறந்த கலையம்சத்தைக் கொண்ட இந்தச் சிறு சுடுமண் உருவங்கள் தொழில் திறத்தையும், கருத்தாழத்தையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவை பிற்காலத்தில் எழுந்து நீண்டு நிலைத்துப் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கின்ற கற்சிலைகளுக்கும், செப்புத் திருமேனி அமைப்புகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்திருக்கின்றன.

## மணிவகைத் தொழில்

தமிழகத்துப் பழமைச் சிறப்பு மிக்க இடங்களில் நடந்த அகழ்வாய்வுகளில் வழக்கமாகக் கிடைத்துள்ள அதிக வனப்பும் வண்ணமும் மிக்க பொருட்கள், மணிகளும் வளையல்களுமாகும். பழுப்பு நிறக்கல் (Jasper) நீல வெண்மணிக்கல் (Chalcedony), மங்கிய சிவப்புக்கல் (Cornelian), பளிங்குப் படிகக்கல் (Quartz Crystal) போன்ற பல வண்ணக் கற்களால் ஆக்கப்பட்ட மணிகள் ஆகியவை புதுவைக்கடுத்த அரிக்கமேடு, காவிரிப் பூம்பட்டினம், காஞ்சிபுரம், உறையூர் போன்ற இடங்களில்

மிகவும் பழமைப் படிவுகளில் கிடைத்துள்ளன, குறிப்பாக, காவிரிப் பூம்பட்டினத்தில் இவை மிகவும் அதிக அளவில் கிடைத்துள்ளன.

இதிலிருந்து காவிரிப் பூம்பட்டினம், மணிகள் செய்யும் தொழிலுக்கும், அதன் வியாபாரத்திற்கும் மையமாக அமைந்திருந்தது என்று கணிக்கப் படுகிறது.

கடலூரிலிருந்து சிதம்பரம் செல்லும் வழியில் 6 மைல் தொலைவில் உள்ள காரைக் காட்டிலும், காவிரிப்பூம் பட்டினத்திலும் முழுமையான செய்முறை படிநிலைகளைக் கொண்ட மணிகள் நேர்த்திமிகு நிறை திட்பத்தையும், சீரான பருமனையும் கொண்டு, அச்சுக்கள் உதவியுடன் உருவாக்கப்பட்டதைப்போல் காட்சியளிக்கின்றன. வட்ட வடிவானவை, நான்கு மூலைகளைக் கொண்ட பட்டை வடிவம் அல்லது வரிப் பள்ளங்களைக் கொண்ட பட்டை வடிவானவை, பல வெட்டுக் கூறுகளைக் கொண்டவை போன்ற பல வகையான மணிகள் செய்யப்பட்டன.

இதுவரை கிடைத்துள்ள மணிகள், மூலப் பொருட்களைத் தேடிக் கொண்டு வருவதில் உள்ள திறன், அவற்றைப் பல பருமன்களில் வெட்டித் துளையிட்டு முறையான நிறை திட்பத்தை ஏற்படுத்துதல் போன்ற செயல் முறை நுணுக்கங்களைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. மூலக் கற்கள் கிடைக்காத கடலோரப் பகுதியான காவிரிப்பூம் பட்டினத்தில் பல வண்ணக்கல் மணிகளாலான அணிகள் கிடைத்திருப்பது வியப்பாக உள்ளது. ஆகவே, இந்த மூலப் பொருட்கள் எல்லாம் மலைப் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டிருக்க வேண்டும் என்பது தெளி வாகத் தெரிகின்றது. 'வடமலைப் பிறந்த மணியும்' என்று தொடங்கும் பட்டினப்பாலையிலுள்ள வரிகள் இங்குக் கருதத்தக்கது.

## கண்ணாடித் தொழில்

குறைந்தது கி.பி. முதல் நூற்றாண்டில் தமிழர்கள் கண்ணாடிப் பொருள்களைச் செய்யக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். இந்தக் காலத்தைச் சேர்ந்தக் காரைக்காடு என்ற இடத்தில் நடந்த அகழ்வாய்வில், முழுமையாகச் செய்யப்பட்ட மணிகளும், பெரிய கண்ணாடித் துண்டு களும், பயனில்லாத கண்ணாடித்துண்டுகளும் கிடைத்தன.[10] இவை காரைக்காட்டில் கண்ணாடி மணிகளும், வளையல் களும் செய்யும் தொழில் சிறப்பாக நடைபெற்றது என்பதைக் காட்டுகின்றன. மண்ணாலான, உலோகங்களை உருக்கப் பயன்படும் மட்கலங்கள் (Crucibles) உடைந்த நிலையில் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. இந்த மட் கலங்கள், மண், சுண்ணாம்புக்கல் போன்றவைகளை உருக்கு வதற்குப் பயன்பட்டிருக்க வேண்டும். இந்தக் கண்ணாடிப் பொருட்களில் சில, ஒளியை ஊடுருவ விடாதனவாகவும் (Opaque), சில நேரங்களில் பாதி ஒளியை ஊடுருவச் செய்யும் தன்மை கொண்டதாயும் (Translucent) இருக்கின்றன. ஒளி ஊடுருவிச் செல்லும் கண்ணாடிகள் முழுமையாகக் கிடைக்க வில்லை. வளையல்கள் கண்ணாடிக் கற்களாலும் சில நேரங் களில், நீலக்கண்ணாடிக் கற்களாலும் செய்யப்பட்டன. அதே நேரத்தில் மணிகள் சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் போன்ற வண்ணக் கண்ணாடிக் கற்களால் செய்யப் பட்டன.

அரிக்கமேட்டில், கி. பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த படிவுகளில் பலவகையான அமைப்புகளைக் கொண்ட மணிகள் (உருண்டை, நீள உருளை, அரைக்கூம்பு, உருளை) கிடைத்துள்ளன. உரோமாபுரியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கண்ணாடி மணி வகைகளும் இங்குக் கிடைத் துள்ளன.[11]

வட்டில்கள், தட்டுகள் அல்லது முகம் பார்க்கும் கண்ணாடிகள் போன்றவை செய்வதற்குக் கண்ணாடிகள்

பயன் படுத்தப்பட்டனவா என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆனால் மணிமேகலையில் காவிரிப்பூம்பட்டினத்தில் பளிங்கினால் கட்டப்பட்ட மாளிகை இருந்ததாக குறிப்புகள் காணப்படுகின்றன. இந்தப் பளிங்கு மாளிகைக்கு, 'கண்ணாடி மாளிகை' என்று பொதுவாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. இதை ஒரு காவிய வருணனை என்று எடுத்துக் கொண்டாலும், கண்ணாடி மாளிகைகளைப் பற்றிய செய்திகள் அக்காலத்தில் வழக்கில் இருந்தன என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.[12]

## உலோகத் தொழில்

### 1. இரும்பு

கற்காலத்திற்குப் பிறகு உலோகங்களில் செம்புதான் (Bronze or Copper) முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இதன் உபயோகம் மிகக் குறைவாகவும், புதிய கற்காலப் பொருளாதாரத்தில் அதன் பங்கு முற்றிலும் இல்லாமலும் இருந்திருக்கின்றது. இக்காலத்தில் கல் ஆயுதங்களே தொடர்ந்து அதிக அளவில் பயன் படுத்தப்பட்டன. இவ்வகையில் இரும்பு வழக்கில் வந்தது; மக்களின் பொருளாதார வாழ்வில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தியது. இரும்பு, மக்களின் தொழில்களுக்குத் தேவையான கருவிகள் செய்வதற்கும், போராயுதங்கள் செய்வதற்கும் பயன்பட்டது. இரும்பினால், வேளாண்மைக்கான மண் வெட்டிகள், அரிவாள்கள், கத்திகள், வாள்கள், ஈட்டிகள் போன்ற கருவிகள் செய்யப்பட்டன. இந்தக் கருவிகள், பொருளாதாரத்துறையில் இதற்கு முன்பு இல்லாத உத்வேகத்தையும், உயர்வையும் ஏற்படுத்தின. தென்னிந்தியாவில் சுமார் கி.மு. 500–ஆம் ஆண்டு வாக்கில் இரும்பு அறிமுகப் படுத்தப்பட்டது என்று கருதப்படுகிறது.[13] இந்த இரும்புக் காலத்தில் எழுந்த பெருங்கல் பண்பாடானது, தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது.

ஆதிச்சநல்லூர் (திருநெல்வேலி மாவட்டம்), பெரும்பேர், சானூர், குன்றத்தூர், அமிர்தமங்கலம் (செங்கை மாவட்டம்) போன்ற பல இடங்களில் 'பெருங்கல் பண்பாட்டுக் காலத்'தைச் சேர்ந்த ஏராளமான இரும்புக் கருவிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அம்பு முனை, ஈட்டி முனை, குதிரை லாடம், குத்துவாள், உளி போன்ற இரும்புக் கருவிகள் பெருங்கல் புதைகுழிகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

## பயன்படுத்தும் திறன்

இதன் மூலம் பெருங்கல் பண்பாட்டுக் காலத்து' மக்கள் இரும்புக்கனி வெட்டி யெடுக்கவும் அதை உருக்கி ஆக்க வேலை மிகுந்த கருவிகள் பலவற்றைச் செய்யவும் கற்றிருந்தார்கள் என்பது புலப்படுகின்றது.

அந்தப் பழைய மக்கள், இரும்பை உருக்குவதற்கு என்னென்ன முறைகளைக் கையாண்டார்கள் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் கீழ்க்கண்ட முறைகளில் செய்யப்பட்டிருக்கலாம் என்று எண்ணலாம்.

இரும்புக் கனிகள் கிடைத்த இடங்கள் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். சுத்தமான இரும்புக் கனியைத் தேர்ந்தெடுத்து, கரியுடன் கலந்து பல மணிநேரம் சூடேற்றப்பட்டு, தொடர்ந்து பல எரி பொருட்களைச் சேர்த்து எரிக்கப் பட்டிருக்க வேண்டும். ஒழுங்காக காற்றைச் செலுத்தி, சீரான நெருப்புச் சுவாலைகளை உண்டாக்குவதற்குத் துருத்திகளை உபயோகித்திருக்கலாம். இப்படிச் சூடாக்கியதால், இரும்புக்கனி, பதமான இரும்பாக மாறுகிறது.

மேலும், அதிகமான நெருப்பிலிருந்து நீக்குவதற்கு சாம்பல், களிமண் போன்ற கலவை, அந்த இரும்புப் பாலத்தின் மீது தூவப் பட்டிருக்கலாம். சிறிது நேரம்

கழித்து, அந்த இரும்புத் துண்டை வெளியில் எடுத்து, அதன் மேல் உள்ள சாம்பல் தூளினைச் சம்மட்டி கொண்டு அடித்து நீக்கிச் சுத்தமான இரும்பை உருவாக்கினார்கள். மதுரை மாவட்டத்திலும் மற்றும் பல இடங்களிலுமுள்ள பெருங்கல் சின்னங்களில் விலக்கப்பட்ட ஏராளமான இரும்புப் பாலங்களை (Iron Slag) இன்றும் காணலாம். தென்னிந்தியப் பெருங்கல் புதை குழிகளில் கிடைத்துள்ள இரும்புக் கருவிகள், பழங்காலத்து உலோகத் தொழிலைப் பற்றித் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

## 2. செம்பு, வெள்ளி, தங்கம்

நாணயங்கள் செய்வதற்கு முற்கால வரலாற்றுக் காலத்தில் செம்பும் வெள்ளியும் பயன் படுத்தப்பட்டன. கிறிஸ்து சகாப்தத்திற்குச் சற்று முன்பாகவே தென்னிந்தியாவில் தூய்மையான, நீண்ட சதுர அமைப்பும், துளைகளும் கொண்ட நாணயங்கள் (Punch-marked) Coins) புழக்கத்தில் இருந்திருக்கலாம். ஆனால், இவை, தங்கத்தைப் போல் ஆபரணங்கள் செய்வதற்குப் பயன் பட்டதாகத் தெரியவில்லை.[14]

கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் நாணயங்கள் செய்வதற்குச் செம்பு விரிவாகப் பயன் படுத்தப்பட்டது. துளையிட்ட செப்புக் காசுகள் தென்னிந்தியாவில் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று பூம்புகாருக்கருகிலுள்ள மணிகிராமத்தில் கிடைத்துள்ளது. காவிரிப்பூம் பட்டினத்தில் புலி உருவம் பொறித்த பழங்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்த சதுர வடிவமான செப்புக் காசுகள் நான்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதைப் போன்று சதுர வடிவில் பழங்காலப் பாண்டியர் காலத்துச் செப்புக் காசுகளும் செய்யப்பட்டன. அவை மதுரையைச் சுற்றி உள்ள பகுதிகளில் கிடைத்துள்ளன.

## தங்கத்தின் வயது!

இந்தக் காசுகள் செய்யப் பயன்படுத்திய சுடு மண்ணாலான, சதுர வடிவான குழிவுகளைக் கொண்ட அச்சுக்கள், காவிரிப்பூம் பட்டினம், காஞ்சிபுரம் போன்ற இடங்களில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. உயர்ந்த வேலைப்பாடு கொண்ட ஏராளமான வெண்கலப் பொருட்கள் ஆதிச்ச நல்லூர்ப் புதை குழிகளில் கிடைத்துள்ளன. இவை, பழந்தமிழ் நாட்டில், உலோகங்களை உருக்கி அடித்துப் பல வகையான தொழிற் கருவிகளைச் செய்கின்ற உலோகத் தொழில் சிறப்பாக நடைபெற்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

'பெருங்கல் பண்பாட்டின்' பிற்காலத்திலேயே தமிழ் நாட்டில் தங்கம் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. ஆதிச்ச நல்லூர் புதைகுழியிலுள்ள தாழியில், தங்கத் தாலான சில அணிகள் கண்டு பிடிக்கப்பட்டன. பாண்டிச் சேரிக்கருகிலுள்ள 'சுத்துக்கேணி' என்ற இடத்திலுள்ள பெருங்கல் புதைகுழி ஒன்றில் தங்கத்தாலான கழுத்தணி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. இந்த மதிப்பு மிக்க உலோகம் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்பது தெரிய வில்லை. ஆனால், சங்கத்தமிழ் இலக்கியமான பட்டினப்பாலை, வடமலையிலிருந்து தங்கம் காவிரிப்பூம்பட்டினத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டதாகத் தெரிவிக்கின்றது"[15] இது இன்றைய கோலார் தங்கச் சுரங்கப்பகுதியைக் குறிக்கின்றது எனக்கொள்ளலாம்.

## பொன் தரும் பூமி

இந்தக் கோலார் பகுதி பழங்காலத்திலும் தங்கம் எடுப்பதற்குப் பயன்பட்டது என்று அங்கு செய்யப் பட்ட சில ஆராய்ச்சிகள் மூலம் தெரிகின்றது. பழந்தமிழ் நாட்டு மன்னர்கள், பிரபுக்கள், நடுத்தர வர்க்கத்தினர்

போன்ருேர் அணிந்த தங்க நகைகள் பலவற்றைப் பற்றிச் சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள் தெளிவாகக் கூறுகின்றன.[16] மதுரை, புகார் போன்ற பெருநகரங்களில், பொற்கொல்லர்களும், நகை வணிகர்களும் இருந்ததைச் சிலப்பதிகாரம் உறுதி செய்கிறது.

கி.பி. முதல் நூற்ருண்டில், ரோமாபுரியிலிருந்து தமிழகத்துக்கு ஏராளமான அளவிலான தங்கம் இறக்குமதி செய்யப்பட்டது. ரோமாபுரித் தங்கக்காசுகளுக்குத் தமிழ்நாட்டுப் பொருள்களான, மிளகு, வெண்துகில், போன்ற பல பொருட்கள் மாற்றப்பட்டன. யவனர்கள் அழகிய கப்பல்களில் தங்கத்தைக் கொண்டு வந்து முசிறித்துறைமுகத்தில் இறக்கிவிட்டு, இங்கிருந்து மிளகைக் கப்பல் நிறைய ஏற்றிச் சென்றதாக சங்ககாலப் புலவர் ஒருவர் பாடியுள்ளார்.[17] இக்காசுகள் பெருங்கற் புதைகுழிகளில் சிலவும் புதையல்களாகவும் (Hoards) கிடைத்துள்ளன.

இப்படிப் புழக்கத்திலிருந்த தங்கம் தமிழ் நாட்டில் பொற்கொல்லர் தொழிலை ஊக்குவித்திருக்க வேண்டும். தங்கத்தால் செய்யப்பட்ட கழுத்தணிகள், மோதிரங்கள், வளையல்கள், சிலம்புகள் மற்றும் மணி முடிகள் போன்ற பல வகையான ஆபரணங்களைப் பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து தெரிந்து கொள்கிருேம். இவ்விதமான ஆபரணங்கள் உலோகத் தொழிலுக்கான உலைக்களம், ஊதுகுழல், அச்சுக்கள், உலோகத்தை உருக்க உதவும் மட்கலம் போன்ற எண்ணற்ற சாதனங்களின் அவசியத்தைப் புலப்படுத்துகின்றன.

## நெசவு, சங்கு அறுத்தல், தந்த வேலைகள்

நெசவுத் தொழில், சங்கு அறுத்தல், தந்த வேலைகள் போன்ற தொழில்கள் பழந்தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்ததை அகழ்வாராய்ச்சிகள் புலப்படுத்தியுள்ளன.

அரிக்கமேட்டில், வெண்துகில்களுக்குச் சாயமிடு வதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்ட இரண்டு சாயத் தொட்டிகள் (Dyeing-Vat) அகழ்ந்தெடுக்கப் பட்டன.

உறையூர் நல்ல நேர்த்தியான பருத்தி ஆடைநெசவுக் கும் வியாபாரத்திற்கும் பெயர் பெற்றதென்றும் அங்கே தயாரான ஆடைகள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன என்றும் பெரிப்ளஸ் நூல் கூறுகின்றது.[18]

வளையல் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கடற் சங்குகள் அரிக்கமேட்டில் ஏராளமாகவும் கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இடங்களில் குறைந்த எண் ணிக்கையிலும் கிடைத்துள்ளன.[19] பூம்புகாரில் வாழ்ந்த, சங்கு அறுத்து வளையல் செய்பவர்களைச் "சங்கு வளையல் காரர்" என்று சிலப்பதிகாரம் குறிக்கின்றது. தந்தச் சீப்பு களும், தாயக்காய்களும் (Indian Chess Gamesmen) முந்தைய படிவுகளில் கிடைத்துள்ளன.[20]

தமிழகத்தின் பழம் பெரும் நகரங்களில் நடந்துள்ள அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ள பொருள்களைப் பற்றிய இந்தப் பகுப்பாய்வால், பண்டைத் தமிழ் நாட்டுத் தொழி லாளர்கள் மட்பாண்டம் வனைதல், உலோகத் தொழில், நெசவுத்தொழில், கண்ணாடிப் பொருட்கள் செய்தல் போன்ற பல தொழில்களில் உயர்ந்த செயல்திறம் பெற்றிருந்தார்கள் என்பதை அறிகின்றோம்.

இந்தப் பொருட்களைப் பற்றி எண்ணற்ற தமிழ் இலக் கியங்கள் ஐயத்திற்கிடமின்றி எடுத்துக் காட்டிய போதிலும், அந்தக் காலத்து மக்கள் பயன்படுத்திய அதே பொருட்

சில ஆகழ்வாராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளதை நாம் காண்கின்றோம்.

நமது பண்டைத் தமிழ் நாட்டுத் தொழிலாளத் தோழர் உருவாக்கிய எண்ணற்ற பொருட்கள் இன்னும் பூமகளின் பொன்னுடலுக்குள் புதைந்து கிடக்கின்றன. எதிர்காலத் தில் நடைபெறும் அகழ்வாய்வுகள் அவற்றை நிச்சய மாக வெளிப்படுத்தி நம் ஆவலைத் தீர்க்கும் என்று நம்பு வோமாக!

## அடிக்குறிப்புகள்

1. பையம்பள்ளியில் தொல்லியல் அகழ்வாய்வுகள், சென்னைச் செய்தி, ஜூன், 1967, பக்கம் 9-11.
2. இந்தக் காலக் கணிப்பு C 14 ஆய்வுப்படி பெறப் பட்டது. இன்றைய அறிவியல்—பம்பாய், 35, எண் 11 (ஜூன் 1966) பக்கம்—276-78.
3. Ancient India இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் அறிக்கை எண் 9 (1953) புது டெல்லி, பக்கம் 110.
4. இந்தியத் தொல்லியல், ஓர் ஆய்வுரை, புது டெல்லி 1958-59, 1961-62 பக்கம் 26.
5. மேலே கூறியது 1961-62, பக்கம் 26-7, 1962-63, பக்கம் 12.
6. மார்டிமர் வீலர், முற்கால இந்தியாவும் பாகிஸ் தானும், லண்டன் 1959, பக்கம் 31-33.
7. Ancient India 1962-63 பக்கம் 12.
8. மேலே கூறியது பக்கம் 13. பேராசிரியர் கே.வி. இராமன், "காவிரிப்பூம் பட்டினம்"—பாரதி தமிழ்ச் சங்க மலர், கல்கத்தா 1963.
9. கே.வி. சௌந்தரராஜன்—நமது முற்காலச் சமூகத் தின் தொழில் நுணுக்கங்களும் பண்பாட்டுக் கூறு களும், பாரதியவித்தியாபவன்—கே. எம். முன்ஷி 'இந்தியவியல்' தொகுதி, பக்கம் 322. (பம்பாய்.)
10. கடலூருக்கு அருகிலுள்ள காரைக்காடு என்ற இடத்தில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் தென் மண்டலப் பிரிவினர் அண்மைக் காலத்தில் நடத்திய அகழ்வாய்வு.

11. Ancient India எண் 2. பக்கம் 102.

12. மணிமேகலை, காண்டம் — 3 v 64.

13. Ancient India எண் 12, பக்கம் 32-34.

14. வி. கனகசபை — 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் — சென்னை, இரண்டாம் பதிப்பு, 1956 பக்கம் 119.

15. பட்டினப்பாலை, வரிகள் 185—90.

16. சிலம்பு vi—76—108; கலித்தொகை 85.

17. அகநானூறு 148.

18. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி — சோழர்கள் (சென்னை, 1955) பக்கம் 88.

19. இதைப்போன்ற சில சங்குகள், கொற்கையில் இந்த ஆசிரியரால் அண்மையில் கண்டெடுக்கப் பட்டன.

20. இந்தியத் தொல்லியல், 1954—55.

# 2

# காவிரிப்பூம்பட்டினத்தில் அகழ்வாய்வுகள்

## 'கபேரிஸ் எம்போரியான்'

சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், சோழப் பேரரசர்களின் தலைநகராகவும், சிறந்த துறைமுகப்பட்டினமாகவும் திகழ்ந்த நகரம் புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினமாகும். சோழப் பெருவேந்தர்களின் செழுமைச் சிறப்பின் மையமாகிய காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த ரோம் நாட்டு ஆசிரியரான தாலமி, 'காவிரிப்பூம்பட்டினம் ஒரு வாணிப முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகத் திகழ்ந்தது' என்று குறிப்பிட்டுள்ளார்; 'கபேரிஸ் எம்போரியான்' என்று இவ்வூரைக் குறிப்பிட்டுள்ளார்; 'பெரிப்ளஸ்' என்னும் நூலில் இந்நகரின் பெயர் குறிக்கப்படவில்லை. ஆயினும், கடலோரத்தில் உள்ள சோழர்களின் தலைநகரம் என்று இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலக்கியங்களில் பூம்புகார்

பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள், புகார் நகரில் சிறப்புற்றுத்

திகழ்ந்த மாளிகைகள், கோயில்கள், அங்காடிகள், மக்கள் வாழ்வியல் பற்றியெல்லாம் விரிவாகக் கூறியுள்ளன.

சங்ககாலச் சோழப் பெருமன்னன் கரிகாற் பெருவளத்தானுடைய ஆட்சிக் காலத்தில் இந்நகரம் புகழ் ஏணியின் உச்சியில் இருந்தது என்று கூறலாம். உறையூரைத் தலை நகராகக் கொண்டு அரசோச்சி வந்த கரிகாலன், தன் நாட்டின் வாணிப வளத்தைப் பெருக்க விரும்பினான்; அதனால், இயற்கையான துறைமுகத்தைப் பெற்று காவிரி ஆறு கடலோடு கலக்குமிடத்தில் அமைந்திருந்த காவிரிப் பூம்பட்டினத்தைத் தன்னுடைய இரண்டாவது தலைநகராக ஆக்கிக் கொண்டான்.

சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகள், காவிரிப் பூம்பட்டினத்தின் மேன்மையையும், தொன்மைச் சிறப்பையும், சிறப்புமிகு பண்பாட்டையும் கூறியுள்ளார்.

பூவிரி நெடுங்கழி நாப்பண் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பை பட்டினத் தன்ன
செழுநகர்

என்று அகநானூற்றுப் பாடல் இந்நகரைக் குறிக்கின்றது.

## பட்டினப்பாலையில் பூம்புகார்

காவிரிப்பூம் பட்டினத் துறைமுகத்திலிருந்த பெரியனவும் சிறியனவுமாகிய படகுத்துறைகளையும் (Wharfs) ஏற்றுமதி— இறக்குமதி பொருட்களையும்பற்றிய விரிவான தகவலைப் பட்டினப்பாலை என்னும் சங்கநூல் தருகின்றது. வெளிநாட்டிலிருந்து வந்த குதிரைகளும், வடமலைப் பகுதியிலிருந்து வந்த பொன்னும் மணியும் மிளகும், பொதிகை மலையிலிருந்து வந்த சந்தனமும், தென் கடலிலிருந்து வந்த முத்துக்களும், கங்கைச் சமவெளியில் தயாரான எண்ணற்ற பொருட்களும், ஈழத்து உணவுப் பண்டங்களும் வியாபாரத்தின் பொருட்டு காவிரிப்பூம்பட்டினத்தில் குவிந்திருந்த காட்சியைப் பட்டினப்பாலை கீழ்வருமாறு கூறுகின்றது:

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின்வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு

(வரிகள் 185—193)

### சமயங்கள் சிறந்தன

பலவகையான சமயங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்த நகரம் காவிரிப்பூம்பட்டினமாகும். அங்கே நிலைத்திருந்த சைவ, வைணவ சமயங்களைச் சேர்ந்த கோயில்களைப் பற்றியும், புத்த-சமண மதத்தைச் சார்ந்த சைத்தியங்களைப் பற்றியும் சிலப்பதிகாரம் கீழ்க்கண்டவாறு கூறுகின்றது:

"அமரர் தருக்கோட்டம் வெள்ளையானைக் கோட்டம்
புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம், பகல்வாயில்
உச்சிக் கிழான் கோட்டம், ஊர்க்கோட்டம், வேற்கோட்டம்,
வச்சிரக்கோட்டம், புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம், நிலாக்கோட்டம்..."

## மணிமேகலையில் பூம்புகார்

காவிரிப்பூம்பட்டினத்தில் புத்தமதம் சிறந்தோங்கியிருந்ததை மணிமேகலைக் காப்பியத்தின் மூலமாகத் தெரிந்து கொள்கின்றோம். இங்கு ஒரு புத்த பள்ளியை நடத்தி வந்த அறவண்ணவடிகளிடம் மாதவியும், அவளுடைய மகள் மணிமேகலையும் புத்தமதக் கொள்கைகளை முழுமையாகக் கற்றுக் கொண்டார்கள். இதன் விளைவாகவேதான் மணிமேகலை,

தன்னுடைய வாழ்க்கையை ஒரு துறவி வாழ்க்கையாகவே மாற்றிக் கொண்டாள்.

புகார் நகரம் கடலில் மூழ்கியதனால், அறவணவடிகளும் மணிமேகலையும் அந்நகரத்தைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்காளான செய்திகளையெல்லாம் மணிமேகலை கூறுகின்றது. சோழ அரசன் இளங்கிள்ளி தம் மகளை இழந்த சோகத்தில் இந்திர விழாவைக் கொண்டாடத் தவறியதால் கடல் தெய்வமான மணிமேகலை சீற்றம் கொண்டு கடலால் அழியும்படி சபித்தாள். "அணி நகர் தன்னை அலைகடல் கொள்க" என்று காப்பியம் கூறும்.

மணிமேகலை காப்பியத்தின் கூற்றைக்கொண்டு காவிரிப் பூம்பட்டினம் முழுமையாகக் கடல் கொண்டுவிட்டது என்று கொள்ளலாமா? அல்லது பெரிய கடல் கொந்தளிப்பு வந்து (High tidal wave) கடலோரப் பகுதிகளில் பலத்த சேதத்தை விளைவித்துச் சென்றதை நமக்கு நினைவுபடுத்துவதாகக் கொள்ளலாமா? பட்டினம் முழுமையும் கடலில் மூழ்கி விட்டதாகச் சொல்வதற்குப் போதிய பிற சான்றுகள் இல்லை.

### அபிதம்மவதாரம்

கி.பி. 5—ஆம் நூற்றாண்டில் தொடர்ந்து அந்நகரம் நல்ல நிலையில் இருந்ததை அப்போது எழுதப்பட்ட "அபிதம்மவதாரம்" என்னும் பௌத்த நூலின் மூலம் அறியலாம். அந்நூலை எழுதிய புத்ததத்தர் என்னும் பௌத்த பேராசிரியர் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள பௌத்தப் பள்ளியொன்றில் தங்கியிருந்து அந்நூலை எழுதியதாக அதில் குறிப்பிட்டுள்ளார். அந்நகரின் செழிப்பைப் பின்வருமாறு குறித்துள்ளார்.

> "காவிரிப்பூம்பட்டினம் பல வசதிகளையும் கொண்ட ஓர் அழகிய நகரமாகும். விலையுயர்ந்த

நவரத்தினம் உள்பட பல்வேறு பொருள்கள் இங்குள்ள கடைவீதிகளில் விற்கப்படுகின்றன. இங்கு மாடமாளிகைகளும் கம்பீரமான நுழை வாயில்களைக் கொண்ட அரண்மனைகளும் உள்ளன. இங்கு வாழும் மக்கள் நல்ல மரபைச் சார்ந்தவர்கள்".

கி.பி. ஐந்தாம் நூற்றுண்டிலும் காவிரிப்பூம்பட்டினம் பொலிவுடன் இருந்ததை இக்குறிப்பு உணர்த்தும்.

**பெருநகர் அழிந்ததா?**

ஏழாம் நூற்றுண்டில் அங்கு வந்த சைவ அடியார்களான அப்பரும், திருஞானசம்பந்தரும் அங்குள்ள கோவில்களைப் பாடியுள்ளனர். சாய்க்காடு, பல்லவனீச்சுரம் என்னும் இரு பகுதிகளில் இக்கோயில்கள் உள்ளன. "புகார்ச் சாய்க்காடே" என்றும், "காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சுரமே" என்றும் சேர்த்துப் புகழப்படுவதால் அப்பெருநகரின் பகுதிகளாகவே அவை கருதப்பட்டதை அறியலாம். அக்கோயில்களில் காணப்படும் பிற்காலக் கல்வெட்டுகளிலும் அவை காவிரிப்பூம் பட்டினத்துப் பகுதிகளாகவே குறிக்கப்படுகின்றன (261 – 273/1911). எனவே, காவிரிப்பூம் பட்டினம் கடல் கொந்தளிப்பால் ஒரு சமயம் தாக்குண்ட போதிலும் முழுமையாக அழிந்து விடவில்லை என்று தெரிகிறது.

பிற்காலக் குறிப்புகள் தொடர்ந்து அங்குள்ள பகுதிகளைக் காவிரிப்பூம் பட்டினமாகவே குறித்து வந்தன என்பதை நாம் அறிகிறோம். அகழ்வாராய்ச்சிகளும் இதை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளன.

## அகழ்வாராய்ச்சி

இந்த இடத்தில் அகழ்வாய்வு நடத்திப் பார்க்க வேண்டுமென்பது எனது நெடு நாளைய விருப்பமாகும்.

1962-இல் இந்தியப் பெருநாட்டின் தொல்லியல் துறையின் தென் மண்டலப் பிரிவு இங்கே அகழ்வாய்வு நடத்தும் பணியைத் தொடங்கியது.

முதன் முதலில் இந்த இடத்தைப் பார்க்கின்ற தொல்லியல் அறிஞர்களால்கூட இந்நகரின் தொன்மைக்கான எந்த வெளித் தோற்ற அறிகுறிகளையும் காண முடியாது.

காவிரியாறும் சிறு வாய்க்காலாகச் சுருங்கிக் காட்சியளிக்கின்றது. காவிரிப்பூம்பட்டினம் இருந்த இடத்தில் (வடக்குப் பகுதி) ஒரு சிறிய மீனவர் குடியிருப்பும் ஒரு பக்கத்தில் நெல்வயல்களும் மற்றொரு பக்கத்தில் நீண்ட மணற் பகுதிகளும்தான் நம்மால் காண முடிகிறது.

மண்ணில் மறைந்து கிடக்கின்ற வரலாற்று ஆதாரங்களுக்கான எந்தவிதமான சுவடுகளையும் மேற்பரப்பில் முதலில் எங்களால் காண முடியவில்லை. ஆனால், எங்களுக்கிருந்த நம்பிக்கையே சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்ற சாய்க்காட்டிலும் நெய்தவாசலிலும் விரிவான அகழ்வாய்வு மேற்கொள்ளத் தூண்டியது.

கடற்கரையோரப் பகுதிகளை நன்கு ஆராய்ந்தோம். மக்கள் வாழ்ந்து விட்டுச் சென்றுள்ள தடயங்களைப் பார்த்தோம். உறை கிணறுகளும், கட்டடச் சிதைவுகளும், செங்கல் குவியல்களும், உடைந்த பழைய மட்பாண்டங்களும் பல இடங்களில் கண்டோம். பழமைச் சிறப்பு வாய்ந்த ஆதாரங்களையும் இங்கே கண்டுபிடித்தோம்.

எங்கள் முயற்சி வீணாகவில்லை. கடற்கரை ஓரமாக பல்வகையான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. காவிரிப்பூம்பட்டினம் புகழ் ஏணியின் உச்சியிலிருந்த கிறிஸ்து சகாப்தத்தில் ஆரம்ப ஆண்டுகளிலிருந்தே அந்தத் தடயங்கள் அங்கே இருந்திருக்க வேண்டும் என்று கணிக்கக் கூடிய ஆதாரங்கள் கிடைத்தன.

**வாணகிரி—வெள்ளையன் இருப்பு**

வாணகிரி என்னும் ஊரின் அருகில் கடலோரப் பகுதியில் இந்நகரின் பண்பாட்டுப் பெருமையைப் பறைசாற்றும் அடையாளங்களாகச் சோழ மன்னர்களின் புலி இலச்சினைகளைக் கொண்ட சதுர வடிவக் காசுகளும், பல வண்ணக் கற்களால் செய்யப்பட்ட எண்ணற்ற அணிகலன்களும், ரோமானிய மட்பாண்டச் சிதைவுகளும் கண்டுபிடிக்கப் பட்டன. வெள்ளையன் இருப்பு என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ரோமானிய நாணயமும், வாணகிரியை அடுத்துள்ள கடலோரப் பகுதியில் கிடைத்த ரோமானிய மட்பாண்டங்களும் இப்புகழ்நகரில் யவனர் தங்கியிருந்ததை உறுதி செய்கின்றன. புகார் நகரிலிருந்த வெளிநாட்டாரின் இருப்பிடங்களைச் சிலப்பதிகாரம் கீழ்வருமாறு கூறுகின்றது :

"கலம் தருதிருவின் புலம் பெயர் மாக்கள்
கலந்து இருந்து உறையும் இலங்கு நீர் வரைப்பும்"

## பௌத்தப் பள்ளி

எங்களுடைய ஆரம்பகால வெற்றியைத் தொடர்ந்து இங்கே 1963—64-ஆம் ஆண்டுகளிலும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அப்பொழுது மூன்று பெரிய செங்கற் கட்டட அமைப்புகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அவற்றில் மிகவும் முக்கியமானது பௌத்தப் பள்ளியாகும்.

மேலையூர் என்னும் பகுதியில் பல்லவனீச்சுரம் என்னும் கோவிலுக்கு அருகாமையில் இந்தப் பௌத்த விகாரம் உள்ளது. இந்த விகாரை புத்தபிரானை வழிபாடு செய்வதற்கும், துறவிகள் தங்குவதற்கும் ஏற்ற வகையில் பல அறைகளைக் கொண்டு கட்டப்பட்டிருப்பது நன்றாகத் தெரிகின்றது. அதன் ஓர் அறையில் புத்தரின் சிறிய செப்புத் திருமேனியும் கண்டெடுக்கப்பட்டது.

மற்றோர் அறையில் புத்தபிரானின் பாதங்களை ஏந்தி நிற்கும் அழகிய சலவைக்கல் (lime-stone) கண்டெடுக்கப் பட்டது. இது புகழ்மிக்க பௌத்த ஸ்தலங்களாகிய அமராவதி, நாகார்ஜுனகொண்டா போன்ற இடங்களில் உள்ள சிற்ப வேலைப்பாட்டை ஒத்து இருக்கின்றது. இதிலும் மகாபுருஷ லட்சணங்கள் என்று கூறப்படும் சுவஸ்திகம், ஸ்ரீவத்சம், பூர்ணகும்பம் போன்ற திருச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

காவிரிப்பூம்பட்டினம் புத்தமதத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தது என்பதற்கும், தமிழகத்தில் புத்தமதக் கருத்துக்கள் பரவியிருந்தன என்பதற்கும் இதைவிட வேறு என்ன சான்றுகள் வேண்டும்? ஆந்திராவிலுள்ள அமராவதி, நாகார்ஜுனகொண்டா போன்ற நகரங்களைப் போல், காவிரிப்பூம்பட்டினமும் புத்த சமய முக்கியத்துவம் வாய்ந்த தாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

கி.பி. 4-ஆம் நூற்றாண்டளவில் இங்கே புத்தமதத்துறவி களின் மடங்கள் இருந்ததற்கான குறிப்புகள் இலக்கியங் களில் இருக்கின்றன. உறையூரைச் சார்ந்த புத்ததத்தன் என்னும் அறிஞர் புத்தமதக் கோட்பாடுகளைக் கற்றுத்தேர் வதற்காக இரண்டுமுறை ஈழத்திற்குச் சென்றதாகவும், பிறகு காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள கணதாசருடைய மடத்தில் தங்கி அபிதம்மவதாரம் (Abhidammavatharam) என்னும் நூலை எழுதியதாகவும் நூலின் முகவுரையில் குறிக்கப் பட்டுள்ளது.

## படகுத்துறை

கடற்கரையிலிருந்து மேற்கில் உள்ள கீழையூரில் சிறிய படகுகளை நிறுத்தி, சரக்குகளை இறக்குமதி ஏற்றுமதி செய் வதற்கான சிறிய முன்துறை (Brick-jetty) ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தச்சுவரில் அங்குமிங்கும் மரக் கம்பங்கள் பொருத்தப்பட்டிருப்பது நன்கு தெரிகின்றது.

இந்த சுவரில் பயன்படுத்தப்பட்டுள்ள செங்கற்கள் அளவில் மிகவும் பெரியனவாக உள்ளன. சுவரில் பொருத்தப் பட்டுள்ள கம்பங்கள் சிறு படகுகளைக்கட்டி நிறுத்துவதற்குப் பயன்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகின்றது. அல்லது அவற்றைக் கால்களாகக் கொண்டு அவற்றின் மீது பலகை களைப் பொருத்திப் பொருள்களை ஏற்றுவதற்கு வசதி செய்தி ருக்கக்கூடும். இங்குப் புலிச் சின்னமிட்ட காசு ஒன்றும் கிடைத்தது.

அந்நாளைய காவிரிப்பூம்பட்டினத்தில் இம்மாதிரியான முன் துறைகள் இருந்ததற்கான குறிப்புகளைப் பட்டினப் பாலை,

> "...வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
> நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
> பணை நிலைப் புரவியின் அணைமுதற் பிணிக்கும்
> கழிசூழ் படப்பை...."

என்று கூறுகிறது. உப்பிற்கு மாற்றப்பட்ட நெல்லை ஏற்றி வைக்கப்பட்டிருந்த படகுகள், லாயத்தில் கட்டிவைக்கப் பட்டிருந்த குதிரைகளைப் போல் முன்துறைகளில் உள்ள மரக்கம்பங்களில் கட்டி வைக்கப்பட்டிருந்தன என்பதை அறிகின்றோம். இங்கு கிடைத்த மரக்கம்பங்கள் கார்பன்-14 (Carbon-14) என்னும் விஞ்ஞான முறைப்படி பரிசோதிக்கப் பட்டன. அதன்படி அவை சுமார் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவை யென்று கணிக்கப்பட் டுள்ளது.

## நீர்த்தேக்கம்

சோழர் காலத்தைச் சேர்ந்த நீர்த்தேக்கம் ஒன்று வாண கிரி என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கத்தில் அதிகமாகச் சேர்ந்த நீர் வெளியேறுவதற் கான முகத்துவாரமானது செங்கற்களால் படிப்படியாக அழகாகக் கட்டப்பட்டுள்ளது.

இது சற்றேறக் குறைய 1800 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகின்றது. காவிரி யாற்றிலிருந்து ஒரு சிறிய வாய்க்கால் வழியாக இதில் நீர் கொண்டு சேர்க்க சோழப் பேரரசர்கள் அணைகள் கட்டி, காவிரியாற்றிலிருந்து கால்வாய்கள் வெட்டி நீர்ப்பாச னத்தைப் பெருக்கினார்கள் என்பதை இது போன்ற கண்டு பிடிப்புகள் உறுதி செய்கின்றன.

இடைக்காலத்திலும் இந்நகரில் மக்கள் பல்வளம் பெற்று வாழ்ந்திருந்தார்கள் என்பதை இங்கே கண்டு பிடிக்கப்பட்ட பிற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்த கட்டடங்களின் அடித்தளங்களும், ராஜராஜன், விக்கிரம் சோழன் ஆகியோரது காசுகளும் உறுதி செய்கின்றன. அக்காலக் கலைஞர்கள் கலைப்பொருட்களை ஆக்குவதில் கொண்டிருந்த தணியாத ஆர்வத்தையும் கலைநுணுக்கத்தை யும் இங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுடுமண் உருவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இங்கே கண்டு பிடிக்கப்பட்டுள்ள புத்த விகாரம், நீர்த்தேக்கம், முன்துறை, சோழப் பெரு மன்னர்கள் வெளி யிட்ட காசுகள், ரோமாபுரியைச் சேர்ந்த நாணயங்கள், பானை ஓடுகள் போன்ற இன்ன பிறவெல்லாம் காவிரிப்பூம் பட்டினத்தின் தொன்மையையும். கீர்த்திமிகு மேன்மை யையும் எடுத்துக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட வரலாற்று வடிவங்களும் இலக்கியக் காட்சிகளும் காவிரிப்பூம் பட்டினத்தின் தோற்றப் பொலிவைப் பற்றிய நினைவை மறக்க முடியாதவாறு செய்கின்றன.

இங்கே இன்னும் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க பொருட்களை வெளிக்கொணரும் பணியில் இந்தியத் தொல்லியல் துறையின் தென் மண்டலப் பிரிவு ஈடு பட்டுள்ளது. மண்ணில் மறைந்து கிடக்கும் பழைய புகாரின் அரிய 'ரகசியங்களை' இத்துறையினர் வெளிக் கொணர்வார்கள் என நாம் நம்புவோமாக!

## மேலும் அகழ்வாய்வு

இக்கட்டுரை 1968–இல் என்றால் வெளியிடப்பட்ட தாகும். அதற்குப் பிறகு அங்கு மேலும் அகழ்வாராய்ச்சி செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. புத்த விஹாரத்தின் வேறு பல பகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இப் பௌத்தப் பள்ளி பூமிக்கு அடியில் இருந்ததே தெரி யாமல் மண்மேடிட்டிருந்ததால் அதன் மீது தற் காலத்தில் மக்கள் வீடு கட்டிக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இப்பள்ளியின் சில பகுதிகளில் ஒரு வீட்டின் புறக் கடையில்தான் முதன் முதலில் அகழ்ந்தோம். பிறகு மூன்று நான்கு வீடுகள் அகற்றப்பட்டு அவ்விடங் களில் அகழ்ந்து ஆராயப்பட்டது. இதன் விளைவாக, விஹாரத்தின் விரிவான பரப்பளவும், மண்டபங்கள், தூண்கள், அழகிய வேலைப்பாடுகள் கூடிய சுதைச் சிற்பங்கள்—இவையெல்லாம் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சதுர அமைப்புள்ள ஒரு பெரிய செங்கல் கட்டடத்தின் அடித்தளம் கண்டு பிடிக்கப்பட்டது. அது அங்கிருந்த பௌத்த கோவிலாக இருந்திருக்க வேண்டும்.

இதன் அமைப்பிலிருந்து, அதற்கு மேல்மாடியிருந்தது என்று தெரிகின்றது. இது ஏறத்தாழ நாகப்பட்டினத்தில் இருந்த பௌத்தக் கோவிலின் அமைப்பைக் கொண் டிருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

இப்பௌத்தப் பள்ளி இன்னும் முழுமையாக வெளிக் கொணரப் படவில்லை. முழுமையாகக் காண்பதற்கு மேலும் சில வீடுகள் அகற்றப்பட வேண்டியிருக்கிறது. இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'வெள்ளையன் இருப்பு' என்னுமிடத்தின் ஒரு பகுதியில் செய்த அகழ்வாய்வில் சுமார் 10, 12–ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த பாமரமக்களின் வீடுகளும் அவர்கள் உபயோகப்

படுத்திய பொருள்களும் பற்றிய பல அரிய சான்றுகளும் கிடைத்துள்ளன.

## ஆய்வுக்குத் துணையானவர்கள்

இவ்வகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ள பலர் எங்களுக்கு உறுதுணையாக இருந்து ஊக்குவித்தனர். அவர்களில் முக்கியமானவர்களை மட்டும் இங்குக் குறிப்பிட்டு நன்றி கூற விரும்புகிறேன். காலம் சென்ற பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்களும், சென்னை மரே கம்பனி ராஜம் அவர்களும் பூம்புகாருடன் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் வரை படங்களைக் கொண்டு வந்து அங்குப் பார்க்க வேண்டிய பகுதிகளைப் பற்றி என்னிடம் பலமுறை விவரித்து அங்குப் பூர்வாங்க பரிசோதனைகள் (exploration) செய்ய ஊக்குவித்தனர்.

அப்போது இந்தியத் தொல் பொருள் ஆய்வுத்துறை தென் மண்டலப் பிரிவுக்கு சூப்ரின்டென்டன்டாக இருந்த வரும் நாகார்ஜுனக் கொண்டாவில் பல ஆண்டுகள் புகழ் மிக்க அகழ்வாராய்ச்சிகள் செய்தவருமான டாக்டர் ஆர். சுப்பிரமணியமும், டைரக்டர் ஜெனரலாயிருந்த ஏ. கோஷ் அவர்களும் இவ்வாராய்ச்சிகளில் நல்ல ஊக்கம் கொண்டு உடனடியாக அதற்கு வேண்டிய பண ஒதுக்கீடு செய்து மற்ற வசதிகளையும் செய்து கொடுத்தனர்.

1962–ஆம் ஆண்டு மார்ச் மாதம் பூம்புகாரில் 10 நாட்கள் முகாமிட்டுப் பூர்வாங்க பரிசோதனை செய்த போதும் பிறகு பல மாதங்கள் தொடர்ந்து வேலை நடந்த போதும் அங்குள்ள மக்கள் எல்லோரும் முழு ஒத்துழைப்பு அளித்தனர். குறிப்பாக கீழ்ப் பெரும்பள்ளம் நாகலிங்கம் பிள்ளை, மேலப் பெரும்பள்ளம் திரு. தியாகராஜன், தாசில் பண்ணை திரு. ராஜசேகரன், கம்பனடிப்பொடி சா. கணேசன் முதலியோர் எங்களுடன் அவ்வப்போது அங்குத் தங்கி ஊக்குவித்தனர்.

1962 முதல் சுமார் 1967 வரை அகழ்வாய்வுகள் பல பகுதிகளில் நடக்கும்போது நம் நாட்டுத் தொல்லியல் அறிஞர்கள் பலர் ஆய்வுகளை நேரில் காண வந்தனர். அவர்களில் இந்தியத் தொல்லியல் தலைவர் திரு. A. கோஷ், உதவி இயக்குநர் ஜெனரல் திரு. B. B. லால், டாக்டர் N. R. பானர்ஜி, திரு. S. R. ராவ், திரு. கே. ஆர். ஸ்ரீநிவாசன், திரு. K. V. சௌவுந்தரராஜன், வெளிநாட்டு அறிஞர்கள் பேராசிரியர்கள் பர்டன், ஸ்டென், கிளராளஸ் மலோனி, டாக்டர் கரஷிமா போன்றோரும் அவ்வப்போது வந்து அகழ்வாய்வுகளைப் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

அதுபோல் பல அமைச்சர்களும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் அகழ்வாய்வுகளை வந்து பார்த்து ஊக்குவித்தனர்.

மேலும் அகழ்வாய்வுகள் நடக்கும்போது என்னுடன் பணியாற்றிய பல்வேறு கலைஞர்களுக்கும் நன்றி கூறுதல் வேண்டும். இந்தியத் தொல்பொருள் துறையைச் சார்ந்த அகழ்வாய்வுகளில் மிக்க அனுபவம் பெற்றிருக்கும் திரு. K. P. பாலகிருஷ்ணன், புகைப்பட வல்லுநர் திரு. ஏழுமலை, ஓவியர்கள் திரு. K. பலராமன், T. G. கிருஷ்ணஸ்வாமி, திரு. V. N. S. தேசிகன், காலம் சென்ற தி. B. கிருஷ்ணராவ் போன்றோர் தொடக்க காலத்திலிருந்து இப்பணியில் மிக்க ஆர்வத்துடன் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

## அருங்காட்சியகத்தில் கண்காட்சி

1963, 64-இல் அகழ்வாய்வுக் கண்டுபிடிப்புகள் சென்னை அருங்காட்சியகத்தில் ஒரு சிறப்புக் கண்காட்சியாக வைக்கப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்த டாக்டர். இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் அக்கண்காட்சியைத் திறந்து வைத்துப் பாராட்டினர்.

தமிழறிஞர்கள் டாக்டர் மு. வரதராசனர், டாக்டர் மா. இராசமாணிக்கனர் ஆகியோரும் மற்றும் பல தமிழறிஞர்களும் கண்காட்சியைக் கண்டு பாராட்டினர்.

1967-ஆம் ஆண்டு இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் கண்காட்சியில் வைக்கப்பட்ட பூம்புகார் கலைப் பொருள்கள் அறிஞர் பெருமக்களின் கவனத்தை ஈர்த்தன; பாராட்டைப் பெற்றன.

## பழமைக்குப் பாதுகாப்பு

பூம்புகாரில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் சென்னை கோட்டையில் உள்ள இந்தியத் தொல்பொருள் துறையின் தென்வட்ட அலுவலகத்தில் (Archaeological Survey of India, Southern Circle office,) வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட கட்டடங்கள் அங்கேயே மத்திய அரசால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

# 3

# உறையூரில் அகழ்வாராய்ச்சி

## அவர்கள் கண்ட உறையூர்

சங்க காலச் சோழப் பெருவேந்தர்களின் சிறப்புமிக்க தலைநகராகத் திகழ்ந்த உறையூர் இன்றைய திருச்சி நகரின் ஒரு பகுதியாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

உறையூர், உறந்தை, கோழி அல்லது கோழியூர் என்னும் பல பெயர்களில் இது வழங்கி வந்திருக்கின்றது. கி. பி. முதல் நூற்றாண்டைச்சேர்ந்த பெரிப்ளஸின் நூல் உறையூரை அருகரு என்று குறிக்கின்றது. அது உள்நாட்டுத் தலைநகராக வழங்கி வந்ததாகவும் அந்த நூல் கூறுகின்றது. ஆர்த்துராரிஜியா சொர்ணதி (orthuraregia sornati) என்று தாலமி (Ptolemy) குறிப்பிட்டிருப்பது சோழநாட்டைச் சேர்ந்த உறையூர்ப் பகுதியைத்தான் என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

மிகப் பழங்காலத்திலிருந்தே உறையூர் பருத்தி நெசவுக்கும் பட்டு நெசவுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகத் திகழ்ந்து வந்திருக்கின்றது. பருத்திப் பொருட்களின்

வாணிபத்திற்கு உறையூர் மையமாகத் திகழ்ந்திருக்கிறது என்பதைப் பெரிப்ளஸ் எழுதிய நூலிலிருந்தும் அறிகின்றோம்.

## இலக்கியங்களில் உறையூர்

உறையூரில் நடைபெற்ற உறந்தை விழாவையும், நெறிதவறாமல் நீதி வழங்கி வந்த சபைகளைப் பற்றியும் அகநானூற்றுப் பாடல்கள் அழகுபட எடுத்துக்கூறுகின்றன.

உறையூரையும் அந்நகர்பெற்றிருந்த அரசியல்–வாணிப மேம்பாட்டினையும்பற்றி அகநானூறு, புறநானூறு போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள்பரக்கப் பேசுகின்றன. கோட்டைக் கொத்தளங்களுக்குள்ளடங்கிய வளமான நகர்ப்புறவாழ்க்கை வசதிகளைப் பெற்றுத் திகழ்ந்தது உறையூர் என்றெல்லாம் அந்த இலக்கியங்கள் கூறுகின்றன.

## உறையூரின் வீழ்ச்சி

கி. பி. 7, 8–ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் ஏற்பட்ட போட்டிப் பொறாமைகளுக்கு உறையூர் முக்கிய காரணமாக இருந்து வந்திருக்கின்றது.

கி. பி. 10–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து உறையூர் சோழப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கி வந்தது. பிறகு 13, 14–ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் உறையூரைக் கைப்பற்றிக் கொண்டார்கள். மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்துத் தாக்கும் பொழுது உறையூர் பெரும் சேதத்திற்குள்ளானது. சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு உறையூர் தனது அரசியல் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது.

## அகழ்வாராய்ச்சிக் களங்கள்

வளர்ந்து கொண்டிருக்கும் பெரிய நகரத்தின் புறநகர்ப் பகுதியான உறையூரில் அகழ்வாய்வு செய்வதற்கு விசால

மான வெற்றிடத்தை எளிதில் பெறமுடியவில்லை. அதனால் அங்குமிங்குமாக ஐந்து பகுதிகளில் கிடைத்த பன்னிரண்டு இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டது.

அந்த இடங்களாவன : 1. இன்றைய உறையூர்க் காவல் நிலையத்துக்கருகிலுள்ள விளையாட்டு மைதானம். 2. செல்லியாச்சியம்மன் கோவிலுக்கருகிலுள்ள இடம். 3. உறையூர் தண்ணீர்த் தொட்டியிலிருந்து வடகிழக்கு மூலைப்பகுதி. 4. பழைய சத்திரத்துக்கருகிலுள்ள வெற்றிடம். 5. நாடாத் தொழிற்சாலைக்கருகிலுள்ள இடம் போன்றவை யாகும்.

மேலே குறிப்பிட்ட இடங்களில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறை, 1964–ஆம் ஆண்டிலிருந்து 1968–ஆம் ஆண்டுவரை டாக்டர் T. V. மகாலிங்கம் அவர் களின் தலைமையில் அகழ்வாய்வுகளை மேற்கொண்டது.

## அகழ்வாய்வுக் காலகட்டங்கள்

இந்த அகழ்வாய்வுகளால், இரண்டு பெரிய கால கட்டங் களைச் சேர்ந்த பண்பாட்டுக் கூறுகளுக்கான ஆதாரங்கள் வெளிக் கொணரப்பட்டன. முதற்காலம் (Period I) கிறிஸ்து சகாப்தத்தின் முதல் மூன்று அல்லது நான்கு நூற்றாண்டு களையும், இரண்டாம் காலம் 5–ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட ஆண்டுகளையும் சேர்ந்ததாகும்.

இரண்டாவது காலத்தை (Period II) இரண்டாவது காலம்—அ (Period II–A) என்றும், இரண்டாவது காலம் —ஆ (Period II-B) என்றும் இரண்டு துணைப்பிரிவுகளாகப் பிரிக்கலாம். இரண்டாவது காலம்–அ 5-ஆம் நூற்றாண்டி லிருந்து 10–ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தையும் இரண்டாவது காலம்-ஆ இடைக்காலத்தின் பிற்பகுதியை யும் (late medeaval) சேர்ந்ததாகும்.

இந்தக் காலப் பாகுபாடானது, அகழ்வாய்வில் கிடைத் துள்ள பலவகையான — முன்பே அறிஞர்களால் ஐயத்திற்

கிடமின்றி காலக் கணிப்பு செய்யப்பட்ட பானை ஓடுகளை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்டதாகும்.

கருப்பு சிவப்பு ப்பானை ஓடுகளுடன் சேர்ந்து வெளிப் பட்ட கருப்பு ஓடுகள், காவி வண்ணம் தீட்டப்பட்ட ஓடுகள், ரௌலட்டட் ஓடுகள் போன்ற ஏற்கனவே பல இடங்களில் காலக் கணிப்புச் செய்யப்பட்ட ஓடுகள் 'முதற்காலம்' முழுவதும் கிடைத்துள்ளன. இங்கே கிடைத்துள்ள காவி வண்ணம் தீட்டப்பட்ட ஓடுகளும், ரௌலட்டட் ஓடுகளும், கிறிஸ்து சகாப்தத்தின் முதல் நூற்றுண்டுக்கருகிலுள்ள காலத்தைத் துல்லியமாகக் காட்டுகின்றன.

பிராமி எழுத்துக்களைத் தாங்கிய பானை ஓடுகள் மிகுந்த எண்ணிக்கையில் கிடைத்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றுகும். ஒரு நீண்ட பானை ஓட்டில் ''முலான்பேடு அந்தணன்'' என்ற பிராமி எழுத்துக்கள் உள்ளன. ஆனல் மற்ற ஓடுகளில் உள்ள எழுத்துக்களெல்லாம் உடைந்தும் சிதைந்தும் மிகவும் சிறியனவாகவும் காணப்படுவதால், அவற்றைப் படிப்பது கடினமாக உள்ளது. இந்தப் பிராமி எழுத்துக்கள் பொறிக் கப்பட்ட பானை ஓடுகளோடு கிடைத்த மற்ற பொருட்களையும் எழுத்தியலையும் (Palaegraphy) அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபொழுது இந்தப் பிராமி எழுத்துக்கள் அனைத் தும் கிறிஸ்து சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றுண்டுகளைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று தெரிகின்றது.

## கட்டட அமைப்புகள் (Structural featurs)

### சாயத்தொட்டி

இரண்டாவது பகுதியில் தோண்டப்பட்ட குழி எண் 4-இல், 7 அடி 10 அங்குல ஆழத்தில் கிடைத்துள்ள செங்கற் களால் கட்டப்பட்டுள்ள சாயத் தொட்டியின் வடிவம்

முதலாவது காலத்தைச் சேர்ந்த (Period I) மிக முக்கிய மான கட்டட அமைப்பாகும்.

இந்தச் சாயத் தொட்டியானது ஒரு சதுர அறையும், நீண்ட சதுர அறையும் எதிரும் புதிருமாக மூலைவாக்கில் அமைக்கப்பட்டுள்ளது. சதுர அமைப்புள்ள அறையின் உட்புற அளவானது 2′—3′ நீண்ட சதுர அமைப்புள்ள அறையின் உட்புற அளவு 14′×19′. இந்த அறைகளின் தளமானது, செங்கற்களால் நன்கு பாவப்பட்டு ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளது. இச் சாயத் தொட்டியைக் கட்டு வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள செங்கல்லின் அளவு 17″ X 9″ X 3″ ஆகும். இது, அரிக்கமேட்டில் அகழ்ந் தெடுக்கப்பட்ட சாயத் தொட்டியைப் பெரிதும் ஒத்திருக் கின்றது. (Ancient India No. 2) ஆகவே மிகப் பழங்காலத் திலிருந்தே தென் இந்தியா முழுவதற்கும் கைத்தறிநெசவுத் தொழிலுக்குப் பெயர் போன நகரமாக உறையூர் திகழ்ந்து வந்திருக்கின்றது என்பது தெரிகின்றது.

### வழிபாட்டுப் பீடங்கள்

வேறொரு குழியில் (Uraiyur I locality I) வினோதமான அமைப்பில் நடப்பட்ட மரக்கம்பங்களின் சுவடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சமய வழிபாட்டுப் பீடங்கள் கட்டு வதற்கு இந்த அமைப்பு பயன்பட்டிருக்கவேண்டும் எனத் தெரிகின்றது.

### இல்லங்கள்

இதே பகுதியில் தோண்டப்பட்ட மற்றொரு குழியில் (குழி 2), தொடர்ந்து பல அடுக்குகளில் (layers) களி மண்ணால் நன்கு அமுக்கப்பட்டு, ஒன்றன் மேல் ஒன்றாக அமைக்கப்பட்ட தளங்களும், செங்கல் துண்டுகள், பருக்கைக் கற்கள், பானை ஓடுகள் ஆகியவற்றால் அமைக்கப் பட்ட கட்டட அடித்தளமும் தென்பட்டன. இவை

அக்காலத்தில் வாழ்ந்த பொதுமக்கள் இல்லங்களின் அமைப்பையும், அவை கட்டுவதற்குப் பயன்பட்ட பொருட்களையும் ஓரளவு தெரிந்து கொள்ள உதவுகின்றன.

## பழைமைச் சிறப்பு (Antiquities)

### முதலாவது காலம் (Period I)

முதலாவது காலத்தில் (Period I), சுடுமண், சங்கு, பலவண்ணக் கற்கள் ஆகியவற்ருல் ஆக்கப்பட்ட மணிகள் மிகுதியாகக் கிடைத்தன. இவற்றில் மாவுக் கல்லால் செய்யப்பட்டு நல்ல வண்ணத்துடன் காட்சியளிக்கின்ற மணியானது மிகவும் குறிப்பிடத் தக்க ஒன்ருகும். நெசவுத் தொழிலுக்குப் பயன்பட்ட அல்லது ஒப்பனைக் கருவிகளாக உபயோகப் படுத்தப்பட்ட எலும்பாலான முனைகளும், ஊசிகளும் பல எண்ணிக்கையில் கண்டு பிடிக்கப்பட்டன.

### இரண்டாவது காலம் (Period II)

சில பகுதிகளில் (locality) இடைக் காலத்து மக்கள் வாழ்ந்ததற்கான சுவடுகள் தென்பட்டுள்ளன. அந்தச் சுவடுகளில் இரண்டாவது காலத்தின் துணைப் பிரிவுகளான காலம் இரண்டு–அ (5–ஆம் நூற்ருண்டிலிருந்து 10–ஆம் நூற்ருண்டு வரை), காலம் இரண்டு–ஆ (10–ஆம் நூற்ருண்டுக்குப் பிற்பட்ட காலம்) ஆகியவற்றை எளிதில் பிரித்துக் காணமுடிகின்றது. இரண்டாவது காலம் அ–வில் நல்ல சிவப்புப் பூச்சுக் கொண்ட பானை ஓடுகளைக் காண முடிகின்றது. ஆனுல் இரண்டாவது காலம் ஆ–வில் பல வகையான உபயோகத்திற்குகந்த சாதாரணமான சிவப்புப் பானை ஓடுகள் (Coarse ware) ஏராளமாகக் கிடைத்துள்ளன. இந்தக் காலத்தைச் சேர்ந்த சில செலிடான் (celeadon) ஓடுகளும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை

ஓடுகள் எதுவும் இந்தக் காலத்தில் காணப்படாதது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

இந்த இரண்டாவது காலத்தில் கண்ணுடி மணிகள், வளையல்கள், பல வண்ணக்கல் மணிகள், சுடுமண்ணுல் செய்யப்பட்ட மனித உருவங்கள், "செஸ்"காய்கள், காதணிகள், வளையல்கள், மோதிரங்கள் போன்ற பல வகையான சிறிய, ஆனுல் பழைய — பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் பல கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

### 'சுவடுகள்' கண்டோம்

உறையூரில் நடைபெற்ற அகழ்வாய்வு, கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்ருண்டுகளையும் அதற்குப் பின்னர் வந்த காலங்களையும் சேர்ந்த பண்பாட்டுச் சுவடுகள் பலவற்றை வெளிப்படுத்தியிருக்கின்றது என்பதை அறிகின்ருேம்.

அந்தப் பண்பாட்டுச் சுவடுகள், குடியிருக்கும் வீடுகளின் இடிபாடுகள், மற்ற கட்டடங்கள், செங்கற்கள், பொது மக்களின் அன்ருட வாழ்வில் அதிக இடத்தை வகித்த எண்ணற்ற மட்பாண்ட வகைகள், உபயோகப் பொருட்கள் (இரும்புக் கத்தி, தூண்டில் இன்னும் பல) சுடுமண் உருவங்கள் போன்றவற்றின் அமைப்பில் பல கிடைத்துள்ளன. இவை, பழந்தமிழ் மக்களின் வாழ்வில் பங்கு கொண்ட எண்ணற்ற பொருட்களைப்பற்றி அறிய நமக்குத் துணை செய்கின்றன.

இந்தப் பொருட்கள் பழைய வரலாற்றுக் காலத்து நகரங்களான புகார், அரிக்கமேடு, காஞ்சி போன்றவற்றில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்களைப்

பெரிதும் ஒத்திருக்கின்றன. உறையூரில் கிடைத்துள்ள —தமிழ் மொழியைத் தாங்கியுள்ள பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள – பானை ஓடுகள் தனி முக்கியத்தும் வாய்ந்தனவாக உள்ளன.

இது தொடர்பான விவரங்களை அறிய துணையாவது இது:

Indian Archaeology, A Review 1964-65, 1965-66, 1967-68.

# 4

# கேரளத்தில் அகழ்வாய்வுகள்

## அகழ்வாய்வில் ஆர்வம்

தென்னிந்தியாவிலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களிலெல்லாம் ஆய்வுகள் நடத்துகின்ற பணியானது அண்மைக்கால ஆண்டுகளில்தான் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஒரு நூற்றுண்டுக்கு முன்பு துவக்கப்பட்ட இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையானது, பழம் பெரும் சின்னங்களைப் பாதுகாப்பதையே தன்னுடைய நீண்டநாளையப் பணியாகக் கொண்டிருந்தது. சர். ஜான் மார்ஷல் போன்ற ஆற்றல் மிக்க அறிஞர்கள் அகழ்வாராய்ச்சிகள் செய்வதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்திஞர்கள். அவருடைய தலைமையில்தான், மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற உயர்ந்த நாகரிகச் சிறப்புமிக்க நகரங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

## சர். மார்டிமர் வீலர்

சர். மார்டிமர் வீலர் அவர்கள் தொல்லியல் தலைமை இயக்குனராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான், அகழ்

வாய்வுப் பணிகளில் புதிய ஆர்வமும் அக்கறையும் வேகமும் காட்டப்பட்டது. ஒழுங்கான நெறிமுறைகளைக் கொண்ட மேல்மட்டக் கள ஆய்வுகளையும், மண் அடுக்கியல் பகுப்பாய்வுகளை (Stratigraphy) யும் அடிப்படையாகக் கொண்ட அகழ்வாய்வு நெறிமுறைகளையும் திரு. வீலர்தான் முதன் முதலாக அறிமுகப்படுத்தினார். அவருடைய மேற் பார்வையின்கீழ் மேல்மட்டக் கள ஆய்விற்கும், அகழ் வாய்விற்கும் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

## திரு. வி. டி. கிருஷ்ணசாமி

இந்தப் பிரிவு சென்னையிலுள்ள தென் மண்டலத் தொல்லியல் பரப்பாய்வுத்துறையுடன் இணைந்து செயல் பட்டது. கற்கால வரலாற்றுக் கால ஆய்வுகளில் முதன்மையான முன்னோடியாகத் திகழ்ந்த திரு. வி. டி. கிருஷ்ணசாமி அவர்கள், அந்தப் பிரிவிற்குத் தலைவ ராக்கப்பட்டார். அவர் திரு. வீலரிடம் முன்னமேயே நன்கு பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். பிறகு தென்னிந்தியத் தொல்லியல், மிகவும் புதிர் வாய்ந்த தாகக் கருதப்பட்ட, தென்னகம் முழுவதும் பரவலாகக் காணப்படுகின்ற பெருங்கல் சின்னங்களைப் பற்றிய (megalithic monuments) ஆய்வுகள் நடத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தப் பெருங்கல் சின்னங்களின் உண்மையான பண் பாட்டுக் கூறுகளும், அவற்றின் காலமும், தென்னிந்தியா வைப் பற்றிய கால ஆராய்ச்சிக்கான புதிய அளவுகளைக் காட்டுகின்ற காலக் கண்ணாடிகளாகத் திகழும் என்று எதிர் பார்க்கப்பட்டது. அதனால் திரு. கிருஷ்ணசாமி அவர்கள், பல்வேறுபட்ட இச்சின்னங்களைப் பற்றிய அறிவியல் பகுப் பாய்வு செய்கின்ற பணியில் முதன் முறையாக ஈடுபட்டார். இது தொடர்பாக அவர் கேரளா முழுவதும் கள ஆய்வு மேற் கொண்டு எண்ணற்ற பெருங்கல் சின்னங்களின் இருப்பிடங் களைக் கண்டுபிடித்தார். இத்துறையில் இங்கு அவர் ஆற்றிய

பணி எல்லோரும் நன்கறிந்த ஒன்ருகும். கொச்சின் தொல்லியல் துறையினர் வெளியிட்டுள்ள பழைய அறிக்கைகளில் திரு. வி. டி. கிருஷ்ணசாமி அவர்கள் ஆற்றிய பணிகளைப் பற்றிய விவரங்கள் ஏராளமாக உள்ளன. பெருங்கல் சின்னங்களைப் பற்றிய இவருடைய அறிவாற்றல் மிக்க கட்டுரைகள் பல, தென்மண்டலத் தொல்லியல் பரப்புத்துறையின் அறிக்கையான 'பண்டைய இந்தியா'வில் (Ancient India) வெளிவந்துள்ளன.

இவருடைய அயராத ஆராய்ச்சிப் பணிக்கு, ஆர்வமிக்க இளம் தொல்லியலாய்வாளர்களான Y. D. சர்மா, N. R. பானர்ஜி, B. K. தாபர், K. V. சௌந்தரராஜன் போன்றவர்கள் உறுதுணையாக இருந்தார்கள். இந்த இளம் ஆய்வாளர்களும் தங்களுடைய தனி முத்திரைகளைத் தொல்லியில் கள ஆய்விலும், அகழ்வாய்விலும் பதித்துக் காட்டியுள்ளார்கள்.

## 'போர்க்களத்'தில் புதை குழிகள்

மேல்மட்ட ஆய்வுகளைத் தொடர்ந்து, இந்தப் பெருங்கல் சின்னங்களின் உட்கூறுகளையும் அவற்றின் காலத்தையும் அறிந்து கொள்ளும் பொருட்டு விரிவான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. திருச்சூர் மாவட்டத்திலுள்ள போர்க்களம் என்னும் இடத்திலுள் தாழிப் புதை குழிகள்தான் (Umbunas) முதன் முதலில் தொல்லியல் அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தது. இது, திரு B. K. தாபர், K. V. சௌந்தரராஜன் ஆகியோரால் 1948-ஆம் ஆண்டு விரிவாக அகழ்ந்தெடுக்கப்பட்டு, அதைப் பற்றிய முழுமையான அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

கேரளாவில் காணப்படுகின்ற மற்ருெரு முக்கியமான பெருங்கல் சின்னம், பாறையைக் குடைந்து செய்யப்பட்ட குகைகளாகும். இவைகளை டாக்டர் Y. D.

சர்மா அவர்கள் விரிவாக ஆராய்ந்து, முழுமையான ஆய்வுக் கட்டுரை ஒன்றும் எழுதியுள்ளார். (Ancient India No 12). இதற்கு நீண்ட காலத்திற்குப் பிறகு (1959-இல்) தமிழ் நாட்டிலுள்ள, சானூர், அமிர்தமங்கலம், குன்றத்தூர் போன்ற இடங்களிலிருந்த பெருங்கல் சின்னங்கள் பல அகழ்ந்தெடுக்கப்பட்டன.[2] இதிலிருந்து பிரச்னைக்குரிய இந்தப் பெருங்கல் சின்னங்கள் தொல்லிய லறிஞர்களின் கவனத்தைத் தங்கள் பக்கம் ஈர்த்துக் கொண்டன.

## இரும்புக் காலப் பண்பாடு

இதன் விளைவாக தென்னிந்தியப் பெருங்கல் சின்னங் களின்மேல் கப்பியிருந்த இருள் நீங்கிக் கதிரவன் தெரிய ஆரம்பித்தான். இந்த அகழ்வாய்வுகளின் மூலம், தென்னிந்திய பழைய வரலாற்றுக்காலத்தில் (Protohistoric) ஹைதராபாத், தக்காணம், கொச்சி, திருவனந்தபுரம் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய விரிவான பரப்பில், நன்கு முழுமை பெற்ற, இரும்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு பண்பாடு செழித்தோங்கியிருந்திருக் கின்றது என்பதை நாம் நன்கு அறிகின்றோம். தென்னிந்தி யாவில் இந்த இரும்புக் காலப் பண்பாடு நிகழ்ந்தது கி. மு. 500க்கும் கி. பி. 100க்கும் இடைப்பட்ட காலங் களிலாகும்.[3]

இக்காலத்து மக்கள், இறந்தவர்களை அடக்கம் செய்வ தற்கு ஒழுங்காக நெறிப்படுத்தப்பட்ட பழக்கத்தையும், தனிச் சிறப்புப் பெற்ற கருப்பு சிவப்பு மட்பாண்டங்களையும் பயன் படுத்தி வந்திருக்கின்றார்கள். இந்தக் கருப்பு சிவப்புப் பானை ஓடுகள், தொல்லியல் ஆய்வாளர்களுக்கு மிகவும் நன்கு தெரிந்த மட்பாண்ட வகையாகும். இம்மட்பாண்டங்களைக் களிமண் கொண்டு ஆக்கிச் சூளையில் இட்டுச் சுடும் பொழுது, அவற்றைத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்துச்

சுடுவதால், காற்றுப்புகாத உட்பகுதியும் விளிம்புப் பகுதியும் கருநிறமாகவும், காற்றுப்படுகின்ற வெளிப்பகுதி சிவப்பு நிறமாகவும் ஆகிவிடுகின்றன.

## வரலாற்றின் வைகறை

இந்தப் பண்பாடு நிகழ்ந்தது புதிய கற்காலத்திற்குப் (Neolithic—chalcolithic age) பின்னும் வரலாற்றுக் காலத்தின் வைகறைப் பொழுதிலுமாகும். ஏனென்றால் பெருங்கல் பண்பாடானது, படிப்பறிவற்ற ஆனால் நாகரிகம் பெற்ற மனிதர்களால் வளர்க்கப் பட்டதாகும். இங்கே கிடைத்துள்ள பானை ஓடுகளில் சூரியன், ஏணி, இலை, மீன் போன்ற இன்னும் பல குறிகள்தான் உள்ளன. மாறாக எந்தவிதமான எழுத்துக்களோ, வார்த்தைகளோ கிடையாது. இவை சில குழுக்களின் அடையாளக் குறிகளாக இருந்திருக்கலாம் எனத் தெரிகின்றது. இக்குறிகள் புதிய கற்காலம் தொடர்ந்தே பானைகளில் பொறிக்கப்பட்டு வந்துள்ளன. பானை ஓட்டுக் குறிகள் பற்றிய முழுமையான ஆய்வுக்கட்டுரை ஒன்று தொல்லியல் அறிஞர் திரு. B. B. லால் அவர்களால் அண்மையில் எழுதப்பட்டுள்ளது.

அடுத்து எழுத்துக்களையும், இலக்கியங்களையும் கொண்ட வரலாற்றுக் காலத்து ஞாயிறு எழுகின்ற கீழ்த்திசை நம் கண்ணுக்குத் தெரிகின்றது. வரலாற்றுக் காலத்தின் தொடக்கம், கிறிஸ்து சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகள் அல்லது அதற்கு இரண்டு நூற்றாண்டுகள் முந்திய காலத்தைச் சேர்ந்த சங்க காலம் ஆகும்.

## 'தமிழி'.

தென்னிந்தியாவில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப்பழமையான எழுத்து 'தமிழி' எழுத்து ஆகும். இது கி.மு. மூன்றும்

நூற்றுண்டில் மாமன்னன் அசோகன், தனது கல்வெட்டுக்களில் பயன்படுத்திய பிராமி எழுத்துக்களின் மாற்றுருவாகும். தமிழி எழுத்தாலான தமிழ்க்கல்வெட்டுகள், தமிழகத்தின் இதயப் பகுதிகளான மதுரை, திருச்சி போன்ற பகுதிகளில் உள்ள சமணக் குகைகளில் காணப்படுகின்றன. அரிக்கமேடு, உறையூர், கொற்கை, காஞ்சி போன்ற இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கி.மு. முதல் நூற்றுண்டைச் சேர்ந்த பானை ஓடுகளிலும் இந்தத் தமிழி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இதற்கு மேல் வரலாற்றுக் காலத்தின் வளர்ச்சியைப் பற்றி இங்கே விரிப்பது அவ்வளவு பொருத்தமாக அமையாது.

## காலக் கண்ணுடி

கிறிஸ்து சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றுண்டுகளில் வாழ்ந்த தமிழகத்து முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் மற்றும் பல குறுநில மன்னர்களின் ஆதரவில் எண்ணற்ற இலக்கியங்கள் எழுந்தன. அவை சங்க இலக்கியங்கள் என்று பெயர் பெறும். அக்காலத்து அரசர்கள், செல்வர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், மக்கள் வாழ்க்கைமுறை போன்ற இன்ன பிறவற்றையெல்லாம் தெளிவாகக் காட்டுகின்ற காலக்கண்ணுடிகளாக இந்த இலக்கியங்கள் திகழ்கின்றன.

## முதல் களம்-கேரளம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்வது அண்மைக்கால ஆண்டுகளில்தான் முக்கியத்துவம் பெற்றுள்ளது. முதன் முதலாக அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட இடம் என்ற பெருமையை இன்றைய கேரளம் அல்லது அன்றைய கொச்சி மாநிலம் பெறுகின்றது. அரிக்கமேட்டில் வீலர் அவர்கள் அகழ்வாராய்ச்சி நடத்தியதையடுத்து 1945—46-ஆம்

ஆண்டில் திரு. அனுஜன் அச்சன் அவர்கள் கேரளாவி லுள்ள சேரமான் பறம்பில் நடத்திய அகழ்வாய்வை நான் இங்கே கோடிட்டுக் காட்டுகின்றேன்.

## தமிழகத்தில் அகழ்வாய்வு

தமிழ் நாட்டிலுள்ள, பழம் பெருமைக்குரிய நகரங்களில் 1950-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டன. 1953—ஆம் ஆண்டில் சங்கமேட்டிலும், 1954—இல் காஞ்சியிலுள்ள பல்லவ மேட்டிலும், 1962—இல் காவிரிப்பூம்பட்டினத்திலும் அகழ்வாராய்ச்சிகள் செய்யப் பட்டன. ஆகவே புராதன காலத்தைச் சேர்ந்த பெருங்கல் சின்னங்களைப் பற்றி மட்டுமல்லாமல், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களைப் பற்றியும் முதற் கவனம் செலுத்தப்பட்ட மாநிலமாகக் கேரளம் இருந்தது.

## 1945-46 அகழ்வாய்வுகள்

இப்பொழுது கொடுங்கல்லூர் (Cranganore) நகரில் திரு. அனுஜான் அச்சன் அவர்கள் நிகழ்த்திய அகழ் வாய்வைப் பார்ப்போம். கொடுங்கல்லூர் என்பது மகோதய புரம் அல்லது மாகோதைபுரம் என்னும் பழைய நகரமாகும். இது பிற்காலச் சேர அரசர்களின் தலைநகராக விளங்கியது. இதுவே பழைய வஞ்சியா என்பதுதான் பிரச்னை. இவர் பல இடங்களில் விரிவான முறையில் அகழ்வாய்வுகள் செய்து, அதன் முடிவுகளைத் தம்முடைய 1947—ஆம் ஆண்டு அறிக்கையில் வெளியிட்டுள்ளார். சேரமான் பறம்பில் ஐந்து குழியும், கிறித்தவ ஆலயத்து மைதானத்தில் இரண்டு குழியும், திருவஞ்சிக்களக் கோயிலின் மேற்குவாசல் வெளிப் புறத்தில் . ஒரு குழியும் தோண்டினார். அகழ்வாய்வுகளைப் பற்றி அவர் பின்வருமாறு கூறுகின்றார்:

..."கிறித்தவக் கோவில் மைதானத்திலும், கோவில் வாயிலுக்கருகிலும் தோண்டிய குழிகளில் முக்கியமான

பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் சேரமான் பறம்பில் ஏராளமான பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டன!'

இந்த இடத்தில் கிடைத்த பொருள்களைப் பற்றி மட்டும்தான் அவருடைய அறிக்கையில் விவரித்துள்ளார். இந்தப் பொட்ருகளுக்கு அவரால் கணிக்க முடிந்த மிகப் பழைமையான காலம், வைப்புச் சகாப்தத்திற்குப் பிற்பட்ட அல்லது கி. பி. 1341–இல் நிகழ்ந்த பெரியாற்று வெள்ளத்திற்குப் பிற்பட்ட 14–ஆம் நூற்றுண்டாகும். (An. Rp. 1947—P 2–3). அவருடைய விளக்கங்களிலும் முடிவு களிலும் சில குறைபாடுகள் இருந்த போதிலும், அவர் பயன்படுத்திய அகழ்வாய்வு நெறிமுறைகளும், கண் டெடுத்த பொருட்களைப் பதிவு செய்யும் முறையும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

## மண்படிவப் பாகுபாட்டு முறை

*மண்படிவப் பாகுபாட்டு முறைகளைக்* (அடுக்கியல் Stratigraphy) கொண்ட அகழ்வாராய்ச்சியை அவர் மேற்கொண்டுள்ளார். பின்னால் வருகின்ற ஆய்வாளர்கள் பின்பற்றும்படியாகவும், தேவைப்பட்டால் வளர்ந்து வரும் அறிவியல் சாதனங்களின் மூலமாக அவைகளை மாற்றி யமைத்துக் கொள்ளும்படியாகவும் அவருடைய ஆய்வு முறைகள் அமைந்துள்ளன.

அவருக்குப் பல தடைகள் இருந்திருக்கின்றன. பழைய, தென்னிந்தியப் பானை ஓடுகளைப் பற்றிய அறிவு வளர்ச்சியடையாத காலத்தில் அவர் இருந்தார். 'வைப்பு வெள்ளமானது ஒரு நீண்ட புரட்சியுகமாக இருக்கலாம்' என்ற எண்ணம் அவர் மனதில் நிறைந் திருந்தது. அந்த யுகம் 14–ஆம் நூற்றுண்டுப் படிவுகள் (deposits) முழுவதையும் தழுவியிருக்கும் என்று அவர்

தினைத்தார். இந்த அனுமானமானது அடுத்துப் பல இடங்களில் அவர் கண்டெடுத்த ஆதாரங்களின் மதிப்பீடுகளையும் குலைத்தது. கண்டுபிடித்த எல்லாப் பழம் பொருட்களையும் 14-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னே வந்த படிவுகளுடன் சேர்க்க வேண்டிய கட்டாயத்திற்கானார். மனித வாழ்விற்கான எச்சங்கள் (Habitational nemains) குறைவாகவும், அதிகமான மணலும் இருந்ததால் அவையெல்லாம் வெள்ளக் காலத்தைச் சேர்ந்தவை என்று கணிக்கலானார்.

## மாதிரி அகழ்வாய்வுகள் (1969-70)

என்னென்ன பண்பாட்டுக் கூறுகள் இருக்கின்றன என்பதைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வதற்காக 1969—ஆம் ஆண்டில், சேரமான் பறம்பில் செங்குத்தான குழி ஒன்று எனது மேற்பார்வையில் அகழப்பட்டது.

முன்பு நடந்த அகழ்வாய்வுகளில் ஏற்பட்ட ஐயப்பாட்டை அகற்றிக் கொள்வதற்கு இந்த மாதிரிக் குழிகள் பெரிதும் பயன்பட்டன.வைப்புச் சகாப்தத்திற்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த ஆதாரங்களை இந்த அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தின. சிவப்பு நிறம் பூசப்பட்ட பானை ஓடுகளும் சீனத்து செலிடான் (celadan) வகை ஓடுகளும், கி. பி. 10—ஆம் நூற்றாண்டுக்கான அறிகுறியைத் தந்தது.

சிவப்புப் பூச்சுள்ள மட்பாண்டங்கள் உள்நாட்டு மக்களால் உண்டாக்கி உபயோகப் படுத்தப்பட்டவையாகும். செலிடான் மட்பாண்டங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனவாகும். கி. பி. 960—ஆம் ஆண்டிற்கும் 1368—ஆம் ஆண்டிற்கும் இடையில் சங் (Sung) வம்சத்தினரும், யூஆன் வம்சத்தினரும் சீனாவில் ஆட்சி செய்து கொண்டிருந்த பொழுது, செலிடான் மட்பாண்டங்கள், ஆசியாக் கண்டத்தின் பல பாகங்களில்

இறக்குமதி செய்யப்பட்டன. அக்காலத்தில் செலிடான் மட்பாண்டங்கள், லுங் பகுதியிலும் பிறகு சுச்சௌ பகுதியிலும் அதிகமாக வனையப்பட்டன. வரலாற்றுக் குறிப்புக்கள் தொல்லியல் ஆதாரங்களால் உறுதி செய்யப் படுகின்றன. இந்தியா, ஈழம், பாரசீகம் போன்ற நாடு களுக்குச் செலிடான் பாண்டங்கள் ஏற்றுமதி செய்யப் பட்டதை அல்புருனி (Alberuni 973-1048) குறிப் பிட்டுள்ளார்.

### தொன்மை உணர்த்தும் சிதைவுகள்

சு-சௌ (chu-chow)விலிருந்து சுமத்ரா, பர்மா, கொல்லம், காம்பே போன்ற இடங்களுக்கு செலிடான் பாண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதை மார்க்கோ போலோ (கி.பி. 1288) குறிப்பிட்டுள்ளார். தென்னிந்தி யாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், காயல் போன்ற இடங்களில் இந்த வகையான மட்பாண்டத் துண்டுகள் கிடைத் துள்ளன. கி.பி. 10, 11—ஆம் நூற்றாண்டுகளுக்கான காலங் களைக் கணிப்பதற்கு இது ஒரு முக்கியமான, ஐயத்திற் கிடமில்லாத ஆதாரமாகும். இதே மட்பாண்டத் துண்டுகள், சேரமான் பறம்பு, திருக்குலசேகர புரம், பாலகங்கேசுவரம், மதிலகம் போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. இது இரண்டாம் சேரப் பேரரசு நிகழ்ந்த காலத்தைக் கணிப்பதற்குப் பெரிதும் உதவு கின்றன. மதிலகம் அகழ்வாய்வில் கிடைத்த 11—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் நாணயங்கள் இதை மேலும் உறுதி செய்கின்றன.

### ஆய்வுக்குரிய களம்

அகழ்வாய்விற்கான இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், அகழ்வாய்வு செய்வதற்கும் நாங்கள் மேற்கொண்ட நெறி முறைகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அல்லது மண்மேட்டுக் காட்சியளிக்கின்ற நகரங்கள், பல்வேறுபட்ட கால கட்டங்களில் நிகழ்ந்த பண்பாட்டுக் கூறுகளுக்கான மண் அடுக்குகளைக் கொண்டுள்ளன. அந்த இடத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருட்கள், வாழ்ந்த வாழ்க்கை முறைகள், செய்த தொழில்கள் போன்ற இன்னபிற சாதனங்களின் மூலமாக அந்த இடங்கள் பல்வேறுபட்ட உயரங்களைக் கொண்ட மண் மேடுகளாகக் காட்சியளிக்கின்றன.

வட இந்தியாவில் உள்ள பழைய மண் மேடுகள் எல்லாம் 40 முதல் 60 அடிவரை உயரம் உள்ளவையாக இருக்கின்றன. உதாரணத்திற்கு ரூபர், ஹஸ்திநாபுரம், உஜ்ஜயினி, தரணிக்கோட்டை (அமராவதி) போன்ற இடங்களைச் சொல்லலாம்.

தென்னிந்தியாவில் எங்கும் இப்படிப்பட்ட உயர்ந்த மண் மேடுகளைக் காண முடியவில்லை. இங்கு, பழைய இடங்களிலுள்ள மொத்த மண் அடுக்குகளின் ஆழம் 10லிருந்து 15 அடி வரையில்தான் உள்ளது. அதுவும் இன்றைய மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதனால் சுற்றுப்புறப் பகுதிகளிலிருந்து அவற்றை எளிதில் பிரித்தறிவது கடினமாக உள்ளது. ஆக அகழ்வாய்விற்கான இடங்களைக் கண்டுபிடிப்பதிலும் எண்ணற்ற இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. பள்ளம் படுகுழிகள் கட்டடம் கட்டுவதற்குத் தோண்டப்படும் குறிகள் — இவற்றையெல்லாம் நுண்மையாகப் பார்த்துத்தான் அகழ்வாய்வு செய்வதற்கான இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

### தேவை, ஆமை வேகம்!

இடத்தைக் கண்டுபிடித்து அகழ்வாய்வு செய்வதற்கான பகுதியை முறையாகக் குறித்த பிறகு, அங்கே படிந்துள்ள மண் அடுக்குகளை ஒவ்வொன்றாக அகழ்ந்து எடுக்கவேண்டும்.

மிகவும் பழமையான இடமாக இருந்தால், பல தலை முறைகளைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களைக் கொண்ட மண் அடுக்குகள் இருக்கும். அந்த இடங்களைப் படிப்படியாக அகழ்ந்து ஒவ்வொரு தலை முறையினரும் விட்டுச் சென்ற பொருள்களைக் கண்டு பிடித்துப் பதிவு செய்யவேண்டும். இந்த ஆய்வுகள் மெதுவாகவும் படிப்படியாகவும் செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் சிதைந்த நிலையிலுள்ள பழம் பொருட்களைப் பத்திரமாகப் பகுத்துப் பதிவு செய்து பாதுகாக்க முடியும்.

## அகழ்தல் - வீலர் கூற்று

"அகழ்தல் என்பதற்கு மண்ணை அகற்றும் பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்தித் தோண்டுதல் என்று பொதுவாகக் கொள்கின்ற பொருள், தொல்லியல் அகழ்வாய்வு என்பதற்கு எதிரானதாகும். ஒரு நல்ல புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் கவனமாக ஆய்ந்து படித்துப் புரட்டுவதைப் போல், அகழ்வாய்வின் போதும் ஒவ்வொரு தலைமுறையின் மண் அடுக்கையும் பகுத்து ஆயவேண்டும்" என்று அகழ்வாராய்ச்சி நிபுணர் திரு. வீலர் குறிப்பிட்டுள்ளார். அடிமட்டப் படிவுகள் பழமையானவை என்றும், மேல்மட்டப் படிவுகள் பிற்பட்டவை என்றும் மண்ணியல் ஆய்வாளர்கள் மேற்கொள்கின்ற அதே படிவ அமைப்பியல்தான் தொல்லியல் அகழ்வாய்விற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

## காஞ்சி அகழ்வாய்வு

காஞ்சியில் நடந்த அகழ்வாய்வு பல்வேறுபட்ட பண்பாட்டுக்கூறுகளைக் கொண்ட மண் அடுக்குகளை வெளிபடுத்தியுள்ளதை இவ்வாறு அகழ்வாய்வுக்கு உதாரணமாகக் கூறலாம். இங்கு அடிமட்டத்திலுள்ள இயற்கைப் பாறையின் மேல் (Bed-rock) படிந்துள்ள அடுக்குகள் கருப்பு சிவப்புப் பானை ஓட்டைப் பயன்படுத்திய மக்களைப்பற்றியும், அதற்கு மேல் உள்ள அடுக்குகள் பழைய வரலாற்றுக் காலை

டுக்களைப்பற்றியும், அதற்கும் மேலே உள்ள அடுக்குகள் பல்லவ, சோழர் காலத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரக் கூறுகளையும் பெற்றிருந்தன. ஆகவே செங்குத்தாக இயற்கை மண் வரை (Natural soil) வெட்டப்படுகின்ற குழியின் சுவர்ப்பகுதி (Section) அந்த இடத்திற்கான பண்பாட்டுக் கூறுகளைப் பொதுவாக வெளிப்படுத்திக் காட்டிவிடும்.

## 'கன்னி மண்'

'கன்னி மண்' என்பது ஓர் இடத்தில் மனித வாழ்வின் ஆரம்ப அளவைக் குறிப்பதாகும். ஒரு பகுதியில் முதன் முதலில் வந்து தங்கி வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருள் எச்சங்களைக் கன்னி மண்ணுக்கு மேலே காணலாம். அதற்குப் பிறகு வந்த மக்களின் பொருள் எச்சங்கள் அதற்கும் மேலே உள்ள மண் அடுக்குகளில் அமைந்திருக்கும். நாம் எப்படி ஓர் இடத்தின் வரலாற்றை வகைப்படுத்த வேண்டும் என்பதை இது தெளிவாக்குகின்றது.

## கேரளத்தின் நிலை

பொதுவாகக் கேரளத்திலும் பழைய (Archaeological mounds) மண்மேடுகளைக் காண்பது அரிதாகவுள்ளது. இதற்குக் காரணம், தென்னை பயிரிடுவதற்காக, விரிவான பகுதிகள் எல்லாம் தரை மட்டமாக்கப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்டதுதான். இதை, திருவஞ்சிக்களத்திலிருந்து மதிலகம் வரையுள்ள சாலை ஓரப் பகுதிகளில் மிக நன்றாகக் காணலாம். இங்கே தென்னை நடுவதற்காக முன்னமேயே அடிமணல் வரையுள்ள மண்ணைத் தோண்டி எடுத்துள்ளார்கள். அதனால், இன்று இந்தப் பகுதியிலுள்ள வீடுகள் கூட சாலை மட்டத்தைவிடப் பல அடிகள் தாழ்வான பகுதியில் அமைந்துள்ளன. உதாரணமாக, பாலகணேசுவரர் ஆலயத்துக்குச் செல்லுகின்ற ஒருவர், சாலை மட்டத்திலிருந்து 20 முதல் 25 அடிவரை கீழே இறங்கிச் செல்ல

வேண்டும். முன்னால் இந்தப் பகுதி சாலைமட்ட அளவு உயரமாக இருந்தது. பழைய மண் மேடுகள் எல்லாம் காண முடியாத அளவிற்கு மேடுபள்ளங்கள் எல்லாம் சமநிலைப் படுத்தப்பட்ட நிலையில், பழுதற்ற பழைய இடத்தைத் தேர்ந்தெடுப்பது ஒரு கடினமான வேலையாகும்.

### கோவில்களே துணை

இந்த இடர்ப்பாடுகளிலிருந்து விடுபடுவதற்காக, வரலாறுகளை ஓரளவு உணர்த்தக்கூடிய கோவில்கள் இருக்கின்ற பகுதிகளுக்குச் சென்றோம். ஒரு காலத்தில் மக்களின் சமய, சமுதாய வாழ்வின் அச்சாணியாகத் திகழ்ந்த திருக் குல சேகரம், திருவஞ்சிக்களம் கோவில், கீழ்த்தளி பாலகங்கனே சுவரம் போன்ற கோவில்களின் மூலமாகப் பழைமையான அறிகுறிகள் தென்பட்டன. இவற்றில் பல, இரண்டாம் சேரப் பேரரசுக் காலத்தைச் சேர்ந்தவையாகும். ஆகவே, இந்த இடங்களின் துணை கொண்டு இரண்டாம் பேரரசுக் கால கட்டத்துப் படிவுகளையும் (Deposits) அதற்கு முந்திய சில வற்றையும் காண முடிந்தது. இப்பொழுது நாங்கள் ஒருவாறுக எங்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களிலிருந்து தெளிவு கண்டோம்.

### சேரமான் பறம்பு

இங்கே மூன்று மீட்டர் நீளம், இரண்டு மீட்டர் அகலத்தில், இயற்கை மண்மட்டம் வரை ஒரு குழி தோண்டப் பட்டது. இந்தக் குழியின் ஆழம் இரண்டு மீட்டருக்கு மேல் இல்லை. பிற்காலத்தைச் சேர்ந்த மங்கலான சிவப்புப் பானை ஓடுகள் மேலே உள்ள அடுக்குகளில் (Layen) அதிக மாகவும், கீழே உள்ள அடுக்குகளில் குறைவாகவும் கிடைத் துள்ளன. கீழ் அடுக்குகளிலும், மத்தியில் உள்ள அடுக்கு களிலும், பச்சையும் நீல நிறமும் கொண்ட சீனத்து செலி டான் மட்பாண்ட ஓடுகள் கிடைத்துள்ளன. வீட்டின்

கூரைக்குப் பயன்படுத்துகின்ற நீண்ட சதுர வடிவுள்ள ஓடுகள் எல்லா அடுக்குகளிலும் கிடைத்துள்ளன. இவற்றைக்கொண்டு, மிகவும் கீழே உள்ள அடுக்குகளை 8, 9-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்று கணிக்கலாம். அதற்கும் முந்தைய ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

## திருக்குலசேகரபுரம்

இங்கு மூன்று குழிகள் அகழப்பட்டன. கோவில் சுவருக்குள் இரண்டும், வடக்குப் பக்கமாக உள்ள வெளிப் புறத்தில் ஒன்றுமாகும். இது பழைமையான கோவிலாகும். இரண்டாம் சேரப் பேரரசுக் காலத்தைச் சேர்ந்த, வைணவ சமயத்தில் அதிகமான ஈடுபாடு கொண்ட, குலசேகரன் என்னும் மன்னன் (குலசேகர ஆழ்வார்) இந்தக் கோவி லுடன் அதிகமான தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரி கின்றது. இந்தக் கோவிலில் சில தமிழ்க் கல்வெட்டுகளும் உள்ளன.

அவற்றில் ஒன்று, 'இந்தக் கோவிலின் அடிக்கல் 195 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது' என்று கூறு கின்றது. இந்தக் கல்வெட்டு 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கணிக்கலாம். இதிலிருந்து, இந்தக் கோவிலின் அடிக்கல் நாட்டப்பட்டது கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் என்பது தெளிவாகின்றது. இது, சேர மன்ன ரான குலசேகரனுடைய காலத்தை ஒத்திருக்கின்றது. கோவில் அஸ்திவாரம் தோண்டுவதற்கு முன்னால் அந்தப் பகுதியில் இருந்த மண் அடுக்குகளைத் தெரிந்து கொள்வ தற்குக் கோவிலும், அது கட்டப்பட்ட காலமும் ஓரளவு துணை செய்யலாம்.

இந்த எண்ணத்துடன் கோவில் சுவருக்கு எதிரிலேயே ஒரு குழியை அகழ்ந்தோம். ஆனால், கோவில் அஸ்திவார மட்டத்திற்குக் கீழுள்ள மண் அடுக்குகள் எல்லாம் வெறும்

இயற்கை மணல் துகள்களாகத்தான் (Sterile soil) இருந்தது. அஸ்திவாரத்தோடு கூடிய மண்படிவுகளில் மங்கலான சிவப்பு ஓடுகளும், இடைக் காலத்தின் முற்பகுதியைச் சேர்ந்த நல்ல சிவப்பு நிறப் பானை ஓடுகளும் கிடைத்தன. இவையல்லாமல் வீடுகளின் கூரைக்குப் பயன்படுத்துகின்ற மேடுபள்ளங்களற்ற ஒழுங்கான நீண்ட சதுர வடிவைக் கொண்ட ஓடு (Tile) ஒன்றும் கிடைத்தது. வெளிப்புறமாகத் தோண்டிய குழியிலும் இதே மாதிரியான பொருள்கள்தான் வெளிப்பட்டன. அதிலும் 4 அடி ஆழத்தில் இயற்கைப் பூமி (Natural soil) வந்து விட்டது. முண்டுக் கற்களால் கட்டப்பட்டு உடைந்த பெரிய சுவர் அமைப்புகள்தான் இங்கே கண்டுபிடிக்கப்பட்டவைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றில் ஒன்று, 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். இங்கேகூட சிவப்புநிறப் பானை ஓடுகளும், சீனத்துச் செலிடான் மட்பாண்டத்துண்டுகளும்தான் முக்கியமான கண்டுபிடிப்புகள்.

## திருவஞ்சிக்களம்

திருவஞ்சிக்களம் கோவிலுக்குத் தெற்கில், சேரமான் பறம்பிற்குச் செல்லும் சாலை ஓரத்தில் ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இங்கேதான் பழைய பாலகணேசுவரம் கோவில் இருக்கின்றது. இக்கோவிலைப்பற்றி 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வடமொழி இலக்கியம் ஒன்றில் குறிப்பு இருப்பதால், இது மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த ஆதாரமாகக் கருதப்படுகின்றது. ஆனால் இங்கு தென்னை பயிரிடுவதற்காக மணல் மட்டம் வரையுள்ள, கல்மண் எல்லாம் அகற்றப்பட்டிருக்கின்றன. கோவில் இருக்கின்ற நிலப்பகுதி மட்டும் பழைய நிலையிலேயே இருக்கின்றது. இங்கே நடந்த அகழ்வாய்வு கலவையான (mixed) பல ஆதாரங்களை வெளிப்படுத்தியது. அவை மிகவும் பழைமையானவை (10 அல்லது 9-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக) இல்லை.

## மதிலகம்

கொடுங்கல்லூர் நகருக்குத் தெற்கில் பல இடங்களி லும், வடக்கில் பழைமையானவை என்று கருதப்பட்ட சில இடங்களிலும் அகழ்வாய்வுகள் செய்யப்பட்டன. அவை களில் மிகவும் தலைசிறந்த இடம் மதிலகமாகும். இந்த மதி லகத்தில் நடந்த அகழ்வாய்வு வெளிப்படுத்திய ஆதாரங்கள் சரியாகக் கணிக்கக்கூடியவையாக உள்ளன. இவற்றுள் மற்ற இடங்களில் கிடைத்த ஆதாரங்களைப் பற்றி நாங்கள் கொண்டிருந்த கருத்தை உறுதி செய்தன. இந்த இடத்தி லுள்ள மொத்த மண் அடுக்குகளின் ஆழம் 5 அடியிலிருந்து 6 அடிக்கு மேல் இல்லை.

ஒரு பழைய குடியிருப்பும், கோவில் ஒன்றும் இருந்த தாகச் சொல்லப்படுகின்ற வேறொரு உயரமான இடத்திலும் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்கு 10, 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, சரளைக் கல்லாலான (laterite) சுவர் பகுதி, இடிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. அடிப் படிவில் ஒன்றும், நடுப்படிவுகளில் ஒன்றுமான, முதலாம் ராசராசன் அல்லது அவனுடைய மகன் முதலாம் ராசேந்திர னுடைய காலத்தைச் சேர்ந்த (11-ஆம் நூற்றாண்டு) இரண்டு செப்புக்காசுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த இரண்டு அரசர்களும், சேர நாட்டில் ஊடுருவிச் சென்றதாகவும், மகோதயபுரத்தைத் (கொடுங்கல்லூர்) தங்கள் பேரரசின் ஒரு பகுதியாகக் கொண்டு அரசோச்சி வந்ததாகவும் கல் வெட்டுகளும், இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.

இந்தச் சூழலில் இந்த இரண்டு சோழர் நாணயங்களை யும் உற்று நோக்க வேண்டும். மதிலகத்தில், கன்னி மண்ணுக்குமேல், 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த படிவுகள் ஆரம்பமாவதை அகழ்வாய்வு தெளிவாகக் காட்டி யுள்ளது. கொடுங்கல்லூர் உள்ளும் புறமும் இதே மாதிரி -யான தன்மைகள் இருப்பதை ஆய்வுகள் தெளிவாக்கி யுள்ளன.

இங்கு சீனத்துச் செலிடான் மட்பாண்டத் துண்டுகள், சிவப்புப் பானை ஓடுகள், சோழர்காலத்துச் செப்புக்காசுகள் இவையனைத்தும் ஒரே அளவில் கிடைத்துள்ளன. இது மேலே சொன்ன கருத்தை மேலும் உறுதி செய்வதாக உள்ளது. இங்கே கிடைத்துள்ள நூற்றுக்கணக்கான சுடுமண் அகல் விளக்குகள், இந்த இடத்தில் ஒரு காலத்தில் கோவில் இருந்ததை நினைவுபடுத்துகின்றன. மதிலகத்தில் கி.பி. 10–ஆம் நூற்றுண்டளவில் சமணக்கோயில் ஒன்று இருந்ததாகக் கல்வெட்டுக் குறிப்பு ஒன்று கூறுகின்றது. இங்குதான் குணவாயிற் கோட்டம் இருந்தது.

இந்த இடங்களேயல்லாமல் வேறு பல இடங்களிலும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை பணத்தையும் உழைப்பையும்தான் விரயமாக்கின. எந்தப் பயனும் கிட்டவில்லை. அப்படி ஆய்வு செய்யப்பட்டது, கொடுங்கல்லூர் பள்ளி வாசலுக்கு எதிரில் உள்ள இடம், கருப்படனு சில போன்ற இடங்களில் பரிசோதனை செய்ய வேண்டும் என டாக்டர் S. K. ஐயங்கார் அவர்கள் ஆர்வம் காட்டியதை அவர் நூலில் எழுதியிருந்தார். ஆனால், இங்கு அவர் எதிர்பார்த்த பழைய பண்பாட்டுப் படிவுகளோ பொருட்களோ எதுவுமே கிடைக்கவில்லை. இந்த இடத்தின் பெயர் மட்டும் பழைய கருரை நினைவுக்குக் கொண்டு வருவதைப்போல் கவர்ச்சி மிக்கதாக உள்ளது.

கேரளாவில் நடைபெற்ற இந்த அகழ்வாய்வுகளை நடுநிலை நின்று ஆய்ந்து பார்த்தால் கீழ்க்கண்ட, தாற்காலிகமான முடிவிற்கு வரலாம்.

கொடுங்கல்லூருக்கு உள்ளும் புறமுமாக, பல முக்கிய இடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள் எல்லாவற்றிலும் கிடைத்த மிகப் பழைமையான படிவுகள், கி.பி. 8 அல்லது 9–ஆம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகத்தான் உள்ளன. ஆக, ஒரே சீரான பண்பாட்டுக் கூறுகள் எல்லா இடங்களிலும் வெளிப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது.

கொடுங்கல்லூர்ப் பகுதியில், மனித சமுதாயத்தின் முதல் குடியிருப்புகள் 8, 9-ஆம் நூற்றாண்டுகளில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். குலசேகர மரபினர் கண்ணனூர்ப் பகுதியில் குடியேறி, அதைத் தங்களுடைய தலைநகராகக் கொண்ட பொழுது இந்தப் பகுதி முழுவதும் முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டும். குலசேகர மரபினர்களைப் பற்றிய நல்ல காலக் கணிப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால் அதற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த எந்தவிதமான ஆதாரமும் கிடைக்கவில்லை.

### ஏனோ காணோம்!

கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட நூற்றாண்டுகளைக் குறிக்கின்ற காலக் கண்ணாடிகளான, கருப்பு சிவப்புப் பானை ஓடுகள், ரௌலட்டட் ஓடுகள், ரசட் பூச்சுடைய (Russet-coated) ஓடுகள் போன்றவைகள் கண்ணனூர்ப் பகுதியில் ஒன்று கூடக் கிடைக்காதது, தொல்லியல் ஆய்வாளர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தருகின்றது. இந்த மட்பாண்ட ஓடுகள், தமிழ் நாட்டுப் பழைய ஊர்களான அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், உறையூர், கொற்கை, காஞ்சி போன்ற எல்லா இடங்களிலும் கிடைத்துள்ளன. கொடுங்கல்லூரில் மட்டும் ஏன் இவை கிடைக்கவில்லை என்பது தெரியவில்லை.

### எதுவோ வஞ்சி?

திருவஞ்சிக்களம், கருப்பதானு அல்லது மதிலகம் போன்றவற்றின் பெயர்களை மட்டும் கொண்டு, அவைகள் பழைய வஞ்சியாகவோ கரூராகவோ இருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனால் இங்கு நடந்த அகழ்வாய்வுகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டாம் சேரப் பேரரசுக் காலத்து ஆதாரங்களைத் தான் வெளிப்படுத்தியுள்ளனவே யல்லாமல் பழங்காலச் சேரர்களைப் பற்றிய எந்த விதமான ஆதாரத்தையும் வெளிப்படுத்தவில்லை. ஆகவே இந்த இடங்களில்தான், பழைய

வஞ்சியோ கருரோ இருந்தது என்று சொல்ல முடிய வில்லை. இந்தக் கருத்தை, கல்வெட்டுகள், இலக்கி யங்கள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு அறிஞர்கள் பலர் முன்னமேயே வெளியிட்டுள்ளனர்.

ஆராய்ச்சிப் பேரறிஞர் மு. ராகவ ஐயங்கார் தமிழகத்தி லுள்ள கருர்தான் பழைய சேரர் தலைநகரமான வஞ்சியாகும் என்று இலக்கியம் கல்வெட்டுகள் இவற்றின் துணை கொண்டு கூறினர். இப்பொழுது அகழ்வாய்வுகளும் அக் கருத்தை உறுதிபடுத்தியுள்ளன.

### முயரிக்கோடோ? முசிறியோ?

பழைய முசிறித் துறைமுகம் இருந்த இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. அது நிச்சயமாக கொடுங்கல்லூராக இருக்க முடியாது. இந்தப் பழைய துறைமுகத்தைப் பற்றிய மரபுச் செய்திகள் இங்கு மக்களிடையே எதுவும் கிடைக்காமல் இருப்பது மிகவும் புதுமையாக உள்ளது. கொடுங்கல்லூருக்குப் பக்கத்தில் முசிறி என்ற பெயர் கொண்ட இடம் எதுவுமே இல்லை. அது பெரியாற்றுக்கு மறு புறத்திலுள்ள பாருருக்குப் பக்கத்தில் வேண்டுமானுல் இருக்கலாம். பாருரில் யூதர்களுக்குச் சில சலுகைகளை வழங்கி, பாஸ்கர ரவிவர்மன் வெளியிட்ட செப்புப் பட்டயத்தில் 'முயிரிக்கோடு' என்ற குறிப்பு இருக்கின்றது. சிக்கல் நிறைந்த இந்தச் சூழலில், இந்தக் குறிப்பு முக்கியமான ஒன்ருகக் கருதப் படுகின்றது. பாருரில் செழிப்பான யூதர்களின் குடியிருப்பு இன்று கூட இருக்கின்றது. செப்புப் பட்டயத்தில் குறிக்கப்பட்டுள்ள முயிரிக்கோடு தான் பழைய முசிறியாக இருக்கலாம் என்று கொள்ளவும் இடமிருக்கின்றது.

# 5

# புதிய கற்காலம்—புருஸ்புட் தொண்டு

## படிக்கற் பாறை

வரலாற்றுக்கு முற்பட்ட புராதன வரலாற்றுக் காலங்களை முழுவதும் தழுவிய வகையில், ராபர்ட் புருஸ்புட் அவர்களின் வேட்கை மிக்க ஆய்வுப்பணி அமைந்திருந்தது. நிலத்தின் படிவ அமைப்புகளை ஆராய முற்பட்ட அவர், அதே காலத்துடன் தொடர்புடைய மனித நாகரிகங்களையும் தேடுவதற்கு மேற்கொண்ட முயற்சி குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மணற்கல் (Quartzite) தென்பட்டால் அது அவருக்கு பழைய கற்காலக் குறியிடங்களைத் தேடுவதற்கான வழி காட்டியாக அமைந்தது; இதுபோல், எங்கு படிக்கற்பாறை (Trap–Dyke) கிடைக்கின்றதோ அந்த இடங்களில் புதிய கற்காலத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்த நிலையங்களை எதிர்ப் பார்க்கலாம் என்று அவர் மிகவும் உறுதியாக நம்பினர்.

## புரூஸின் ஆய்வோட்டம்!

அவர் ஒரு நிலவியல் அறிஞராக மட்டும் இருந்திருந்தால் ஓரிடத்தில் முக்கியமாக கிடைக்கின்ற கற்களை, நில

வியல் கண்ணோட்டத்துடன் அவர் அணுகியிருக்கக் கூடும். அதன் வாயிலாக இந்த கற்களுக்கும், மனித வாழ்க்கைக்கு முள்ள தொல்லியல் தொடர்புகளைப் புறக்கணித்திருக்கக் கூடும். மாறாக, ராபர்ட் புரூஸ் பூட்டிடம் ஒரு விஞ்ஞானியின் அறிவுத்திறனும், ஒரு மனித இன இயற்பண்பாய்வாளருக் குள்ள ஆர்வமும் ஒருங்கிணைந்திருப்பதைக் காணலாம்.

நிலத்தின் படிவமைப்புகளும், அதன் பின்னணிகளும் மனித நாகரிகத்திற்கான சூழ்நிலைப் பின்னணிகளை (ecology) அமைத்துக் கொடுத்ததாக அவர் கருதினார். மாறிக் கொண் டிருக்கும் இயற்கைக் காட்சி வனப்புடைய சூழ்நிலைக்கு ஏற்றவாறும், உயிரினங்கள் வாழ்வதற்கான சூழ்நிலைக்கு ஏற்றவாறும் ஒத்தவாறும் மனிதன் தன் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொண்ட வரலாற்றைப் பற்றி ஆய்வ தற்கு அவர் மிகவும் ஆர்வம் காட்டினார்.

மனிதனுடைய செயல்கள் எவ்வாறு திறந்த சமவெளி இடங்களில் தொடங்கி, குகைகளில் வாழ்ந்து அதன்பின் குடிசைகள் வாயிலாக உறுதி வாய்ந்த கட்டடங்களில் வாழ ஆரம்பித்தான். இம்மாறுபாடுகளைப் பற்றி அவர் மிக ஊன்றிய கவனத்துடன் தம் நூலில் விளக்கியுள்ளார். மனித சமுதாய முன்னேற்றத்தின் நீண்ட தூர பயணத்தில், புதிய கற்காலத்தில்தான்,

"மனித நாகரிகத்தில் புரட்சிகரமான முன்னேற் றங்கள் செம்மைப் படுத்தப்பட்ட கல் ஆயுதங்கள்— கருவிகள் மட்டுமின்றி, மண்பாண்டங்கள் சுடுவதற்கான தொழில் நுட்பத்திலும் விலங்குகளைப் பழக்குவதிலும்" நிகழ்ந்ததாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

## ஆர்வத்தைத் தூண்டுவன

மேற்கூறிய அவருடைய கருத்துக்கு ஏற்ப இதே காலத்தைச் சார்ந்த கூடுதலான கண்டு பிடிப்புகள் மேலும்

இக்கருத்தை உறுதிப் படுத்துவனவாக உள்ளன. அவருடைய ஆய்வு நிலப்பரப்புப் பற்றிய கூர்நோக்கு (Field observation), சான்றுகள் சேகரித்தல், உய்த்துணர உதவும் மூல காரணப் பகுதிகளைத் திரட்டுதல் (Data collection), பொருள் விளக்கம் (Interpretation), காரணகாரிய விளக்கம் (Arguments) முதலியவை அவருடைய நூலைப் படித்துப் பார்ப்பதற்குரிய ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்துள்ளன.

புராதன இடங்களுக்குத் தானே நேரில் சென்று பார்வையிடுதல், அங்குக் கிடைக்கும் பொருட்களைச் சேகரித்துக் குறிப்பெடுத்தல், பிறகு அவற்றின் துணை கொண்டு அக்கால மக்களின் வாழ்க்கையைப்பற்றி இறுதியாகத் தம் கருத்தைத் தெளிவுபடுத்துதல் ஆகியவற்றிலும் அவர் மிகச் சிறந்த ஆற்றல் படைத்தவராகத் திகழ்ந்தார்.

### உள்ளத்தின் ஏக்கம்

அவருடைய நூல்கள் வாயிலாக, அவருடைய ஆராயும் உள்ளத்தின் ஓயாத ஏக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள இயலும். நேரிடையான சான்றுகள் (Field-data) திரட்டலில் கிடைக்கக்கூடிய தேவையான எல்லாவித மூலப் பொருட்களையும், மிக உன்னிப்புடன் ஆராய்ந்துவிட்டு, அதன்பின் பலதரப்பட்ட ஆதாரங்களையும், இடங்களிலிருந்து கிடைத்த தகவல்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, அதன் பயனாக முடிவில் கிடைத்த செய்திக் குறிப்புகளைச் சரியான வரலாற்றுத் தொடர்பு முதலியவற்றின் ஆதார அடிப்படையுடன் வைத்துப் பார்த்தார். கற்கால ஆய்வுக்கருவைப் பற்றிய அவருடைய சிந்தனை அலைகளையும் செயற்பாங்கையும் நாம் சற்று நோக்குவோம்.

## மூலப்பொருள்கள்

கருவிகளை முறையாகப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட முக்கிய மாற்றத்திற்கு ஏற்ப, கருவிகள் செய்வதற்காகப்

பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களிலும் மாற்றம் ஏற்பட்டன.

புதிய கற்கால மக்கள் கருமை நிறமுடைய கற்பாறைகளை (Trap rocks)க் கருவிகள் செய்வதற்குத் தேர்ந்தெடுத்தார்கள். நூற்றுக்கணக்கான இந்தப் படிக்கற் பாறைகள் (Trap Dykes), நீஸிக் என்ற அடுக்குப்பாறை, கருங்கல், (Gneissic rock) நிலப்பரப்பு ஆகியவற்றின் வாயிலாகக் கடந்து சென்று பின் அது தக்காண வகையைச் சார்ந்த பாறைகள் காணப்படுகின்ற தார்வார், கடப்பை, கர்நூல் ஆகிய இடங்களில் அடித்தளத்தில் இடை இடையே ஊடுருவிக் காணப்படுகின்றன.

புதிய கற்காலக் கருவிகள் செய்வதற்கான மூலப் பொருட்களை மாற்றியதற்கு உண்மையாக இருக்கக் கூடிய காரணம், கருங்கல் பாறையைவிடப் படிகக் கற்பாறைகளின் உயர்தரமான கூட்டுறுதியும், கெட்டிமையுமே ஆகும்.

## புதிய கற்காலக் கருவிகள்

ஏறக்குறைய ஆயிரம் புதிய கற்காலக் கருவிகளை அவர் சேகரித்து, பின் அவற்றைக் கவனத்துடன் இனவாரியாகப் பிரித்தார்; இதில் பல்வகை வேறுபாட்டுடன் கூடிய கற்கருவிகள் இருப்பதைக் கண்டு வியப்படைந்தார்.

அவர் இக்கருவிகளின் பயனை அடிப்படையாக வைத்து இன வாரியாகப் பிரித்ததில் ஏறக்குறைய எழுபத்தைந்து வகைகள் காணப்பட்டன. இதில் நாற்பத்தொன்று தேய்த்து வழுவழுப்பாக்கப் பட்ட வகுப்பைச் சார்ந்தனவாகும். ஆனால் வழுவழுப்பாக்கப் படாத கருவிகளில் முப்பத்தேழு வகைகள் தெரிய வந்தன. மேலும் புதிய கற்காலக் கோடரிகளில் மட்டும் பன்னிரண்டு வகைகள் இருப்பதையும் அவர் கண்டு பிடித்தார்.

புதிய கற்காலக் கருவிகளைப் பிரித்துக் காட்டிய செயலி லிருந்து அவருடைய பண்பட்ட பகுப்பாராய்ச்சி முறையும் கூரிய நோக்கமும் புலனாகின்றன. அவருடைய குறிப்புரை யிலிருந்து சில வகைகள் பின்வருவன: கல்வாச்சிகள், கற் கோடரிகள், தாயத்துகள், உரல்கள், குழியம்மிகள், கலுவக்குழவி, வட்டு (வட்டசில்லு) முதலியன (சுமார் நாற்பது). வழவழப்பாக்காமலுள்ள வகையைச் சேர்ந் தவை: அடைக்கல் (பட்டைக்கல்), எலும்பு உடைக்கும் கருவிகள் (Bone Splitters), மை அப்பும் மெல்லுறை (potting stones or dabbers used by potters), செதுக்குக் கருவிகள் (Scrappers), உண்டிக்கல் (Sling stones) முதலியன.

அவர் கண்டுபிடித்த இன்னொரு வகை மெருகு கற்கருவி கான (Stick - Stones) சான்றுகளைச் சேலம் மாவட்டத்தி லுள்ள சேர்வராயன் மலைப் பகுதியில் கண்டெடுத்தார். இதேபோல் ஐரோப்பாவில் நூலால் நெய்தத் துணிக்குப் பளபளப்பையும், வழவழப்பையும் நெசவுத் தறியில் வைத் துக் கொடுப்பதற்குப் பயன்படுத்திய மெருகுக் கருவியை இங்குக் கிடைத்த மெருகுக் கற்கருவியுடன் ஒப்பிட்டுப் பார்த்தார்.

அடுத்தபடியாக அவருடைய கூர்ந்த கவனம், புதிய கற் கால மனிதர்கள் பயன்படுத்திய வில்லும், அம்பும் பற்றிய தாகும். வில்லும், அம்பும பயன்படுவதற்கான அறிவும், ஆற்றலும் புதிய கற்கால மனிதனுக்கு இல்லாமல் இருந் திருக்க நியாயமில்லை. ஆனால் இதற்காகப் பயன்படுத்திய அம்பின் கூர்முனைப் பகுதி (Arrow heads) கிடைக்கவில்லை யாதலால் இதை உறுதிப்படுத்துவதற்கான விளக்கம் தேவைப்படுகிறது.

இதற்கு அவருடைய விளக்கம், ஒரு வேளை மூங்கில் மரத்திலுள்ள பெரிய முள்களை அம்பின் முகப்புப் பகுதியாக ப்பயன்படுத்தியிருக்கலாம் என்பதேயாகும். இந்த மூங்கில்

மரம் எல்லா இடங்களிலும் காணப்படுகின்ற ஒன்றாகும். அவரே இதன் திறனைச் செய்து காட்டிவிட்டு இவ்வாறு கூறுகிறார்:

> "இந்த முள் வகைகள் பெரியவை; பலமானவை; மிகக் கூர்மையானவை; கடுமையான காயத்தை ஏற்படுத்தும் சக்தியுடையவை."

## செய்முறைகள்

சேகரித்த புதிய கற்காலக் கருவிகளை இனவாரியாகப் பிரித்தது மட்டுமின்றி இவைகளைச் செய்வதற்காகப் பயன் படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தைப் பற்றியும் அவர் ஆராய்ந்தார். புதிய கற்காலக் கருவியான கற்கோடரிகளை (celts) தயாரிப்பதில் நான்கு விதமான வேலைப்பாடுகளைக் கையாண்டிருப்பதாக அவர் விளக்கியுள்ளார். அவருடைய இந்த விளக்கத்தை எந்தவிதமான முரண்பாடுமின்றி மொத்தத்தில் அப்படியே சரியென இப்போது ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

| | |
|---|---|
| சில்லுடைத்தல் | (Rough chipping) |
| கொத்துதல் | (pecking) |
| தேய்த்தல் | (grounding) |
| வழுவழுப்பாக்குதல் | (polishing) |

### மட்பாண்டத் தொழில்

புதிய கற்கால மக்கள் பயன்படுத்திய மட்பாண்டத்தைப் பற்றிய புரூஸ்பூட்டின் கருத்துகள் அண்மைக் காலக் கண்டுபிடிப்புகளை எதிர்பார்த்துக் கூறியுள்ளது போல் வியப்பூட்டுவனவாகவுள்ளன.

> "இப்போதுள்ள நிலைமையில் புதிய கற்கால மட்பாண்டங்களின் ஆயுளை அறுதியிட்டுக் கூறுவதற்கான வழிமுறைகள் இல்லை. புதிய கற்கால மட்பாண்டங்கள்

என் கருத்துப்படி மங்கலான நிறத்தையுடையதும் மேற்புறம் கரடு முரடாகவும், வேலைப்பாட்டுத் திறன் குறைவாகவும் இருந்திருக்க வேண்டும்.''

''அதே சமயத்தில் பெருங்கற்கால மண் பாத்திரங்கள் பல தரப்பட்ட வண்ணங்களைக் கொண்டனவாகவும் மிகவும் வழவழப்பான வெளிப் பக்கத்தையுடையன வாகவும் காட்சியளிக்கின்றன''.

அவருடைய இந்தக் கருத்தினைப் பிற்காலங்களில் பிரம்மகிரி, சங்கனக்கல்லு போன்ற இடங்களில் மேற் கொண்ட அகழ்வாராய்ச்சிகள் உறுதி செய்துள்ளன. மங்கலான சாம்பல் நிறமுடைய மட்கலம் புதிய கற்கால மக்களுடன் தொடர்புடையதாகக் காணப் படுகிறது. அதே போல் வழவழப்பான கருப்பு-சிவப்பு மட்கலம் பிற்கால இரும்புக் கால மக்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. அவர் தம் அனுபவம் மிக்க அறி வாற்றலால் கூறிய புதிய கற்கால மக்களைப் பற்றிய கருத்துக்கள் பிற்கால ஆராய்ச்சியின் பயனாகச் சரியெனப் புலனாகியுள்ளன.

### மக்கள் உறைவிடம்

புதிய கற்கால உறைவிடங்களைக் குறித்து அவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

''புதிய கற்கால மக்கள் நிலைத்து வாழ்ந்த குடியிருப்பு களைப் பற்றிய தடங்களை நான் அதிகம் காண முடியவில்லை. ஆனால் புதிய கற்கால மனிதன் இயற்கையான கருங்கல் குன்றுகளிலுள்ள குகைகளில் வாழ்ந்ததற்கான சில அறிகுறிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இந்த கருங்கல் குன்றுகள் தென் தக்காண சமவெளி இடங்களில் ஆங்காங்கே தொடர்

பின்றிச் செங்குத்தாக வளர்ந்து காட்சியளிக்கின்றன''

அவருடைய ஊகங்களில் பல அவரது கண்டுபிடிப்புகளாலும் அவருக்குப் பின் நிகழ்ந்த கண்டுபிடிப்புகளாலும் உண்மையெனப் புலனாகியுள்ளன. பெரும்பாலான புதிய கற்காலக் குறியிடங்கள் சிறு குன்றுகளில் கிட்டத்தட்ட பாதி வழியிலுள்ள சமமான பகுதிகளிலும் பாறைக் குகைகளிலும் காணப்படுகின்றன.

இவ்வகையான உறைவிடங்கள், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பையம்பள்ளியிலும் பெல்லாரி மாவட்டத்திலுள்ள தக்கலக் கோட்டையிலும் காணப்படுகின்றன.

அவர்தம் நுண்ணறிவு வன்மையைப் புலப்படுத்தும் விதத்தில் அவர் பின் வருமாறு குறித்துள்ளார்:

> ''இயற்கையான மலைக்கோட்டை போன்று காட்சியளிக்கின்ற சிறு குன்றுப் பகுதிகளைப் பழைய கற்கால மக்கள் தங்கள் உறைவிடங்களாகப் பெரிதும் பயன்படுத்தினார்கள்; இதில் அங்குமிங்குமாக சில இடங்களில் கரடு முரடான கற்களினால் சுவர்கள் எழுப்பினார்கள். இயற்கையான இந்த உறைவிடங்கள் அந்தப் புதிய கற்கால மக்களை மழை, வெயில் போன்ற இயற்கைச் சக்திகளிலிருந்து பாதுகாப்பு அளித்திருக்க வேண்டும்......நானே கடுமையான வெயிலின் போது அடிக்கடி இந்த உறைவிடங்களைப் பயன்படுத்தியிருக்கிறேன்''.

## குடிசைகள்

புதிய கற்கால மக்களின் குடிசைகளைப் பற்றி அவருடைய கருத்தைப் பார்ப்போம்:

> 'எந்தவித உறுதியுடனும் விளக்கக்கூடிய புதிய கற்காலக் குடிசைகளின் தடயங்கள் இதுவரை எங்கும்

தென்படவில்லை. மேல் குறிப்பிட்டதிலிருந்து "புதிய கற்கால மக்கள் நீடித்து நிற்கக்கூடிய பொருட்களினால் வீடுகள் கட்டவில்லை என்றும், எளிதில் அழிந்து போகக் கூடிய பொருட்களினால் கட்டியிருந்ததால், அவை தீயினாலோ அல்லது இயற்கையின் விளைவுகளாலோ அழிவுற்றுப் போயிருக்கக் கூடும்."

அவர் இத்துடன் தன் கருத்தை முடிக்கவில்லை. அவர்தம் ஆய்வுத் திறம் இந்த முக்கியமான பிரச்சினைக்கு விடைகாணத் துணை செய்தது.

"மண்ணினால் செய்யப்பட்ட கூரையோட்டைத் தாங்கிய வீடுகளைப் புதிய கற்கால மக்கள் கட்டியதாகத் தெரியவில்லை. மட்கலத்துண்டுகள் நிறைய கிடைத்தும் நான் ஒரு போதும் கூறையோட்டுத் துண்டுகளைக் கண்டெடுக்கவில்லை. புதிய கற்காலத்திலும் சரி, இரும்புக்காலத்திலும் சரி, புல்கூறையிலான குடிசைகள் கட்டுவதுதான் வழக்கமாக இருந்திருக்க வேண்டும்."

அவருடைய மதிப்பீடு ஏறக்குறைய சரியெனத் தெளிவாகியுள்ளது. புதிய கற்கால மக்கள் மண்சுவராகக் கொண்டதும் புல் கூறையுடையதுமான குடிசைகளைக் கூம்பு வடிவத்தில் அமைத்தார்கள் என்பதற்கான சான்றுகள் 'தக்கலக் கோட்டா'விலும் வேறுசில இடங்களிலும் செய்யப் பட்ட அகழ்வாய்வுகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## சாம்பல் மேடுகள்

அடுத்தபடியாக அவருடைய கவனத்தைக் கவர்ந்தவை குப்பகல், லிங்கனப்பள்ளி (Linganapalli) போன்ற இடங் களில் காணப்படுகின்ற சாம்பல் மேடுகளேயாகும். முதலில் சில ஆராய்ச்சியாளர்கள் இந்த சாம்பல் மேடுகள் வைதீக

யாகங்களின் விளைவாக உண்டாகியவை என்று கருதினர். மற்றும் சிலர், அசுரர்களுடைய இழவின் சிதைவுகளாக இருந்திருக்கலாமென எண்ணினார்கள். ஆனால் ராபர்ட் புரூஸ்பூட்டுதான் முதன்முதலில் இவை புதிய கற்காலத்தில் உருவாகிய சாம்பல் மேடுகளாக இருக்கக்கூடும் என்ற கருத்தைத் தெரிவித்தார். அவர் சாம்பல் மேடுகளைப்பற்றி இவ்வாறு கூறுகிறார்: "சாம்பல் மேடுகள் புதிய கற்காலத்தில், புதிய கற்கால மக்களால் தோற்றுவிக்கப்பட்டனவாகும்."

மேலும் சாம்பல் மேடுகளின் தோற்றம் புதிய கற்காலம்தான் என்பதற்குச் சான்றாக (சாதகமாக) புதிய கற்காலக் கோடரிகள் இந்தச் சாம்பல் மேடுகளில்தான் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இதேபோல் தனிச் சிறப்புகளுடன் ஆப்பிரிக்காவில் கிடைத்த சாம்பல் மேடுகளுடன் இவற்றை ஒப்பிட்டுப் பார்த்தார். ஆப்பிரிக்காவிலுள்ள சாம்பல் மேடுகளைப் பற்றி சர். ஹென்றிஸ்டேன்லியன் "இருண்ட ஆப்பிரிக்கா" (Darkest Africa) என்ற நூலில் விவரித்துள்ளார். இன்றைய கிராமங்களில் காணப்படுகின்ற சாணமேடுகளுடன் (குப்பை மேடு) இதை ஒப்பிட்டுப் பார்த்தார். அவர் இன்று உயிருடன் இருந்திருந்தால் அவருடைய இந்த ஊகம் அண்மைக்காலங்களில் நடந்த கண்டுபிடிப்புகளினால் உறுதி செய்யப்பட்டிருப்பதையறிந்து மகிழ்ந்திருப்பார்.

## ஆய்வுப் பயணம்

அவர் ஒரிஸா முதல் குமரி வரையிலுள்ள நிலப்பரப்பில் நடத்திய ஆராய்ச்சி மிகப் பெரியதாகும். அவர், பெல்லாரி, அனந்தப்பூர் முதலிய மாவட்டங்களிலும், மைசூரின் சில பகுதிகளிலும், ஆந்திரம், குபகல்லு, பூதிகன்மா, சங்கனக் கல்லு ஆகிய இடங்களிலும் முக்கிய ஆய்வுகள் நடத்தினார்.

மேற்கூறிய இடங்களிலெல்லாம் சமீப காலங்களில் அவருக்குப் பின்வந்த தொல்லியல் வல்லுநர்கள் அகழ் வாய்வுகளைத் தொடர்ந்தார்கள். மக்களின் உறைவிடமாக விளங்கிய ஒரு மேட்டைப்பற்றி அவர் இவ்வாறு கூறுகிருர்:

"இந்த மேட்டை, திறமைவாய்ந்த வல்லுநர் முன் னிலையில் முறையாக அகழ்வாராய்ச்சி செய்தால் நிறைய உண்மைகள் வெளிப்படுமென நான் நிச்சயமாக நம்புகின்றேன். இதன் வாயிலாகப் புதிய கற்கால மக்க ளின் நாகரிக நிலையைப் பற்றியும் அவர்களுக்குப் பின் வந்த இரும்புக்கால மக்களின் வாழ்க்கை நிலையைப் பற்றியும் நல்ல பல ஆதாரங்கள் கிடைக்கும்."

## இந்தியப் படத்தில் தமிழ்நாடு

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைத் தொடரிலும், வடார்க்காடு மாவட்டத்தில் ஏலமலைத் தொடர்களிலும் அவர் புதிய கற்காலக் குறியிடங்கள் கண்டுபிடித்ததனுல், கற்கால இந்தியாவின் படத்தில் தமிழ்நாட்டின் பெயரும் இடம் பெற்றது. அவர், தமிழ் நாட்டிலுள்ள புதிய கற்காலத் தனிச்சிறப்புகளை டெக்கான் பகுதிகளில் கிடைத்த புதிய கற் காலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் இவை இரண்டுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகக் கண்டுபிடித்தார். அதைப் பற்றித் தம்முடைய முடிவான கருத்தை இவ்வாறு கூறு கிருர்:

"இந்த இரண்டு பகுதியிலுள்ள புதிய கற்கால மக்களும் ஒரே சமுதாயத்தைச் சார்ந்தவர்களாகவோ அல்லது இந்த மக்கள் ஒரேவிதமான நாகரிக நிலையில் இருந்த மக்களாகவோ இருந்தார்கள் என்பது திண்ணம்."

அவருடைய இந்தக் கூர்மதி வாய்ந்த யூகம் வடஆர்க் காடு மாவட்டத்தில் பையம்பள்ளி என்ற ஊரில் இந்தியத் தொல்லியல் துறையின் தென்னகப் பிரிவு மேற்கொண்ட

அகழ்வாய்வின் பயனாக நிரூபிக்கப்பட்டுள்ளது.[1] இங்கே கிடைத்த அகழ்வாராய்ச்சிப் பொருள்களுக்கும் தென் தக்காணப் பகுதிகளில் கிடைத்த அகழ்வாராய்ச்சிப் பொருள்களுக்கும் நிறைய ஒற்றுமை காணப்படுகிறது.

## உள்ளதும் இல்லதும்

இந்திய நாகரிகத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியை முறைப்படி அகழ்வாராய்ச்சி செய்து கண்டுபிடிப்பதில் அவருக்குள்ள பெரும் ஆர்வத்தையும், அதே சமயத்தில் அன்று இப்படி செய்வதற்கான வாய்ப்பும் சூழ்நிலையும் சாதகமாக இல்லையென்ற கவலையையும் பின் வருமாறு அவர் குறிப்பிட்டதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

> "தென்னிந்தியாவில் பழைய கற்காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட புராதனக் காலத்தைப் பற்றி (Proto-historic period) தெரிந்து கொள்வதற்கு எடுத்துக் காட்டாக கிரேக்க நாட்டில் கண்டுபிடித்த 'டிராய்' (Troy) போன்ற தொடர்ச்சியான நாகரிகப் பண்புகளின் காலத்தைக் காட்டுகின்ற எந்தப் பழமையான நகரங்களும் இதுவரையும் கண்டு பிடிக்கவில்லை என்பது தென்னிந்திய தொல்லியலைப் பொறுத்த வரையில் வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும்.

> "இந்த விதமான சான்றுகள் கண்டு பிடிக்கும் வரையில் இந்தப் பணியில் ஈடுபட்டிருப்பவரின் முந்தைய அல்லது தொடர்நிகழ்வு நிலை பற்றிய வினாக் களுக்கு விடையளிப்பதற்குள்ள முயற்சி வெற்றி பெற வாய்ப்பில்லை."

## அடுக்கியற்படி ஆய்வு

ஆனால் புருஸ்பூட் அவர்கள் சுட்டிக்காட்டிய நிரப்பப் பெருத !இந்தக் குறை பிற்காலத்தில் தொல்லியல் வல்லுநர்களால் பெருமளவு தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. முறைப்படி பெரும் அளவில் அடுக்கியற்படி ஆய்வு என்ற முறையை (Stratigraphical method) அடிப்படையாகக் கொண்டு அகழ்வாராய்ச்சிகள் மேற்கொண்டதன் பயனாக, புதிய காலத்திலிருந்து தொடங்கி ஆரம்ப வரலாற்றுக் காலம் வரைக்கும் தொடர்ச்சியுடைய மக்கள் நாகரிகத்தை இணைத்துக் கணிக்க நம்மால் இயலும். அண்மைக் காலங்களில், குறிப்பாக புதிய கற்காலம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அண்மையில் நடைமுறைக்கு வந்த கார்பன் 14 (C 14) என்ற விஞ்ஞான ஆராய்ச்சியின் துணைகொண்டு தென்இந்தியாவின் புதிய கற்காலம் ஏறக்குறைய கி.மு. 200–ஆம் ஆண்டு என்று கணித்துள்ளார்கள்.

### பெருமைக்குரியவர் பெயர் போற்றி!

இந்தியாவின் தீபகற்பமாக விளங்குகின்ற தென்னிந்தியாவின் புதிய கற்காலம் ஹரப்பா நாகரிகத்துடன் கிட்டத்தட்ட சம காலத்திலோ அல்லது, அதனைப் பின் தொடர்ந்து எழுந்தோ எங்கும் பரவிக் கிடக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பெருங் கற்காலம், இரும்புக் கால நாகரிகத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டு எங்கும் பரவி இருக்கிறது. புதிய கற்கால நாகரிகத்தின் தனிப் பண்பு பற்றியும் அதன் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் மக்களிடம் எடுத்துரைத்து, அதன் வாயிலாக

மக்களுடைய கவனத்தை இந்தப் புதிய கற்கால நாகரிகத்தின் உறைவிடங்களுக்கு நேராகக் கவரச் செய்த பெருமை அவரையே சார்ந்ததாகும்.

உலகத் தொல்லியலுக்கு ராபர்ட்ட் புரூஸ்பூட் சிறந்த முன்னோடியாக, சோர்வின்றி உணர்ச்சியூட்டும் வகையில் ஆற்றிய பணிக்காகத் தொல்லியல் உலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது.

அடிக்குறிப்பு

1. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை மேலும் புதிய கற்கால உறைவிடங்களைக் கண்டு பிடித்துள்ளது. வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் அகழ்வாய்வுகளையும் மேற்கொண்டுள்ளது.

# 6

# பாண்டியரின் உக்கிரன் கோட்டை

## பெருமை பெற்ற ஊர்

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்குடி அல்லது கரவந்தபுரம் என்னும் கிராமம், முதற்பாண்டிய அரசர் களின் கல்வெட்டுகளில் கல்வியாளர் நிறைந்த ஊராகக் குறிக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இந்நகரம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது என்பது தெரிகிறது. இந்நகரத் தில் தோன்றிய தலை சிறந்த அறிஞர்கள் பாண்டியர் அவையில் படைத் துறையிலும் அரசியல் நிர்வாகத்திலும் முக்கிய இடம் வகித்து வந்துள்ளனர் என்பது கல்வெட்டு களிலிருந்து தெரிகிறது. இந்நகரம் நெடுஞ்சடையன் பராந்தகன் (8-ஆம் நூற்றாண்டு) காலத்தில் கோட்டைகள் நிறைந்த நகரமாகத் திகழ்ந்தது. பிறகு உக்கிரன் என்ற படைத்தலைவனுக்குத் தலைநகரமாகவும் திகழ்ந்தது என்று தெரிகிறது. இக்காரணம் கொண்டே இவ்வூர் உக்கிரன் கோட்டை என்று அழைக்கப்படுகிறது.

## வேள்விக்குடிச் செப்பேடு

இக்கிராமத்தைப் பற்றிய செய்திகள், முதன் முதலாகப் பாண்டிய அரசன் நெடுஞ்சடையன் பராந்தகனின்

(கி. பி. 765–815) வேள்விக்குடிச் செப்பேட்டில் உள்ளன. இவ்வூரைச் சார்ந்த வைத்திய சிகாமணி மாறங்காரி என்பவனே இச்செப்பேட்டின் ஆணத்தியாகக் குறிப்பிடப்படு கிறான். அவன் மூவேந்த மங்கலப் பேரரையன் என்னும் சிறப்புப் பெயரும் கொண்டிருந்தான். அவனே இச்செப் பேட்டில் குறிப்பிடப்பட்ட உத்தரவை நிறைவேற்றி வைத் தான். பாண்டிய மன்னன் அரிகேசரி பராங்குச மாறவர்ம னுக்கும் (நெடுஞ்சடையனின் தந்தை) கங்க நாட்டு இளவரசிக்கும் ஏற்பட்ட திருமணத்திற்கு மாறங்காரி காரண மாக இருந்தான் என்றும் இச் செப்பேடு குறிப்பிடுகிறது. இத்திருமண ஏற்பாட்டிற்கு சாளுக்கிய அரசன் எதிர்ப்பு தெரிவித்தபோதிலும், மற்ற அரசர்களின் உதவியுடன் சாளுக்கியர்களை வென்று, திருமணத்தை அவன் இனிது முடித்தான்.[1]

## ஆனைமலைக் கல்வெட்டு

யார் இந்த மாறங்காரி? மாறன் சடையன் என்கிற பராந்தக நெடுஞ்சடையனின் ஆனைமலைக் கல்வெட்டு (கி. பி. 770) அவனைப் பற்றிய சிறப்பான செய்திகளைத் தருகிறது.

முதல் அமைச்சராக (உத்தரமந்திரியாக)த் திகழ்ந்த கரவந்தபுரத்தைச் சார்ந்த மாறங்காரி என்கிற மதுரகவி என்பவரால் ஒரு குகைக்கோயில் குடைந்து எடுக்கப் பட்டது என்று அக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. அக் கோயில் நரசிம்மப்பெருமாளுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. ஆனால் அக்கோயில் கட்டிமுடிப்பதற்கு முன்னால் மாறங்காரி இறந்துவிடவே அவனுடைய இளைய சகோதரன் மாறன் எயினனால் அந்த வேலை தொடர்ந்து முடிக்கப்பட்டது. ஆனைமலை குகைக்கோயில் பாண்டிய நாட்டில் உள்ள மிகப் பழைய குகைக் கோயில்களில் ஒன்றாகும்.

பாண்டிய நாட்டில் முதன் முதலில் தோன்றிய குடை வரைக்கோயில்கள் சிலவற்றுள் தோற்றுவிக்கப்பட்ட காலக் குறிப்புடன் கூடியது ஆனைமலைக் குகைக்கோவிலாகும். கற்றளிகள் தோன்றிய காலகட்டத்தின் ஆரம்ப காலத்தைக் குறிக்கும் தமிழ்ப் பகுதியில் "கற்றளி" என்றும் வடமொழி யில் "சிலாகிரகம்" என்றும் குறிப்பாகச் சுட்டிக் காட்டப் படுவதால் நாம் இதை உணரலாம்.

நரசிம்மப்பெருமாளுக்குக் கோவில் தோற்றுவித்த மாறங் காரி ஒரு வைஷ்ணவனுவான்; அவனுக்கு மதுரகவி என்ற மற்ருெரு சிறப்புப் பெயரும் உண்டு. நம்மாழ்வாரின் சீடரும், பாண்டிய நாட்டில் தோன்றிய பன்னிரு ஆழ்வாருள் ஒருவரு மான மதுரகவி ஆழ்வார் என்பார் இவராகத்தான் இருக்க வேண்டும் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். நம்மாழ்வாருக்குக் காரிமாறன் என்ற பெயர் விசேஷமாக வழங்கிற்று. அவருடைய சீடன் மாறங்காரி என்று வழங் கியது பொருத்தமாகவே உள்ளது. இவர் நம்மாழ்வாரின் மீது பாடியுள்ள பத்துப் பாசுரங்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

திரு. வெங்கய்யா, பண்டித இராகவ ஐயங்கார் போன்ற அறிஞர்கள் மதுரகவி ஆழ்வார் என்பவர் இவராகத்தான் இருக்கவேண்டும் என்று தக்க காரணம் காட்டி விளக்கியுள் ளனர். முதலில் அரிகேசரி பராங்குச மாறவர்மனுக்குக் கீழ் இவர் அமைச்சராகவிருந்து பணியாற்றியும், அவனுடைய மகன் நெடுஞ்சடையன் காலத்திலும் அமைச்சராக இருந்து தொண்டு செய்தார் என்றும் பண்டித இராகவ ஐயங்கார் கருதுகிறுர். முதல் அமைச்சராக இருந்த மாறங்காரி என்பவ ராலும், பெரியாழ்வார் போன்ருேரின் முயற்சிகளாலும் மேற் கூறிய இரண்டு அரசர்களும் வைணவ நெறியில் மிகுந்த ஈடுபாடு கொண்டார்கள் என்று இவர் கூறுகிறுர். நெடு மாறனைப் பற்றியும், அவன் அழகர்கோவிலுக்குச் செய்த

செயற்கரிய பணிகளைப் பற்றியும் பெரியாழ்வார் புகழ்ந் துரைக்கிறார்.

மாறங்காரி இறந்தபின் அவனுடைய இளைய சகோதரன் முதல் அமைச்சனானான். இவன்தான் மாறன் எயினன் என்பவன்: இவனுடைய மூத்த சகோதரன் "மூவேந்த மங்கலப் பேரரையன்", என்றும், இவ்விளையவன் "பாண்டி மங்கல விஜயராயன்" என்றும் பட்டப் பெயர்களால் அழைக் கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். கி. பி. 770-இல் இவனது சகோதரனால் ஆனைமலையில் நரசிம்மப் பெருமாளுக்காகக் கட்டப்பட்டு வந்த குகைக்கோவிலை இவன்தான் கட்டி முடித்தான்

## திருப்பரங்குன்றம் குகைக் கல்வெட்டுகள்

கரவந்தபுரம் கிராமத்திலுள்ள வைதிக குலத்தில் தோன்றிய சாத்தன் கணபதி என்ற மற்றொருவன் நெடுஞ் சடையன் பராந்தகனின் அவையில் தலைசிறந்த படைத் தலைவராகப் பணியாற்றினான்.

மகா சாமந்தன் என்ற சேனைத் தலைவனுக்குப் பாண்டி அமிர்தமங்கலப் பேரரையன் என்ற சிறப்புப் பெயர் கொடுக் கப்பட்டது. திருப்பரங்குன்றத்திலுள்ள குகைக் கோயிலுக்கு இவன் மிகப் பெரிய அளவில் நற்பணிகள் பல ஆற்றினான். கி. பி. 773-ஆம் ஆண்டு கல்வெட்டில் இது பற்றிக் குறிப் பிடப்பட்டுள்ளது. நக்கன் கொற்றி என்ற பெயர் கொண்ட இவனது மனைவி, துர்கை, ஜேஷ்டாதேவி போன்ற தெய்வங் களுக்குக் குகைக் கோயிலில் சன்னதிகள் எடுப்பித்தாள்.

சாத்தன் கணபதியினுடைய சகோதரன் ஏனாதி சாத்தனா வான். தன்னுடைய சகோதரன்கீழ் இவன் படைத் தலைவனாகப் பணியாற்றினான். இவன் சிறந்த கவிஞனு மாவான். வேள்விக்குடிச் செப்பேட்டிலுள்ள தமிழ்ப் பாக்களை இயற்றியவன் இவனே.



காவிரிப்பூம்பட்டினம் - படகுத்துறை (கீழையூர்)

கட்டுரை 2



காவிரிப்பூம்பட்டினம் – நீர்த்தேக்கம் (வாணகிரி) கட்டுரை 2



காவிரிப்பூம்பட்டினம் – புத்தவிஹாரம்
(பல்லவனீச்சுரம்)

கட்டுரை 2



புத்தபிரான் திருவடிகளைத் தாங்கும் கற்பலகை
(பல்லவனீச்சுரம்)

சட்டுரை 2



சுடுமண் பாவைகள் (உறையூர்) கட்டுரை 3



சொக்கநாயகி அம்மன்
உக்கிரன்கோட்டை – நெல்லை மாவட்டம்

கட்டுரை–6



சித்தன்னவாசல் குகை – படுக்கைகளும் கல்வெட்டுகளும்

கட்டுரை 8



## சீவரமங்கலச் செப்பேடு

இந்த அரசனின் 17-ஆம் ஆட்சியாண்டில் கரவந்த புரத்திலிருந்து தோன்றிய மற்றொரு சிறந்த இராணுவ அதிகாரியைப் பற்றி ஏனாதி சாத்தன் வழங்கிய சாசனத்தில் (கி.பி. 78:) குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தச் சாசனத்தை நிறைவேற்றியவன் திராதரன் மூர்த்தி அயினன் ஆவான். அவன் மஹாசாமந்தன் என்ற பதவி வகித்தான். அவனுக்கு 'வீரமங்கலப் பேரரையன்' என்ற பட்டப்பெயரும் உண்டு.

## தளவாய்புரச் செப்பேடு

பராந்தக வீரநாராயணனின் 45-ஆம் ஆண்டில் இச்சாசனம் வழங்கப்பட்டது, சில பிராமணர்களுக்குக் கிராமங்களைத் தானம் செய்து எல்லா அனுபவ பாத்திரங்களையும் (ஏகபோக உரிமை) அளித்தமையை இச்சாசனம் குறிப்பிடுகிறது. கரவந்தபுரத்தில் பராந்தக வீரநாராயணன் தங்கியிருந்த காலத்தில், இச்சாசனம் வழங்கப்பட்டது. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் என்ற அரசன் பெயர் கொண்டு ஸ்ரீவல்லபமங்கலம் என்ற கிராமம் தானமாக வழங்கப்பட்டது என்றும் இச்சாசனம் கூறுகிறது.

## பெரிய சின்னமனூர்ச் செப்பேடுகள்

மூன்றும் இராஜசிம்மனின் 16-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 916) வழங்கப்பட்ட இச்செப்பேடு, இவ்வரசன் த்னித்து நின்று'கரிகிரி' நாட்டின் குறுநில மன்னனை உக்கிரனையும், அவனது யானைப்படையினையும் வெற்றி கொண்ட செய்திகளைக் குறிப்பிடுகிறது. கரிகிரி என்னுமிடம் கரவந்தபுரம் என்று ஒப்பு நோக்கப்படுகிறது. கோட்டைக் கொத்த

---

← குகை படுக்கையிலுள்ள கல்லெழுத்துக்கள்

கட்டுரை 8

---

களங்கள் நிறைந்த இந்நகரத்தை உக்கிரன் தனது தலை நகராக அமைத்துக் கொண்டான். நெடுஞ்சடையன் பராந்தகனின் காலத்திலும், அதற்கு முன்பே இருந்தும் இவ்விடம் கோட்டைக் கொத்தளங்கள் நிறைந்த இடமாகத் திகழ்ந்தது. வேணாட்டை வெற்றி கொண்டபின் நெடுஞ் சடையன் கரவந்தபுரத்தின் பாதுகாப்பைக் கருதி கோட்டையையும் அரணையும் அமைத்தான். ஏனெனில், இந்நகரம் புதியதாக வெற்றி கொண்ட நாட்டின் எல்லையோரத்தில் அமைந்திருந்தது.

## பிற்காலக் கல்வெட்டுகள்

சோழர்கள் ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்து இந்நகரம் முக்கிய நகரமாகத் திகழ்ந்தது. களக்குடி நாட்டிலுள்ள கரவந்தபுரத்தைச் சார்ந்த ஒருங்கை அரங்கன் என்பவன் அளித்த தானத்தைப் பற்றி, சுசீந்திரத்திலுள்ள முதலாம் பராந்தக சோழன் காலத்திய 10–ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது.

கரவந்தபுரத்தைச் சேர்ந்த வணிகன் ஒருவன் தென் திருமாலிருஞ் சோலையிலுள்ள விஷ்ணுகோயிலுக்கு அளித்த தானத்தைப் பற்றி முதலாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

உக்கிரங்கோட்டையிலுள்ள காடுபட்டிக் குளக்கரையில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இது மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1449) காலத்தில் பொறிக்கப் பட்டது. அதன்படி களக்குடியில் உள்ள 'அரிகேசரீஸ் வரம் உடைய நாயனார்', 'இயல் கட்டீஸ்வரம் உடைய நாயனார்' என்னும் இரு கோயில்களின் தேவதானங்களின் மீது வரிவசூல் செய்து, அதைக் கொண்டு அங்குள்ள புராந்தகபேரேரி என்னும் ஏரியைப் பராமரிக்கவும் ஆண்டு தோறும் தூறு எடுக்கவும் பயன்படுத்தியதாக மேற்கூறிய கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

## கோட்டையும் கோவில்களும்

### சூரியன் கோவில்

பழைய கோட்டைகளையும் இடிபாடுகளையும் உக்கிரன் கோட்டையில் நாம் இன்றும் காணலாம். பண்டைய கோவில்களின் அடித்தளங்களும் ஆங்காங்கே காணப்படு கின்றன. கோட்டையின் கீழ்வாயிலில் சூரியனுக்கு ஒரு கோவில் இருந்தது. இச்செய்தியை இவ்வூரிலுள்ள சொக்க லிங்கேஸ்வரர் ஆலயத்திலுள்ள எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சடையன் மாறனின் வட்டெழுத்துக் கட்வெட் டொன்று கூறுகிறது.

### வடவாயில் அமர்ந்தாள் கோவில்

கோட்டையின் வடவாயிலில் உள்ள அம்மன் கோவிலுக்கு 'வடவாயில் நங்கை' என்றும் 'வடவாயிலில் அமர்ந்தாள்' என்றும் பெயர் காணப்படுகிறது. இக் கோவிலே தற்காலத்தில் சொக்கநாயகன் அம்மன் கோவில் என்று வழங்குகின்றது போலும். ஐநூற்றுவர் என்ற வணிகக் குழுவைச் சேர்ந்த இன்பன் தேவன் செட்டி என்பவன் இக்கோவிலின் திருச்சுற்றாலயத்தைக் கட்டுவித் தான். இதற்கு நகரத்தான் திருசுற்றாலயம் என்னும் பெயர் வழங்கப்பட்டது.

### சொக்கலிங்கேஸ்வரர் கோவில்

இக்கோவிலில் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்ட பாண்டியர் காலத்தியகல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. நகரத்தார் என்னும் வணிகக் குழுவைச் சேர்ந்த ஒரு வணிகர் கட்டிய அம்பலத்தைப்பற்றிக் குறிக்கின்றது. அவ்வம்பலம் 'நகரத்தான்' என்ற பெயராலேயே வழங்கிற்று. இச்சொக்க லிங்கேஸ்வரர் கோவிலே பழங்காலத்தில் 'அரிகேசரி ஈஸ்வரத்துத் தேவர்' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படு கிறது போலும்.

**விஷ்ணு கோவில்**

கோவிலின் மற்ருெரு பாகத்தில் விஷ்ணுவுக்கு ஓர் ஆலயம் இருந்ததாகத் தெரிகிறது. விஷ்ணுவுடைய அழகிய சிற்பம் ஒன்று இங்குக் காணப்படுகின்றது. இங்கு வாழ்ந்த மாறங்காரி அல்லது மதுரகவி என்னும் பாண்டிய அவைத் தலைவர் வைணவ பக்தராகத் திகழ்ந்தார் என்பதை அவர் ஆனைமலையில் எடுப்பித்த நரசிம்மரின் குகைக்கோவிலின் கல்வெட்டிலிருந்து நாம் அறியலாம்.

## தொல்பொருள் ஆய்வு

அண்மையில் உக்கிரங்கோட்டையில் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் அகழ்வாய்வுகள் நடத்தினர். கோட்டையின் பழைய மதிலின் சில பகுதிகளும், மறைந்திருந்த அகழியின் சில பகுதிகளும் வெளிக்கொணரப்பட்டன. அந்தக் கோயிலின் மதிலுக்குப் பெரும் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. கோட்டையின் மொத்த பரப்பளவு 52.6 ஹெக்டார் என்று கண்டுபிடிக்கப்பட்டது. கோட்டையின் உட்புறத்தில் 7, 8–ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த கட்டட அடித்தளங்களும் மக்கள் வாழ்ந்த அடையாளங்களும் கண்டெடுக்கப்பட்டன.

## சிற்பங்கள்

உக்கிரங்கோட்டையின் பல பகுதிகளில், பாண்டியர்கள் காலத்தைச் சார்ந்த எழில்மிகு சிற்பங்கள் காணப்படுகின்றன. வட புறத்திலுள்ள 'வடவாயில் அமர்ந்தாள்' அம்மனின் சிற்பமே மிக உன்னத சிற்பமாகும். எட்டு கைகளைக் கொண்டு சினம் கொண்ட வடிவினளாக—காளியாகக் காட்சியளிக்கின்ருள் அன்னை. சொக்கநாயகி கோவிலில் பாண்டியர் காலச் சிற்பங்கள் பல காணப்படுகின்றன. அவற்றில் 'சப்தமாத்திகர்கள்' என்னும் ஏழு அன்னைமார்கள் சிற்பங்களும், பைரவர், விஷ்ணு போன்ருேரின் சிற்பங்களும் மிகவும் அழகு வாய்ந்தவை. பாண்டியர் காலச் சிற்பக்

கலைக்கு அவை உன்னத எடுத்துக் காட்டுகளாகக் காட்சி அளிக்கின்றன.

## தொகுப்புச் செய்திகள்

மேலே தரப்பட்டுள்ள குறிப்புகளிலிருந்து களக்குடி அல்லது கரவந்தபுரம் பாண்டியர் காலத்தில் ஒரு முக்கிய ஊராக விளங்கிற்று என்பது தெரிகின்றது. அரிகேசரி வர்மன் உதயன நாயனுர் கோவில் என்பது அரிகேசரி பராங்குச மாறவர்மனை நினைவூட்டுகிறது. இவனது மகனை நெடுஞ்சடையன் பராந்தகனின் ஆட்சிக் காலத்தில் இவ்விடம் புகழ் அடைந்தது. இவனது அவை அதிகாரிகளில் பலரும், அமைச்சர்களும் இவ்வூரிலிருந்தவர்களே ஆவர்கள் என்பது தெரிகிறது; வைதிக குலத்தைச் சார்ந்த நிர்வாகத் திறன் கொண்டவர்களாகவும் கல்விமான்களாகவும் விளங்கினர். பல அதிகாரிகளும் மந்திரிகளும் இக்குலத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக் குலத்தைச் சேர்ந்த ஏனாதி சாத்தன் மிகச் சிறந்த தமிழ்க் கவிஞனாக மட்டும் அல்லாமல் பெரிய படைத்தலைவனாகவும் திகழ்ந்தான்.

வேள்விக்குடிச் செப்பேட்டில் உள்ள தமிழ்ப் பகுதியை ஏனாதி சாத்தன் இயற்றினான். அது போன்று மாறங்காரி என்னும் மதுரகவி சிறந்த கவியாகவும் படைத் தலைவனாகவும் அமைச்சனாகவும் விளங்கினான். வேதப்பிராமணர்கள் 'சாலைகள்' என்னும் பள்ளிகளில் இருந்து படைப் பயிற்சியினைப் பெற்றனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கரவந்தபுரத்திலும் இப்படிப் பட்ட பள்ளிகள் (கடிகா) இருந்திருக்கக்கூடும் என்று தெரிகிறது.

நெடுஞ்செழியன் பராந்தகன் காலத்தில்தான் இவ்வூர் முன்னேற்றம் அடைந்தது; கோட்டைக் கொத்தளங்கள் பல கட்டப்பட்டன. இவனுக்குப் பின் வந்த பாண்டிய அரசர்களில் ஒருவன், பராந்தக வீரவர்மன். ஒரு சமயம் இங்கு வந்து சில ஆணைகள் பிறப்பித்தான்.

அரசர்கள் பலர், சில நேரங்களில் கரவந்தபுரத்தில் தங்குவது வழக்கம் என்று தளவாய்புரச் செப்பேடுகளி லிருந்து நாம் நன்கு உணர முடியும். ஒரு சமயம் பராந்தக வீர நாராயணன் இத் தாமிர சாசனத்தை அளித்தான் எனலாம்.

உக்கிரன் என்ற தலைவன் மூன்றும் இராஜ சிம்மன் காலத்தில் இவ்விடத்தைக் கைப்பற்றிப் பாண்டியர்கள் ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தான். ஆனால் அவன் பாண்டி யர்களால் பின்பு தோற்கடிக்கப்பட்டான்.

கரவந்தபுரத்திற்குக் கரகிரி என்றும் களந்தை என்றும் இரு பெயர்களுண்டு என்று கல்வெட்டிலிருந்து தெரிகிறது. இவ்வூரின் வடபகுதியை 'வங்களந்தை' என்றும், தென் பகுதியை 'தென் களந்தை' என்றும் வழங்கினர் என்பது தெரிகிறது.

பாண்டிய நாட்டில் கரவந்தபுரம் அரசியல், கலை துறை களில் தலை சிறந்து விளங்கிற்று. இவ்வூரில் நகரத்தார் என்னும் வணிகப் பெருமக்கள் வாழ்ந்து வந்த பகுதி, இராஜசிங்கப் பேரங்காடி என்று வழங்கிற்று.

அவர்கள் தாம் வாழ்ந்த இடத்தில் அமைந்திருந்த கோவில்களுக்குத் தானமும் கொடையும் வழங்கியும் புதியன வாகப் பல கட்டியும் போற்றி வந்தனர். ஐநூற்றுவர் என்ற வணிகர் சங்கமும் இங்கே செயலாற்றியது. சோழர்கள் காலத்திலும் இவ்வணிகர்கள் கோவில்களை ஆதரித்தும் போற்றியும் வந்திருக்கின்றனர். ஆனால் முதல் பாண்டியர் களின் ஆட்சியுடன் கரவந்தபுரத்தின் அரசியல் சிறப்பும், பெயரும் புகழும் மங்கியது என்று கூறலாம்.

# 7

# பாண்டிய நாட்டிலுள்ள சில வீரக் கற்கள்

## ஆய்வு தேவை

பாண்டிய நாட்டிலே காணப் படுகின்ற வீரக் கற்களைப் பற்றிய விளக்கத்தைக் கொடுப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இந்தக் கட்டுரையைத் தொடங்கும் முன் வீரக் கற்கள் பரவிக் காணப்படுகின்ற தன்மையையும், நடுகல், வீரக்கல் என்ற இரண்டு சொற்களின் பொருள் முக்கியத்துவத்தையும் அறிவது நல்லது.

இதுவரையில் வீரக் கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பைக் காணும்போது, தமிழகத்தின் வடமேற்குப் பகுதியில் அவை மிகுந்து காணப்படுகின்றன என்பதை அறிய முடிகிறது. தமிழ் நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையினர், அண்மைக் காலங்களில் கண்டு பிடித்துள்ள வீரக் கற்கள் இதை உறுதி செய்வனவாக அமைந்துள்ளன.

வட ஆர்க்காடு, தருமபுரி, சேலம் போன்ற மாவட்டங்களில்தான் மற்ற தமிழகத்துப் பகுதிகளைவிட

வீரக் கற்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன. இதே போல் ஆண்டை மாநிலமான அதாவது பழைய கங்கர்கள், நுளம்பர்கள் ஆகியோர் ஆண்ட பகுதியான கன்னட நாட்டிலும் வீரக் கற்கள் கிடைக்கின்றன. வீரக் கற்கள் கதம்ப நாடு (கோவா) வரையிலும் பரவிக் காணப் படுகின்றன.

சித்தூர் மாவட்டத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட வீரக் கற்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இதுவரைக் கிடைத்துள்ள வீரக் கற்களின் எண்ணிக் கையை ஒப்பு நோக்கிப் பார்த்தால் பாண்டிய நாட்டில் மறைந்த மாவீரர்களுக்குக் கல் நடுகின்ற வழக்கம் அதிகமாக இல்லை என்பது தெரிய வருகிறது. பாண்டிய நாடு அல்லது சோழ நாட்டுப் பகுதிகளைக் காட்டிலும் தொண்டை மண்டலத்திலும், கொங்கு மண்டலத்திலும் வீரக் கற்கள் மிகுந்து காணப்படுவது புலனாகின்றது. வீரக் கற்கள் பரவிக் கிடக்கும் தன்மைக்கான காரணத்தைக் கணித்ததால், தென்னிந்தியா முழுவதும் கவனமான ஆராய்ச்சியைத் தொடர்ந்தால், இதன் மூலம் வீரக் கற்கள் நடும் பழக்கம் எப்படி உருவாகிப் பரவியது என்பதைப் பற்றிய விளக்கம் தெளிவாகும்.

நடுகல்

நடுகல்லுக்கும் வீரக் கல்லுக்குமிடையே ஏதாவது வேறுபாடுகள் இருந்தால் அதைப் பற்றிய அறிஞர்களின் கருத்தை வரவேற்கிறேன்.

நடுகல் என்பது பெருங்கல் பண்பாட்டுக் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த சங்க காலத்திலும் பெரு வழக்காகத் திகழ்ந்த சவ அடக்க முறையைக் (Megalithic burials) குறிக்கலாமென்று தோன்றுகிறது. நடுகல்லானது

இறந்த மனித உடலின் எலும்பு போன்ற எஞ்சிய பகுதிகளின் மேல் கட்டப்பட்ட கல்லறை (Sepulchral) அல்லது நடப்பட்ட கல் என்பதைத் தொல்காப்பியம், மணிமேகலை போன்ற இலக்கியங்களின் வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம்.[1] இது ஒரு சவ அடக்க முறை யாக வழங்கி வந்திருக்கிறது. வீரர்கள் அல்லாத சாதாரண மனிதர்களுக்கும்கூட நடுகல் நடப்பட்டிருக் கலாம். நடுகல் இறந்தவர்களைக் குறிக்கத்தான் நடப் பட்டது. இறந்தவர்கள் சிறப்பிக்கப் பட்டதால் நடுகற் களும் வணங்கப்பட்டன. [நெடுங்கல் நின்ற மன்றம் சிலம்பு 5. வரி. 127] இறந்தவர்களை மறைமுகமாகக் குறிப் பதற்குக் "கல்லெடுப்பு" என்னும் சொல் பொதுவாக வழங்கி வந்திருக்கின்றது.

ஆகவே நடுகற்கள், இறந்தவர்களுக்குக் கட்டப்பட்ட நினைவுச் சின்னங்கள் என்பது தெளிவாகின்றது. (பெருங் கல் பண்பாட்டு 'டால்மென்' கல் மேடையைப் போல்)

## வீரக்கல்

வீரக்கற்கள் தனித்தன்மை கொண்ட நினைவுச் சின்னங் களாக இருக்கலாம். அதாவது தனி மனிதர்களோ அல்லது குழுக்களோ ஆற்றிய வீரச் செயல்களைப் பாராட்டுவதற்காக வீரக்கற்கள் நடப்பட்டன. வீரக்கற்கள் வீரர்களுக்காக மட்டும் நடப்பட்டன. மேலும், அவை எல்லாம் பெரும் பாலும் இறந்த வீரர்களின் உடலின் மேல் நடப்பட்டதாகத் தெரியவில்லை; வெறும் நினைவுச் சின்னங்களாகவே (Memorial Stones) எழுப்பப்பட்டன. வீரக்கற்கள் இருக்கும் இடங்களை முறையான அகழ்வாய்வு செய்தால், இந்தக் காரணத்திற்கான விளக்கத்தைக் காணமுடியும். சங்க இலக்கியத்திலேயே நடுக்கல்லுக்கும் வீரக்கல்லுக்கும் ஏதாவது வேறுபாடு இருந்ததா என்பதை அறிஞர்கள் ஆராயவேண்டும். இதுவரையில் கிடைத்துள்ள வீரக்கற்

களின் எழுத்தமைதியைக் கொண்டு நோக்கினால் அவை 5, 6–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக உள்ளன. இந்தக் காலத்திற்கு முற்பட்ட வீரக்கற்கள் என்னவாயின?

## 'சாயக்கம்பா'

நாகார்ஜுனகொண்டாவில் (குண்டூர் மாவட்டம்) கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராகிருத கல்வெட்டுக்களைக் கொண்டுள்ள சாயக்கம்பா (chaya–Kamba) என்னும் நினைவுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[2]

## பிணம் சுடும் முறை

இறந்தவர்களைப் புதைத்து அதன்மேல் கல் நடும் பொதுவான பழக்கமானது, கி.பி. 5–ஆம் நூற்றாண்டளவில் மறைந்து – அதன் பிறகு பிணத்தைச் சுடும் முறை பெரு வழக்காகிவிட்டிருக்கலாம். வீரர்களுக்கு மட்டும்தான் கல்லறை நினைவுச் சின்னங்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டு வந்தனபோல் தோன்றுகிறது.

## பாண்டிய நாட்டில் வீரக்கற்கள்

இப்போது கேரளக் கீழ்க் கடற்கரை முனையில் உள்ள விழிஞம் என்ற இடத்தில் கிடைத்துள்ள இரண்டு வீரக்கற்களைப் பற்றி நோக்குவோம். இந்த இரண்டு வீரக்கற்களும் இப்போது பத்மநாபபுரத்திலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.[3]

### விழிஞத்தில் வீரக்கற்கள்

இவ்விரண்டு வீரக் கற்களில் ஒன்று விழிஞத்தின் மேல் படையெடுத்த பாண்டியர்களை எதிர்த்து மடிந்த வீரனின் நினைவாகவும், மற்றொன்று அதே விழிஞத்தின் மேல் படையெடுத்த சேரர்களை எதிர்த்து மடிந்த வீரன் ஒருவனின் நினைவாகவும் எழுப்பப்பட்டதாகும். இப்

பகுதியை முதலில் பாண்டியர்களுக்கு அடங்கி 'ஆய்' குடிச் சிற்றரசர்கள் ஆண்டு வந்தார்கள். பிறகு பாண்டியர் களின் முழு ஆளுகைக்கு இப்பகுதி உட்படுத்தப்பட்டது. இவ்விரு வீரக் கற்களும் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டுகளைக் கொண் டுள்ளன.

### கல்வெட்டுச் செய்திகள்

வீரன் ஒருவன் தன் தலைவனுக்காகத் தன் உயிரைச் செஞ்சோற்றுக் கடனாகக் கொடுக்கிறான் என்ற செய்தியை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. யார் அந்தத் தலைவன் என்பது தெரியவில்லை. விழிஞத்தின் வெற்றியானது நெடுஞ்சடைய பராந்தக மன்னனின் காலத்திலிருந்தே பாண்டிய அரசர்களின் மிக முக்கிய சாதனையாக அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டானது பாண் டியன் பராந்தகனின் காலத்தையாவது அல்லது அவனுக்குப் பின் வந்த ஸ்ரீமாறன் ஸ்ரீ வல்லபனின் காலத்தையாவது சார்ந்ததாகக் கொள்ளலாம். இந்த வீரக்கல், குத்துவாளை உறையிலிருந்து உருவிப் பிடித்த நிலையிலுள்ள போர் வீரனின் உருவத்தைத் தாங்கி யுள்ளது.

அவ்விடத்திலுள்ள மற்றொரு வீரக் கல்லானது மாறன் சடையனின் இருபத்தேழாம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. பெருமூரைச் சார்ந்த உள்வீட்டுச் சேவகனான இரண கீர்த்தி என்பவன், சேரர் படையினர் கரைக்கோட்டையைத் தாக்கியபோது எதிர்த்து உயிர் கொடுத்த செய்தியைக் குறிக்கின்றது.[4]

தொண்டை மண்டலத்திலே கிடைக்கின்ற வீரக் கற்கள் எல்லாம் எல்லைச் சண்டை, ஆனிரை கவர்தல் போன்றவற்றில் உயிர் கொடுத்த வீரர்களுக்காக எழுப்பப் பட்டனவாகும். ஆனால் விழிஞத்தில் கிடைத்த இந்த

இரு வீரக் கற்களும் தங்களுடைய தலைவர்களை முறையான போர்களிலே காத்து மடிந்த மாவீரர்களின் நினைவாக எழுப்பப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விரு வீரக் கற்களைத் தவிர பாண்டிய நாட்டிலே வீரக் கற்கள் அதிகமாக இல்லை. இதற்குப் பாண்டிய நாட்டிலே இறந்தவர்களைத் தாழியில் வைத்துப் புதைக்கும் பழக்கம் பெரு வழக்கத்திலிருந்ததுதான் காரணமாக இருக்கலாம். இறந்த அரசர்களின் உடல்கள்கூடத் தாழியில் இட்டுப் புதைக்கப்பட்டது. கல் நடும் வழக்கமானது தொண்டை நாடு, கொங்கு நாடு ஆகிய பகுதிகளைவிட பாண்டிய நாட்டிலே குறைந்து காணப் படுகின்றது. ஆனால் தாழிகளில் புதைக்கும் பழக்கம் பாண்டிய நாட்டில் மிகுதியாகக் காணப்படுகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்ச நல்லூரிலுள்ள முதுமக்கள் தாழிகள் இதற்குச் சான்று. அம்மாதிரி தாழிகளை மதுரை, மேலூர், உசிலம்பட்டி, பெரிய குளம் போன்ற பகுதிகளில் நிறைய தாழிகளை நான் கண்டு பிடித்துள்ளேன்.[5]

## நினைவாலயங்கள்
## (Memorial Shrines)

தமிழகத்திலே அரசர்கள் அல்லது இளவரசர்களின் இறந்த உடல்களின் மீதாவது அல்லது அவர்களின் நினைவாகவாவது பள்ளிப்படை என்ற கோயில்களைக் கட்டும் முறை காணப்படுகிறது. முதலாம் பராந்தகனுக்குத் தொண்டை நாட்டிலும், முதலாம் இராச இராசனுக்கு மேல் பாடியிலும், முதலாம் இராசேந்திரனுக்கு ஆரூரிலும் படைக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இராமநாதபுரக் கோயில் கல்வெட்டிலிருந்து இந்தப் பழக்கமானது பிற்காலத்தில் கைவிடப்பட்டது என்பது தெரியவருகிறது.[6]

பாண்டிய நாட்டிலே இம்முறை வழக்கில் இருந்ததா என்பதற்குச் சான்றுகள் காணப்படவில்லை. இருந்தாலும் இப்பழக்கத்திற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு மட்டும் உள்ளது. இராமநாதபுர மாவட்டத்திலுள்ள "பள்ளி மடம்" என்னும் இடத்திலே "சுந்தர பாண்டிய ஈச்சுவரம்" கோயில் இருக்கிறது. இந்த இடத்தைச் சோழன் தலை கொண்ட வீரபாண்டியனின் இளைய சகோதரன் சுந்தர பாண்டியனின் நினைவாக எழுப்பப்பட்ட பள்ளிப்படையாகக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.[7]

பள்ளிப்படைக் கோயில்களை நாம் வீரக் கற்களின் மரபுடன் நேரிடையாகத் தொடர்புபடுத்த முடியாது. இருந்தாலும், இறந்தவர்களை நினைவுச் சின்னங்கள் எழுப்பிச் சிறப்பிப்பது என்பது இரண்டிற்குமிடையே பொதிந்துள்ள அடிப்படைக் கருத்தாகும்.

## பிற்காலத்திய வீரக் கற்கள்

தமிழகத்தின் பிற இடங்களில் வீரக்கல் நடும் வழக்கம் வழக்கற்றுப் போய்விட்டாலும், பாண்டிய நாட்டிலே தொடர்ந்து நிலைத்து இருந்ததாகத் தெரிகிறது. கோவில் பட்டி வட்டத்திலுள்ள இளவேங்கல் என்னுமிடத்தில் 16–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பங்களுடன் கூடிய பல வீரக் கற்கள் கிடைத்துள்ளன[8]. இதில் கல்வெட்டுகளுடன் கூடிய ஒன்பது வீரக் கற்கள் இருக்கின்றன. அவற்றில் பல திருநெல்வேலி பெருமாளுக்கும், அவனுக்கு அடங்காத சிற்றரசனை வெங்கல ராசாவுக்கும் நடந்த பல சண்டைகளை விவரிப்பவனவாக உள்ளன. திருநெல்வேலி பெருமாளின் சார்பில் குழந்தையான் கோட்டையைச் சேர்ந்த மானமற வர்கள் பலர் எதிரிகளின் குதிரைகளைக் குத்திக் கொன்று மடிந்தார்கள். பாண்டிய மன்னன் குலசேகர பராக்கிரம பாண்டியன் என்பான், அப்பகுதியை ஆண்டு வந்தான். இவனுடைய சகோதரன்தான் திருநெல்வேலி பெருமாள்

என்பவன். பெரும்பாலான கல்வெட்டுகள் சக ஆண்டு 1469-ஐச் சார்ந்தவை (கி. பி. 1547). இந்த வீரக் கற்கள் நடப்பட்டிருக்கும் இடம் பெரும்பாலும் போர் நடைபெற்ற களமாக இருக்கலாம்.

பண்டைய மரபையொட்டிக் கல்வெட்டுகளுடனும் வீரர்களின் உருவங்களுடனும் கூடிய பழைய வீரக் கற்கள், பாண்டிய நாட்டிலே 16-ஆம் நூற்றுண்டு வரையில் வழக்கத்திலிருந்தது என்பது தெரிகிறது.

ஆகவே, தொண்டை நாடு, கொங்கு நாடு, கருநாடகம் போன்ற பகுதிகளில்தான் வீரக்கல் எழுப்பும் வழக்கம் சிறப்பாகவும் மிகுதியாகவும் இருந்திருக்கின்றது என்பது அப்பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வீரக் கற்களின் எண்ணிக்கையைக் கொண்டு கூறலாம். பாண்டிய நாட்டில் வீரக் கற்கள் எண்ணிக்கையில் குறைவு என்றுலும் மற்ற பகுதிகளைவிட இங்கு அம்முறை 16-ஆம் நூற்றுண்டு வரைத் தொடர்ந்து நீடித்து இருந்து வந்ததைக் காண்கிறோம்.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், 2 : 5
2. Indian Archaeology, 1955–56. P. 24
3. Ibid, 1958–59. P. 471. TAS Vol. I p. 153.
4. Indian Archaeology, 1958–59 p. 471.
5. Ibid. 1958 - 59, 1960 – 61.
6. K.A.N. Sastri. Colas. P. 4.
7. S.I.I. XIV, No. 74.
8. ARE 1939 – 40, p. 253.

# 8

# தொண்டை மண்டலத்தில் சமண சமயம்

## பௌத்த சமயம்

வட இந்தியாவில் மகதப் பேரசில் தோன்றிய வைதீக மதத்திற்குப் புறம்பான சமண, பௌத்த மதங்கள் தோன்றி நான்கு நூற்றுண்டுகளுக்குள் தென்னிந்தியாவிலும் அவை வேரூன்ற ஆரம்பித்துவிட்டன. பௌத்த மரபுவழிச் செய்திப்படி, அசோகரின் காலத்தில் பௌத்த மதம் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பரவ ஆரம்பித்தது. அசோகன் தன் மகனை மஹிந்தனை இலங்கைக்கு அனுப்பி அந்நாட்டு மன்னன் திச்சாவையும் அவனது நாட்டு மக்களையும் புத்த சமயத்தை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தான்.

## சமண சமயம்

புத்தமதம் தென்னிந்தியாவில் பரவுவதற்கு முன்னமே சமணம் பரவியிருக்கக்கூடும். சமண சமயம் அசோகரின் பாட்டனரான சந்திரகுப்த மௌரியர் காலத்தில் தென் இந்தியாவில் பரவியது என்று சொல்லலாம். மைசூரில்

உள்ள சிரவணபெலகோளா என்னுமிடத்தில் உள்ள 7-ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டு ஒன்று சமணத்துறவிகள் சந்திர குப்தர் காலத்தில் அங்கு வந்து குடியேறியதை விளக்க மாகக் கூறுகின்றது.

### பத்ரபாகு சுவாமி

அதன் கூற்றுப்படி பத்ரபாகு ஸ்வாமி என்னும் சமணத் துறவி உஜ்ஜயினி தேசத்தில் வரப்போகிற கொடிய பஞ்சத்தை முன்கூட்டியே உணர்த்தி எல்லா சமணமதச் சங்கங்களையும் தென்னிந்தியாவிற்கு அழைத்துக் கொண்டு வந்தார். பத்ரபாகுவின் சீடரும் சமண மதத்தைத் தழுவிய வருமான சந்திரகுப்த மௌரிய சக்கரவர்த்தி, தன்னுடைய மகனுக்கு அரியணையை விட்டுக் கொடுத்துவிட்டுத் தன் னுடைய குருவைப் பின்பற்றிச் சிரவணபெலகோளாவை அடைந்தார். விசாக முனிவரின் தலைமையில் பத்ரபாகு பல தூதுவர்களைச் சோழ, பாண்டிய தேசங்களில் சமண மதத்தைப் பரப்புவதற்கு அனுப்பி வைத்தார்; பிறகு 'சல்லேகம்' என்னும் உண்ணு நோன்பை மேற்கொண்டு உயிர் நீத்தார். பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து சந்திர குப்த மௌரியரும் அவ்வாறே செய்தார். 10-ஆம் நூற்றுண் டில் அரிசேனன் என்பவரால் எழுதப்பட்ட "பிரஹத்கதா-கோசம்" என்ற நூலிலும், பிறகு சமணர்களால் இயற்றப் பட்ட வேறு சில நூல்களிலும் இந்தச் சம்பவங்கள் விளக்கப் பட்டிருக்கின்றன.

### கல்வெட்டுச் சான்றுகள்

சந்திரகுப்தரின் பெயர் தழுவி சிரவணபெலகோளாவில் பத்தாம் நூற்றுண்டைச் சேர்ந்த சந்திரகுப்த - பஸ்தி என்ற ஆலயம் இருக்கிறது. சமணர்கள் இங்கு வந்து குடியேறிய நிகழ்ச்சிகளைப் பல சிற்பங்கள் விளக்குகின்றன. இவ்வாறு ஏறக்குறைய கி.மு. 300-இல் தென்னிந்தியாவில் சமணம் பரவியது. சிரவணபெலகோளா கல்வெட்டில் பத்ரபாகு

விற்குப்பின் வந்தவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன.

**சாமந்த பத்திரர்**

இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த திகம்பர எழுத்தாள ரான சாமந்த பத்திரரைப் பற்றியும் இக்கல்வெட்டுச் சொல் கிறது. சாமந்த பத்திரர் மகதம், மாளவம், சிந்து போன்ற பல இடங்களுக்குத் தன்னுடைய நீண்ட பயணத்தை மேற் கொண்டார் என்றும், காஞ்சிக்கு அவர் வருகை தந்தார் என்றும் இக்கல்வெட்டுக் கூறுகின்றது. பிறகு இயற்றப் பட்ட சமண நூல்கள் சமண மதத்தைப் பரப்புவதற்குக் காஞ்சியில் அவர் மேற்கொண்ட பல நடவடிக்கைகளைப் பற்றிக் கூறுகின்றன.

## பௌத்தம் - சமணம் : கண்ணோட்டம்

பௌத்தம் பரவுவதற்கு முன்னமே சமண சமயம் தென்னிந்தியாவில் பரவியது மட்டுமன்றிப் பௌத்த மதத்தைவிட எல்லா இடங்களிலும் மக்களின் ஆதரவையும் பெறத் தொடங்கியது எனலாம். ஆந்திரதேசத்தில் புத்த மதமே மிகவும் பரவலாகப் பின்பற்றப்பட்டு வந்தது என்பதை நாம் அறிவோம்.

அமராவதி, நாகார்ஜுனகொண்டா, பட்டிப் புரோலு, சாலிகுண்டம், ஜெக்கய்யா பேட்டா போன்ற ஸ்தலங்களில் பௌத்த ஸ்தூபங்களும் விஹாரங்களும் பரவலாக இன்றும் காணப்படுகின்றன.

கர்நாடகம், கலிங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சமணமதம் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது. இளம் போதியர் போன்ற சில புத்தமதக் கவிஞர்களைப் பற்றிய குறிப்புகளைத்தவிர புத்த மதத்தின் செல்வாக்கு பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் அதிகமாகக் காணப் படவில்லை. மணிமேகலை நூல் எழுந்த காலத்தில்

தான் புத்தமதம் செல்வாக்குப் பெற்று விளங்கியது என்பதை இந்நூலால் அறியமுடிகிறது. அப்படியிருந்தும் காஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம் ஆகிய பெரு நகரங்களில் புத்தமதம் மேலும் பரவாமல் இருந்துவிட்டது. ஆனால், சமண சமயம் தமிழ்நாட்டின் மத்திய பாகத்திலும் பல தூரத்துக் கிராமங்களுக்கும் பரவியது எனலாம்.

## சமணத்தின் பெருவாழ்வு

தமிழ்நாட்டின் தென் மாவட்டக் கிராமங்களிலும் குன்று களிலும் காணப்படும் பழைய பிராமி எழுத்துக்களினாலான கல்வெட்டுகளுடன் காணப்படும் ஏராளமான குகைகள், சமண சமயம் பல மக்களின் பேராதரவைப் பெற்றிருந்ததை விளக்கவல்லன. சம்பந்தர் போன்ற சமயக்குரவர்கள், வளர்ந்து வரும் சமண சமயத்தின் செல்வாக்கைக் குறை கூறித் தங்களது பாடல்கள் பாடியுள்ளமை, அச்சமயத்தின் பெரும் வளர்ச்சி நிலையையே காட்டுகிறது.

சம்பந்தர் மதுரைக் கோவிலின்மீது பாடியுள்ள பதிகத்தில், ஆனைமலையில் குடியேறியிருந்த சமணத் துறவிகளைப் பற்றிக் குறிப்பிட்டு, வைதீகம் அல்லாத சில தீயபழக்க வழக்கங்களை அம்மதம் பரப்புகிறது எனக் குறை கண்டார்.[1] மதுரை திருவோத்தூர் போன்ற இடங்களில் சமணர்கள் கொல்லப்பட்டனர் என்பதைப் பற்றிய கதைகள், பெரிய புராணம், அதற்குப்பின் எழுதப்பட்ட கோவில் தலவரலாறுகள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. இக்குறிப்புகளிலிருந்து சமணமதம் பலம் வாய்ந்த சக்தியாகத் தமிழகத்தில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பது தெரிகிறது.

## சமணத் துறவியர் தொண்டு

### மொழித் தொண்டு

சமணத் துறவிகள் தாம் வாழ்ந்த இடங்களில் உள்ள மக்கள் அனைவரிடமும் நெருங்கிய உறவு கொண்டனர்.

அவ்விடங்களில் உள்ள நிலைகளுக்கேற்ப வாழ அறிந்து வாழ்ந்தனர். வளையாபதி, குண்டலகேசி, பெருங்கதை, சீவகசிந்தாமணி ஆகிய தமிழ் இலக்கியங்களைப் படைத்தது அவர்களின் பெரும் சாதனையாகும்.

இனி, சமணத் துறவிகளின் தமிழ்த்தொண்டு பற்றி அறிவோம். தொண்டை மண்டலத்தில் தோன்றிய 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சமணத்துறவியான அமிர்தசாகரர் மிகச் சிறந்த தமிழ் இலக்கண நூல்களான யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய நூல்களை இயற்றினர்.

குணசாகரர் என்பவர் யாப்பருங்கலக் காரிகை என்ற இலக்கண நூலுக்கு விரிவுரை எழுதினர்.

12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குணவீர பண்டிதர் என்பவர் நேமிநாதம் என்னும் நூலை இயற்றினர். மயிலாப்பூரில் கோயில் கொண்டிருந்த நேமிநாதர் என்னும் சமண தீர்த்தங்கரருக்கு அந்நூல் அர்ப்பணிக்கப்பட்டது.

பவணந்தி என்பவர் நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதினர்.

பவணந்தி நன்னூலுக்கு மயிலாப்பூரில் வாழ்ந்த மயிலைநாதர் என்னும் சமணமத இலக்கண ஆசிரியர் விரிவுரை எழுதினர்.

இவ்வாறு சமணர்கள் தமிழ் இலக்கணத்திற்கும் இலக்கியத்திற்கும் தங்களாலான தொண்டினைத் தொடர்ந்து செய்தனர்.

### செல்வாக்குச் சுருக்கம்

மக்களுக்கு சமூக சேவையிலும் சமயத் தொண்டிலும் அவர்கள் செய்த பணிகளைக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் எடுத்துக் காட்டுகின்றன. பக்தி இயக்கத்தின் விளை

வாக சமண சமயம் பௌத்த சமயத்தைப் போலவே செல்வாக்கு இழக்க நேரிட்டாலும் முழுமையாக அது அழியவில்லை. பிற்காலத்தில் அம்மதம் ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் தன்னுடைய செல்வாக்கைத் தொடர்ந்து பெற்றிருந்தது.

## கர்நாடகமும் தமிழகமும்

மைசூரில் உள்ள சிரவணபெலகோளாவிலிருந்து தமிழ் நாட்டிற்குச் சமணம் பரவியது என்பதற்குப் பத்ரபாகுவும், அவருடைய சீடர்களின் வழி வந்த மரபுச் செய்திகளும் ஆதாரங்களாக உள்ளன. கர்நாடகப் பகுதியை அடுத்த நாடுகளான தொண்டை மண்டலத்திலும் கொங்கு நாட்டிலும்தான் முதன் முதலில் சமண சமயம் பரவத் தொடங்கியது எனலாம்.

புதிய கற்காலம் முதற் கொண்டே கர்நாடக தேசத்திலிருந்து தமிழ் நாட்டுக்குப் பல கலாசாரப் பண்பாடுகள் தொண்டை மண்டலத்தின் வழியாகத் தமிழகத்தில் பரவின.

### சமய மாநகரம்

காஞ்சிப் பெருநகரைக் கோவில் மாநகர் என்பார்கள். அங்குச் சமயங்கள் பல வளர்ந்தன என்பதால் சமய மாநகரம் என்றும் சொல்லத் தோன்றுகிறது. அங்குதான் பலதரப்பட்ட மதத்தினர் வாழ்ந்தனர். தங்கள் மதம் பரவுவதற்கும் மக்களின் மேலான பேராதரவைப் பெறுவதற்கும் அவர்கள் முயன்றனர் என்று கூறலாம். பலதரப்பட்ட சமயக் கொள்கைகளைக் கொண்ட மக்கள் காஞ்சியில் வாழ்ந்தனர் என்பதைமணி மேகலையும் மகேந்திர வர்மனின் மத்தவிலாசப் பிரகசனமும் கூறுகின்றன.

சிரவணபெலகோளா கல்வெட்டுகள் சாமந்த பத்திரர் அடிக்கடி காஞ்சி மாநகரத்திற்குச் சென்று வந்தார் என்பது பற்றிய குறிப்பினைக் கொண்டுள்ளன.

முன்னர் கூறிய கருத்து உறுதிப்பட இது துணையா கின்றது. அவருக்குப் பிறகு ஏராளமான சமண முனிவர்கள் அச்சமயத்தைப் பரப்ப மேலும் பாடுபட்டனர்.

### அகளங்க முனிவர்

அம்முனிவர்களில் ஒருவர் அகளங்கன் என்பவர். அவர் சிறப்பு மிக்கவர். சில சமண சமய நூல்கள், காஞ்சியில் இருந்த பௌத்தர்களைக் கண்டிக்கவும் அதனுல் தென்னிந்தி யாவிலிருந்து அவர்களை வெளியேற்றவும் அவர் காரண மாக இருந்தார்[2] என்று கூறுகின்றன. சமண சமயத்தின் செல்வாக்கை உணர்த்துவதற்காக மிகைப்படுத்தப்பட்ட கூற்று என்று இதைக் கொள்ளலாம்.

### திருப்பணம்பூர்

காஞ்சியிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ள திருப்பணம்பூர் என்ற சிற்றூரில் அகளங்கா ஆசிரியர் வாழ்ந்தார் என்று சொல்லப் படுகின்றது. அவ்வூரில் ஒரு பழைய சமணக் கோவில் உள்ளது. அக்கோவிலில் உள்ள கல்லில் செதுக்கப்பட்ட "அகளங்கன் பாத"த்தை மக்கள் வணங்கி வருகின்றனர்.

## களப்பிரர் காலம்-சமணர் ஆதிக்கம்

### நூலும் கல்வெட்டுச் சான்றும்

தமிழ் நாட்டில் களப்பிரர் ஆதிக்கம் வலுத்தபோது சமண மதமும் தனது செல்வாக்கை அதிகரித்துக் கொண்டது. களப்பிரர்கள் சமண சமயத்தை சார்ந்தவர்கள்

என்று பெரியபுராணம் கூறும். அவர்கள் அரசியல், மதம் ஆகிய துறைகளில் குழப்பம் உண்டாக்கி நிலை குலையச் செய்தனர் என்றும் பெரியபுராணம் கூறுகிறது.

சிரவணபெலகோளா, சமணம் சிறந்த ஆதரவைப் பெற்ற இடமாகும். களப்பிரர்கள் சமண மதத்தின் உறைவிடமான சிரவணபெலகோளாவிலிருந்து வந்தவர்கள் என்று சொல்வதற்குச் சில கல்வெட்டுச் சான்றுகளும் உண்டு. களப்பிர அரசன் பௌத்த மதத்தையும், சமண சமயத்தையும் போற்றி ஆதரித்தான் என்று பௌத்த நூலான "அபிதம்மவதாரம்" கூறுகிறது.

10–ஆம் நூற்றுண்டைச் சார்ந்த சமண ஆசிரியரான அமிர்த சாகரர் என்பவர் அவ்வரசரைப் பற்றிப் புகழ்ந்து பாடிய பாடல்கள் பல.

## பொற்காலம்

விக்கிரம ஆண்டான 526 அதாவது கி.பி. 470–இல் பூஜ்யபாதரின் சீடரான வஜ்ரநந்தி மதுரையில் திராவிட மூல சங்கம் என்ற ஸ்தாபனத்தை நிறுவியது மற்றொரு முக்கிய நிகழ்ச்சியாகும்.[3] ஏறக்குறைய அக்காலம் தொடங்கி, பக்தி இயக்க மறுமலர்ச்சி உருவாகிய காலம் வரையுள்ள காலத்தைச் சமணத்திற்கும் பௌத்த மதத்திற்கும் பொற்காலம் என்று கூறலாம். இக்காலத்தில்தான் சமண சமயம் மக்களின் பேராதரவை அதிகமாகப் பெற்றது.

பாண்டிய அரசனை நெடுமாறனும் பல்லவ அரசனை மகேந்திரனும் சமண சமயத்தைத் தழுவினர். மேலும், அச்சமயம் ஏறக்குறைய தங்கள் நாட்டின் அரசாங்க சமயமாகக்கூட ஏற்றுக் கொள்ளப்பட்டது எனலாம்.[4] இவ்விரண்டு அரசர்களும் மீண்டும் இந்து மதத்தை




சிறுகடம்பூர் (தென் ஆர்க்காடு)
சமண தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் (திருநாதர் குன்று)

ஏற்றுக் கொண்டது வைதீக சமயத்திற்குப் பெரும் வெற்றிகளாகும்.

நின்றசீர் நெடுமாறனைப் பற்றி ஞான சம்பந்தரும் சேக்கிழாரும் புகழ்ந்து பாடியுள்ளனர். இந்நிகழ்ச்சி பெரிய வெற்றியாகவும் ஒரு திருப்புமுனையாகவும் கருதப்பட்டது. சம்பந்தரின் 'திருப்பாடல்கள்' சமண சமயம் மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தது என்பதைக் காட்டு கின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவொற்றியூரின் மீது அவர் இயற்றிய பதிகம் சமணர்கள் அங்கே அதிக அளவில் குடியேறியிருந்தனர் என்பதைத் தெரிவிக் கின்றது. மயிலாப்பூர், காஞ்சி, திருவதிகை, திருப் பாதிரிப்புலியூர் ஆகிய திருத்தலங்கள் பற்றிப் பாடப் பெற்ற தேவாரப் பாடல்களிலும் சமணரைப் பற்றிய குறிப்புகள் பல உள்ளன.

### பிற்காலம்

ஆழ்வார்கள் நாயன்மார்களின் சமயத் தொண்டிற்குப் பிறகு சமண மதத்தின் செல்வாக்கு வெகுவாகக் குறையத் தொடங்கியது. ஆனால் பௌத்த சமயத்தைப் போல சமணம் முழுமையாக வீழ்ச்சி அடையவில்லை, அல்லது மறையவில்லை. சமணம் தொடர்ந்து தன் செல்வாக்கைப் பெற்றும் வந்தது. இதைப் பற்றி பிறகு விவரிப்போம்.

## தொண்டை மண்டலத்தில் சமணத் தலங்கள்

### திருநாதர் குன்று

மதுரையிலுள்ள முதல் மூன்று நூற்றுண்டுகளைச் சார்ந்த சமணப் படுக்கைகளில் உள்ளதுபோல இவ்வூரிலும் பிராமி எழுத்துக்களைக்கொண்ட கல்வெட்டு ஒன்று உள்ளது.[5] '57 நாட்களுக்குப் பிறகு சந்திரநந்தி ஆசிரியர்

என்ற சமண முனிவர் சல்லேகனம் என்னும் நோன்பை மேற்கொண்டார்' என்ற செய்தியை இக்கல்வெட்டு குறிக்கிறது.

### திருப்பாதிரிப்புலியூர்

**லோகவியாபகம்** என்னும் சமஸ்கிருத அண்ட சாத்திர சமண நூல், பாடலிகா (பாடலிபுத்திரம் அல்லது திருப்பாதிரிப்புலியூர்) என்ற சிற்றூரில் சக ஆண்டு 380-இல், அதாவது கி.பி. 458-இல், சர்வநந்தி என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது என்று பாயிரத்தில் கூறப் படுகிறது.[6]

### பள்ளன் கோவில்

காலக்கணிப்பில் அடுத்து வருவது பல்லவ அரசன் சிம்ம வர்மனின் கி.பி. 550-ம் ஆண்டைச் சார்ந்த பள்ளன் கோவில் செப்பேடு ஆகும்.[7] இது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது. காஞ்சிக்கு அருகாமையில் உள்ள திருப் பருத்திக்குன்றம் சமணர்களின் உறைவிடமாகத் திகழ்ந்ததைப் பற்றிய பல செய்திகளை இச்செப்பேடு நமக்கு அறிவிக்கின்றது.

பல்லவ அரசனான சிம்மவர்மன் பருத்திக்குன்றத்தில் வாழ்ந்த சமணக் குரவருக்குப் பெருநகர் நாட்டில் உள்ள அமண் சேர்க்கை என்ற சிற்றூரைப் பள்ளிச் சந்தமாக அளித்தான் என்று கூறுகின்றது. பருத்திக் குன்றம் என்ற இவ்வூர் ஸ்ரீவர்த்தமான பகவானின் புண்ணியஸ்தலம். தர்மதீர்த்தம் என்று குறிப்பிடப்படுகின்றது.

### 'நந்திசங்கத்' துறவிகள்

நந்தி சங்கம் என்ற குழுவைச் சார்ந்த துறவிகள் இப்பள்ளியில் தங்கியிருந்தனர். அங்கே சமண சமய போதகர்களும் தங்கி வாழ்ந்தனர். அவர்களில் ஒருவர்

எல்லாப் புனித சாத்திரங்களிலும் தேர்ந்தவரான வஜ்ரநந்தி என்பவரும் ஒருவர் ஆவர். ஜினேந்திரர்களும் முனீந்தர்களின் சமய வழிபாட்டிற்கு வசதி செய்து கொடுப்பதற்காக "சிரமணாச்சிரமம்" என்னும் சிற்றூரை அரசன் மான்யமாக அளித்தான். பருத்திக் குன்றத்தில் உள்ள ஸ்ரீவர்த்தமான மகாவீர பகவானின் கோவிலைப் புண்ணிய ஸ்தலமாக கி.பி. 6–ஆம் நூற்றாண்டிலிருந்தே சமணர்கள் போற்றி வணங்கினர் என்று பள்ளன் கோவில் செப்பேடு நமக்கு உணர்த்துகிறது. நந்தி சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கு ஆசிரமமும், பள்ளியும் இருந்தன. இந்தச் சங்கத்தைப் பற்றிய குறிப்பு ஒன்று மிக முக்கியமானதாகும்.

சமணத் துறவிகள் பல சங்கங்களையும் கணங்களையும் அமைத்துக் கொண்டு மக்களின் இடையே தங்களது மதத்தைப் பரப்புவதில் முனைந்தனர். நந்திசங்கம், சேனை சங்கம், தேவ சங்கம், சிம்ம சங்கம் ஆகிய நான்கு சங்கங்களைச் சேர்ந்த திகம்பர சமணர்களைப் பற்றி அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.[8] அவற்றுள் நந்தி சங்கம் என்பது தான் தமிழ் நாட்டில் மிகவும் சிறப்புடன் இயங்கியது. அச்சங்கத்திற்குத் தலைமை வகித்த போதகர் வஜ்ரநந்தி என்பவராவார்.

நந்திசங்கம் என்ற இச்சங்கம் தொடர்ந்து பலகாலம் இச்சமயப் பெரியோர்களின் தலைமையில் புகழ் பெற்று விளங்கியது என்று திருப்பருத்திக் குன்றத்தில் உள்ள பிற்காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அப் போதகர்களில் சந்திர கீர்த்தி ஆனந்த வீர்ய வாமனர், புஷ்பசேனர் போன்றோர் குறிப்பிடத்தகுந்தவராவர்.

### வள்ளிமலை

கர்நாடக தேசத்திலிருந்து வட ஆர்க்காடு மாவட்டத்தில் சமணமதத்தின் செல்வாக்கு தொடர்ந்து நீண்ட காலமாக

இருந்து வந்தது. குறிப்பாக கங்க அரசர்கள் சமணமதத் திற்குப் பெரும் தொண்டாற்றினர். மேலும் சிரவணபெல கோளா புண்ணிய ஸ்தலத்திற்குப் பல சமயத் தொண்டுகள் செய்தனர்.

கங்க நாட்டு அரசர்களில் ஒருவரான முதலாம் ராஜ மல்லன் (கி.பி. 817–818) வள்ளிமலையில் சமணக் குகை ஒன்றை அமைத்தார். அவருடைய கன்னட மொழிக் கல்வெட்டுகள் அங்கு பல உள்ளன. மேலும் அர்ஜ்ஜநந்த பட்டாரர்,பவநந்தி பட்டாரின் சீடரான தேவசேன பட்டாரர் ஆகிய சமண முனிவர்களின் சிற்பங்களும் காணப்படு கின்றன.[9]

**சாத்த மங்கலம்**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வந்தவாசிக் கருகில் உள்ள சாத்த மங்கலத்தில் சந்திரநாத தீர்த்தங்கரரின் கோவில் ஒன்று இருக்கிறது. சமணத் துறவிகளின் உணவுக்காக அறக்கட்டளை ஒன்று அளிக்கப்பட்டதை இரண்டாம் நந்திவர்மனின் 14–ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் (கி.பி. 747), 55–ஆம் ஆட்சியாண்டு கி.பி. 787 க் கல்வெட்டும் குறிப்பிடுகின்றன.

இக்கோவிலுடன் பள்ளிச் சாலை ஒன்று இயங்கி வந்தது என்று தெரிகிறது.

கம்பவர்மன் ஆட்சிக் காலத்தில் இக்கோவிலும் பள்ளி யும் மந்தவி என்பவரால் புதுப்பிக்கப்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது. இக்கோவில் முகமண்டபம் ஒன்றையும் யக்ஷிபடாரிகைக் கோவில் ஒன்றையும் அவர் எடுப்பித்தார். வமல ஸ்ரீயர்யத் தீர்த்தப்பள்ளி என்ற சமணக் கோவிலைப் பற்றி முதலாம் இராஜராஜ சோழனின் 10–ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் குறிப்பிடு கிறது.[10]

### திருப்பான் மலை

தென் ஆர்க்காடு மாவட்டம் விளாப்பாக்கம் என்னும் சிற்றூரிலுள்ள பஞ்ச பாண்டவர் மலையில் பல்லவ அரசன் நந்திவர்மன் காலத்தில், சமண சமயத்தினரின் குடியிருப்பு ஒன்று இருந்தது என்று அங்குள்ள கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

பஞ்சபாண்டவர் மலை என்பது திருப்பான்மலை என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு யக்ஷி நாகநந்தி சமணதீர்த்தங்கரர்கள் ஆகியோரின் சிற்பங்களும் அவற்றைப் பற்றிய கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

நாகநந்தியின் சீடரான நாரயணன் என்பவர், பொன் இயக்கியரின் திருவுருவச் சிலை ஒன்றைச் செய்வித்தார் என்று நந்திவர்மனின் ஐம்பதாவது ஆட்சியாண்டுக் (கி.பி. 781) கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

நாகநந்தி முனிவனின் அருகில் பெண் தெய்வச் சிற்பம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. திருப்பான் மலையைச் சார்ந்த அரிஷ்டநேமி பிடாரர் என்பவரின் தலைமையில் 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சமண ஆசிரமம் ஒன்று செயல்பட்டு வந்தது என்று இவ்வூரிலுள்ள பராந்தக சோழனின் கல்வெட்டிலிருந்து நாம் அறிகிறோம்.

அதே இடத்தில் பெண் துறவியருக்கென்று தனியாகப் பள்ளி ஒன்று இருந்தது என்பதும் தெரிகிறது. அவர்களில் பட்டினக் கூற்றடியார் என்னும் பெண் துறவிப் பள்ளியில் கேணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. லாடநாட்டு வீரசோழனின் மாதேவி பள்ளிச் சந்தம் ஒன்றைத் தானமாக அளித்தார் என்று இவ்வூரிலுள்ள முதலாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[11]

### யக்ஷி வழிபாடு

பொன் இயக்கியார் அல்லது பொன்னி யக்ஷியரைப் பற்றிய குறிப்புகள், சமணத் தலங்களில் யக்ஷி வழிபாடு வழக்கில் இருந்ததைக் குறிக்கின்றன. பொன்னி யக்ஷி என்னும் சொல், சமண சமய தேவியான ஜுவாலா மாலினியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

அரகண்ட நல்லூரில் பொன்னியம்மனுக்கு சமணக் கோயில் ஒன்று உள்ளது. இயக்கப்பட்டி என்னும் ஊரைப் பற்றித் திருக்கோயிலூரில் உள்ள சிவன் கோவில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.[18]

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பொன்னூர் என்னும் ஊரில் உள்ள ஆதிநாதர் கோயிலுக்குள் ஜ்வாலாமாலினி (இயக்கி)யின் திருவுருவச் சிலை ஒன்று உள்ளது, இத்தேவியை அங்குள்ள மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

### ஆனந்த மங்கலம்

செங்கற்பட்டு மாவட்டம் ஆனந்த மங்கலம் என்னும் ஊரில் சமணர்கள் வாழ்ந்து வந்தனர். தீர்த்தங்கரர்களில் ஒருவரான ஆனந்த தீர்த்தங்கரர் பெயரால் இக்கிராமம் அழைக்கப்படுகிறது. அவ்வூரில் ஜினகிரிப்பள்ளி என்ற சமணப்பள்ளி ஒன்று இருந்ததைப் பராந்தகனின் 31–ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 945) கல்வெட்டு தெரிவிக்கிறது.

வர்த்தமான பெரிய அடிகள் என்பவர் சமண அடியார்களுக்கு நாளும் உணவு அளிப்பதற்காக அறக்கட்டளை ஒன்று ஏற்படுத்தினர்.[18] தேச வல்லப ஜினாலயம் என்ற சமணக் கோவில் ஒன்று அக்கிராமத்தின் வட எல்லையில் அமைந்திருந்தது.

செங்கற்பட்டு மாவட்டம் கீரைப்பாக்கம் வட எல்லையில் தேச வல்லப ஜீநாலயம் என்னும் சமணக் கோவில் ஒன்று இருந்ததை அவ்வூரிலுள்ள 9-ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டொன்று குறிக்கின்றது. குமிளிகணத்து யாபனீய சங்கத்தைச் சார்ந்த அமரகுரு என்னும் அடியார் இக்கோவிலைக் கட்டுவித்தார்.[14]

### திருமலை

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள போளூர் வட்டத்தில் திருமலை என்ற ஊர் சமணர்களின் ஒரு முக்கிய புண்ணியத்தலமாக இருந்தது. இவ்விடம், முதற்சோழ அரசர்கள் காலத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்தது. இங்குதான், தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய நேமிநாதரின் (16½ அடி உயரமுள்ள) திருவுருவச் சிலை உள்ளது. சிரவணபெலகோளாவிலுள்ள சிற்பக்கலை நுட்பத்தின் சாயலை இதில் காணலாம்.

சோழ அரசியான குந்தவைப் பிராட்டியின் பெயர் கொண்டு குந்தவை ஜீநாலயம் என்ற சமண ஆலயம் ஒன்று திருமலையில் இருந்ததைப் பற்றி அவ்வூரில் உள்ள கல்வெட்டிலிருந்து நாம் அறிகின்றோம்.[15] இங்கு எண்ணற்ற கல்வெட்டுகளும் சிற்பங்களும் அழகிய ஓவியங்களும் காணப்படுகின்றன. இக்கோயிலுக்கு அறக்கட்டளை வழங்கியவர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.

### கடைக்காட்டூர்

இவ்வூர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. இரண்டாம் பிரதிவிபதியின் உசயேந்திரம் செப்பேடுகளில் இது பழைய சமணத்தலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டு பள்ளிச் சந்தங்கள் வித்யாதரப்பட்டி, தேவபட்டி



திருமலையில் உள்ள (வடஆர்க்காடு)
நேமிநாதர்கோயில் – கோமதேசுவரர் சிற்பம்

கட்டுரை 8

என்று குறிப்பிடப்படுகின்றன. இவ்விரண்டு பள்ளிச் சந்தங்களையும் திகம்பர சமணர்கள் அனுபவித்து வந்தனர் என்று செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.[16] முன்னர் சுட்டப்பட்ட திருமலை கல்வெட்டு, அரிஷ்ட நேமி ஆச்சார்யர், திருமலை பரவதிமல்லரின் சீடர் எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் நந்திவர்ம பல்லவ மல்லனின் காலத்தில் அப்பள்ளிச் சந்த நிலங்கள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டன. தருமத்திற்கு ஒவ்வாத முறைகளைக் கடைப்பிடிப்பவர்களின் நிலங்கள்: பறிமுதல் செய்யப்பட்டன என்று அவனுடைய உதயேந்திரச் செப்பேடுகள் கூறுகின்றன.[17]

### பள்ளிச் சந்தம்

சோழர் ஆட்சியின் தொடக்க காலத்திலேயே திருக்கோயிலூர் வட்டத்தில் பள்ளிச்சந்தம் என்னும் ஊரில் சமணர்கள் மிகுந்த அளவில் வாழ்ந்தனர். வளையூர் நாட்டில் பெரும்பள்ளி என்னும் சமணப் பள்ளிக்குச் சொந்தமான ஏரி ஒன்றைப் பராமரிக்க பல விதிமுறைகள் வகுக்கப்பட்டன என்று முதலாம் பராந்தகனின் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. இப்பெரும்பள்ளி இதற்கு முன் "கண்டராதித்தியப் பெரும்பள்ளி" என்னும் பெயரில் நேமிநாதரின் தலைமையில் இயங்கிற்று.[18]

சமணர்கள் அவ்வப்போது ஆண்டுவந்த சோழ மன்னர்களின் பெயர்களைப் பள்ளிகளுக்குச் சூட்டிக் கௌரவித்தனர். இவ்வாறு அரசரின் பெயர்சூட்டும் மரபை சைவ, வைஷ்ணவர்களும் பின்பற்றி வந்தனர். "இராச இராசேச்சுரம்", "சுந்தரச் சோழ விண்ணகரம்" என்ற பெயர்களால் இதனை அறியலாம்.

### திரு நறுங்கொண்டை

சோழர் காலத்தில் இதே வட்டத்தில் உள்ள திரு நறுங்கொண்டை என்ற ஊர், சமணர் செல்வாக்குடன் இருந்தது

என்பது தெரிகின்றது. பார்ஸ்வநாதருக்கும் சந்திர நாதர்க்கும் இங்குக் கோயில்கள் இருக்கின்றன. இங்கு நாற்பத்தெண்ணுயிரம் பெரும்பள்ளி என்னும் பள்ளி ஒன்று இருந்தது. குலோத்துங்க சோழனின் அதிகாரிகள் அப் பள்ளிக்கு வரிவிலக்குகள் அளித்தார்கள்[19]. மூன்ரும் இராஜ ராஜ சோழனின் காலத்தில் கீழைப்பள்ளி, சோழனின் காலத்தில் கீழைப்பள்ளி, மேலைப்பள்ளி என்றும் இரு பள்ளிகள் இங்கு இருந்ததைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

### மயிலாப்பூர்

சென்னை மயிலாப்பூர் சமணர்களின் மற்ருெரு புண்ணியத் தலமாக விளங்கியது. திருஞானசம்பந்தர் மயிலாப்பூரில் பூம்பாவைக்கு உயிர் கொடுத்த அற்புத நிகழ்ச்சியை அங்கிருந்த புத்தர்களும் சமணர்களும் கண்டு வியந்தனர் என்று அவரது தேவாரப் பதிகம் குறிப்பிடுகின்றது. மயிலாப்பூர் கடற்கரையில் நேமிநாதருக்குக் கோவில் ஒன்று இருந்ததைப் பற்றி நேமிநாதம் என்னும் நூலில் குறிக்கப் பட்டுள்ளது.

'தென் மயிலாபுரி நேமிநாதர்' என்று அது குறிக்கப் கின்றது.

14-ஆம் நூற்ருண்டைச் சார்ந்த சமணக் கவிஞர் அவிரோத ஆழ்வார் என்பவர் மயிலாப்பூர் நேமிநாதரைப் பற்றி 103 பாடல்கள் கொண்ட பாமாலையை இயற்றியுள்ளார்.

இங்குள்ள நேமிநாதருக்கு மயிலைநாதர் என்று பெயரும் வழங்கிற்று. நன்னூலுக்கு விரிவுரை எழுதிய மயிலைநாதர் என்னும் சமண ஆசிரியர் மயிலாப்பூரைச் சேர்ந்தவர் ஆவார்.

இந்தியத் தொல் பொருளாய்வாளர் 1923-இல் சாந்தோம் பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்தபோது, பாரஸ்வரநாதரின் சிற்பங்களைக் கண்டெடுத்தனர். இது மேலே கூறிய இலக்கியச் சான்றை உறுதிப்படுத்துகின்றது. செஞ்சிக்கு அருகிலுள்ள புகழ்பெற்ற சமண இருப்பிடமான சித்தாமூரில் இவ்வழகிய நேமிநாதரின் திருவுருவச்சிலை வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.[20]

### தொண்டூர்

மேலும் பல சமணக் கோவில்களும் பள்ளிகளும் இருந்ததைப் பற்றிய சான்றுகள் ஆங்காங்கே கிடைத்துள்ளன. திண்டிவனத்திற்கு அருகிலுள்ள தொண்டூர் என்னும் ஊரில் 'வழுவா மொழி பெரும்பள்ளி' என்னும் சமணப்பள்ளி ஒன்று இருந்தது. வஜ்ரசிங்க இளம் பெருமானடிகள் அவர்களின் கீழ் இப்பள்ளி ஒருசமயம் இயங்கி வந்தது.[21]

### பெருமாந்தூர்

இதே வட்டத்தில் பெருமாந்தூர் என்ற ஊரில், சந்திரநாதருக்குக் கோவில் ஒன்று இருந்தது. இக்கோவில் ரவிகுல சுந்தர பெரும்பள்ளி என்று வழங்கிற்று.[22]

### பிற தலங்கள்

மதுராந்தகத்துக்கு அருகிலுள்ள ஓர் ஊரில் சமணச் சிற்பங்களும் வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் சமீப காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

வந்தவாசிக்கருகில் சளுக்கி என்ற ஊரில் வீரகேசரி பெரும்பள்ளி என்ற சமணப்பள்ளி ஒன்று இருந்ததைப் பற்றி ஒரு கல்வெட்டு மூலம் அறிகின்றோம்.

ஆரணிக்கு அருகில் உள்ள பூண்டி என்ற ஊரில் வீர சேகர ஜினலயம் என்ற சமணப்பள்ளி இருந்தது. இதைப் பொன்னிநாதர் என்ற சமணத்துறவி ஏற்படுத்தினர்.[23]

மேலும், அம்மணப்பாக்கம், பள்ளிச்சந்தம் போன்ற பெயர்கள் கொண்டு அவ்விடங்கள் சமணத் தொடர்பு கொண்டு இருந்ததை அறியலாம். பொதுவாக தமிழகத்திலும் குறிப்பாகத் தொண்டை மண்டலத்திலும் வட ஆர்க்காடு மாவட்டத்திலும்தான் சமணர்களின் இருக்கைகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இங்குச் சமண சமயம் இன்றும் கணிசமான அளவில் வழக்கில் இருக்கின்றது.

சமணம் அதிக செல்வாக்குப் பெற்றிருந்த கங்கநாட்டை அடுத்து இப்பகுதி இருந்ததால் இங்கும் அம்மதம் தொடர்ந்து பலகாலம் செல்வாக்குடன் வழங்கியிருக்கக் கூடும் என்று எண்ணலாம்.

## கலைச் செல்வம்

சமணர்களின் கோவிற் கலையும் படிமக் கலையும் ஓவியக் கலையும் இன்னும் போதிய அளவில் ஆராயப்படவில்லை.

திருப்பருத்திக் குன்றம், திருமலை போன்ற இடங்களில் சமணர்களின் ஓவியங்கள் இன்றும் காணக்கிடக்கின்றன. திருப்பருத்திக் குன்றத்திலுள்ள சமண ஓவியங்களைப் பற்றி நல்லதோர் ஆராய்ச்சி நூல் வெளிவந்துள்ளது.[24] ஆனல் மற்ற இடங்களிலுள்ள கலைச் செல்வங்கள் அறிஞர்களின் கவனத்தைப் போதிய அளவு ஈர்க்கவில்லை. தொண்டை மண்டலத்தில் சமணம் அதன் நீண்ட வரலாற்றில் பல ஏற்றத் தாழ்வுகளைக் கண்டபோதிலும் தொடர்ந்து ஒருபகுதி மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. இங்குப்

பழமையான சமணக் கோவில்கள் இன்றும் வழிபாட்டுடன் இருக்கின்றன. சமண சமயத்தின் வரலாற்றை முழுமையாக எழுத அறிஞர்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்!

அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதிய "சமணமும் தமிழும்" என்னும் அரிய ஆராய்ச்சி நூல் இந்த வகையில் பயன்படத் தக்கதாகும்.

## அடிக்குறிப்புகள்

1. ஆனைமாமலை யாதியாய விடங்களிற்பல வல்லல் சேர் ஈனர்கட்கு.
2. M. S. Ramaswami Ayyangar, STUDIES IN SOUTH INDIAN JAINISM, 1922, P. 31.
3. நந்தி சங்கத்தைப் பற்றியும், திரமிள சங்கத்தைப் பற்றியும் மைசூர்ப் பகுதிகளிலுள்ள கல்வெட்டுகள் குறிக்கின்றன. (E.C.V, 121).
4. ஏறக்குறைய இக்காலத்தில்தான் சிம்மநந்தி என்னும் சமணர் கங்க அரசைத் தோற்றுவித்தார். அம்மரபில் வந்த துர்விநீதன் போன்றோர் காலத்தில் சமணம் அரசர்களின் பேராதரவைப் பெற்றது.
5. I. Mahadevan, CORPOUS OF TAMIL BRAHMI INSCRIPTIONS.
6. MYSORE ARCHAEOLOGICAL REPORT 1909-10, P. 45.
7. T. N. Subramanian—PALLANKOIL JAIN COPPER PLATE—Transactions of Archaeological Society, 1958-59.
8. சம்பந்தரது தேவாரப் பாடல்களில் இவை குறிப்பிடப்பட்டுள்ளன.
9. E. 1. IV, P. 140.
10. M. D. Sampath, JAINA INSCRIPTION OF SATTAMANGALAM IN SEMINAR ON INSCRIPTIONS, Ed. by. R. Nagaswami (1968), P. 157.

11. V. Venkayya; Jain Inscriptions at Pancha pandavarmalai, E. I. IV, P. 136.

12. S. I. I. VIII, No. 899.

13. 430 of 1922.

14. 22 of 1934–35.

15. S. I. I. III, No. 92–98 etc.,

16. S. I. I. II 84–86.

17. I bid, P. 368.

18. 448 of 1937–38. P. 89.

19. 381–383 of 1901.

20. K. V. Raman, JAIN VESTIGES AROUND MADRAS, QJMS, XLIX No. 2.

21. ARE, 1934–35, Part II.

22. மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக். 121.

23. Rangacharya Top List. I. P. 56.

24. T. N. Ramachandran, TIRUPPARUTTIKUN-RAM AND ITS TEMPLES.

# 9

# பாண்டியர்களின் சமய நெறிமுறைகள்

## பெருமைக்குரியவர்கள்

பாண்டிய அரசர்கள் தங்கள் நீண்டகால ஆட்சியில், உன்னத கலைச் செல்வங்களையும் கலாசார மரபுகளையும் நமக்கு விட்டுச் சென்றுள்ளனர். கோவிற்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை, இலக்கியக் கலை போன்ற பல துறைகளில் பாண்டியர்கள் பெருமைக்குரிய பல சாதனைகள் புரிந்தனர்.

சமயத் துறையிலும் பரந்த நோக்கம், சகிப்புத் தன்மை போன்ற உயர்ந்ததொரு பண்பாட்டை வளர்த்துக் கொண்டு, பிற சமயத்தினரைப் பாராட்டியும் சிறப்பித்தும் வந்தமையால், சமயத்தைப் பற்றி உன்னத நெறிமுறையை வகுத்துக் கொண்டனர் என்பது தெரிகிறது. பாண்டியர்கள் வைதிக மதத்தைப் போற்றுவதில் தேர்ந்தவர்களாகப் பழைய காலம் முதற்கொண்டே இருந்து வந்தனர் என்பது விளங்குகிறது. இருப்பினும் அவர்கள் சமணம்,

பௌத்தம் போன்ற வைதிகம் அல்லாத பிற சமயத்தினருக்கு அளிக்க வேண்டிய மரியாதை, கௌரவம் ஆகியவைகளிலிருந்து தவறவில்லை.

## பாண்டியரின் சமயப் பொறை

சங்க காலத்தில் பாண்டிய நாட்டில் சமண சமய வழிபாட்டுத் தலங்கள் பல இருந்தன. மதுரையைச் சுற்றிலுமுள்ள ஆனைமலை, சமணர்மலை, அரிட்டாபட்டி, அழகர்மலை போன்ற இடங்கள் சமணர்களின் புனிதத் தலங்களாக விளங்கின. பாண்டியன் நெடுஞ்செழியனின் கீழ் அதிகாரியாகப் பணியாற்றிய கடலன் வழுதி என்பவன் சமணத் துறவிக்கு அளித்த இருக்கையைப் பற்றி மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் என்னுமிடத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. செழியன் என்ற பெயர் கொண்ட மற்றொருவன் அளித்த தானத்தைப் பற்றி அரிட்டாபட்டி என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. இதைப் போன்றே பாண்டிய அரசர்கள் வைதிக மதம் அல்லாத பிற சமயங்களைப் போற்றி வளர்த்தமைக்கு இலக்கியங்களிலிருந்தும் பல சான்றுகளை நாம் காணலாம்.

ஆனால், இந்த ஆதாரங்களை நாம் உற்று நோக்கும் போது பாண்டிய அரசர்கள் வைதிக சமயங்களிடத்தும், அவற்றைச் சார்ந்த யாக முறைகளிடத்தும் மிகுந்த பற்றும் ஈடுபாடும் கொண்டிருந்தனர் என்பதை மறந்து விடக்கூடாது. சங்க காலத்திலிருந்தே பாண்டியர்கள் வேத தர்மத்திற்குப் பேராதரவை நல்கினர் என்பதை நாம் இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு போன்றவை கூறும் சான்றுகளால் நன்குணரலாம்.

## முதுகுடுமிப் பெருவழுதி

முதலாம் பாண்டிய அரசர்கள் வரிசையில் வந்த ஒருவன் ஓராயிரம் வேள்விகளைச் செய்தான் என்று சின்னமனூர்ச் செப்பேடு கூறுகிறது.

வேள்விக்குடிச் செப்பேடு, இந்த அரசனைத்தான் 'பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்று குறிப்பிடுகிறது.

சங்க இலக்கியமான மதுரைக் காஞ்சி இந்த அரசனைப் 'பல்யாகசாலை முதுகுடுமி' என்று அழைக்கிறது. பல்வகையான வைதிக யாகங்களை இவன் செய்தான். பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் இப்பாண்டிய அரசன் வேத மார்க்கத்தைக் கடைபிடித்த கொற்கைக் கிழானுக்கு வேள்விக்குடி என்ற கிராமத்தைத் தானமாக அளித்தான்.

"....சுருதிமார்க்கம் பிழையாத
கொற்கை கிழா னற் கொற்றன்
கொண்ட வேள்வி முற்றுவிக்க
வேள்வியந்த ஞளர் முனபு கேட்கவென் றெடுத்துரைத்து
வேள்விச்சாலை முன்பு நின்று
வேள்விகுடி யென்ற பதியைச்
சீரோடு திருவளரச் செய்தார் வேந்தனப் பொழுதே......"

புறநானூற்றில் இவன் செயல்கள் ஐந்து பாடல்களால் போற்றப் படுகின்றன.

## செழியன் சேந்தன்

சமீப காலத்தில் வைகைப் படுகைக் கல்வெட்டு ஒன்று (இப்பொழுது மீனாட்சிக் கோயில் அருங்

காட்சியகத்தில் உள்ளது) செழியன் சேந்தன் (கி.பி. 650) என்னும் பாண்டிய அரசனுக்கு மிகச் சிறந்த பாராட்டை வழங்குகிறது.

''மறம் கெடுத்தறம் பெருக்கி அக்ரஹாரம் பல
செய்து பரிமிதமாகிய ஹிரண்யகர்ப கோ
ஸஹஸ்ர துலா பாரத்து மஹாதானங்களால்......''

அவன் மஹாதானங்களான—இரணிய கருப்பம், துலாபாரம், கோஸ்ஹஸ்ரம் போன்ற திருச்செயல்கள் பல செய்தான் என்று அக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

## மாறவர்மன் அரிசேகரி

அவனுக்குப் பின்வந்த மாறவர்மன் அரிகேசரி (கி.பி. 670-700) இதைப் போன்ற பல யாகங்களைச் செய்தான் என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது. பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, கொற்கை கிழான் என்பவனுக்கு அளித்த வேள்விக்குடியைக் களப்பிரர் கைப்பற்றினர். நெடுஞ்சடையன் பராந்தகன் அவனது உரிமையை மீட்டுக் கொடுத்தான்; அவன் சந்ததியினருக்கு அவ்வுரிமை தொடர்ந்து வருமாறு வழி செய்தான். இச் செயல் அரிய செயலெனவும் பழைய கலாசார பண்பாட்டிற்குப் புத்துயிர் அளித்தமைக்கு ஒப்பானதென்றும் கருதப்பட்டது.

## அறம் தொடர்ந்தது

பின்வந்த அரசர்கள் பலரும் இவன் வழியைப் பின்பற்றி பல பிரமதேயங்களையும், தேவதானங்களையும் அளித்து வைதிகப் பெரியோர்களை ஆதரித்தும், வேத வேள்விகளைப் போற்றியும் வந்தனர்.

13-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த சடையவர்மன் சுந்தரனின் மெய்க்கீர்த்தி இதைப் பின்வருமாறு கூறு கிறது:

'முத்தியின் நால் வேதத்
தருமறையோரை வேள்வி யாறங்கமுடன் சிறப்ப...'

## புராணங்களில் ஈடுபாடு

பாண்டிய அரசர்கள் புராணகால அல்லது இதிகாச கால சம்பவங்களுடன் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில் மிக்க பெருமை கொண்டார்கள். அவர்கள் மகாபாரதப் போரில் பங்கேற்றனர் என்று கூறிக் கொள்கின்றனர். பாண்டிய மன்னர்களில் ஒருவர், பாண்டவர்களின் சார்பில் யானைப் படை நடத்திச் சென்றதாக சின்னமனூர்ச் செப்பேடு கூறுகிறது. பாண்டியர்கள் மகாபாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தனர் என்று அவர்களின் கல்வெட்டுக்களில் காணப்படும் செய்தி மற்ெருரு சிறப்புச் சாதனையாகக் குறிக்கப்படுகிறது.

'மாபாரதந் தமிழ்ப்படுத்து
மதுராபுரிச் சங்கம் வைத்தும்'
(சின்னமனூர்ச் செப்பேடு)

இராமனிடம் சமாதானத்துக்கும் இராவணன் முயல வேண்டும் என்று கருதித் தன்னுடைய முன்னோர்களில் ஒருவன் முயற்சி மேற்கொண்டான் என்று மற்ெருரு பாண்டிய அரசன் கூறுகிருன்.

மேலும் புராண கால நிகழ்ச்சிகளுக்கும் தங்களுக்கும் மிகுந்த ஈடுபாடும் தொடர்பும் இருந்தது என்று இவர்கள்

கூறுகின்றனர். தளவாய்புரச் செப்பேடுகள் பின்வருமாறு இதுபற்றிக் கூறுகிறது:

"கடல் கடைந்து அமிர்தங்கொண்டுங்
கயலினை வடவரைப் பொறித்தும்
ஹரிஹயன தாரம் பூண்டு மவன் முடியோடு வளை உடைத்தும்
வரிகடலை வேலின் மீட்டும் தேவாசுரஞ் செருவென்று
அகத்தியனொடு தமிழாய்ந்தும்...
அரிச்சந்திரன் னகரழித்தவ பரிச்சந்தம் பல கவர்ந்தும்..."

### வழிபாட்டுக் கூறுகள்

இந்து சமயத்தின் ஆறு கூறுகளையும் பாண்டிய மன்னர்கள் போற்றினர் என்பது, இவர்களது சமயப் பொறையைக் காட்டுவதாகும்.

பாண்டிய அரசர்களில் பெரும்பாலோர் சைவ சமயத்தினர் என்றாலும் மற்ற சமயங்களையும் மதித்துப் போற்றி வந்தனர். மேலும் அவர்களில் சிலர் வைணவக் கோட்பாட்டைப் பின்பற்றி வந்தனர். சங்ககாலப் பாண்டிய அரசனான கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி, அழகர் கோயிலில் (திருமாலிருஞ்சோலை) எழுந்தருளியுள்ள திருமாலிடம் பக்தி கொண்டிருந்தான். அத்தெய்வத்தை வழிபட்டு அவன் இயற்றிய பாடல்கள் பரிபாடலில் இடம்பெற்றுள்ளன.

### பரம வைஷ்ணவன்

பிற்காலப் பாண்டியர்களில் நின்ற சீர் நெடுமாறன் சிவ பக்தனாகத் திகழ்ந்தான். அவனுக்குப் பின்வந்த நெடுஞ்சடைய பராந்தகன் என்கிற வரகுணப் பாண்டியன் தன்னைப் 'பரம வைஷ்ணவன்' என்று கூறிக்கொள்கின்றான். பராந்தகன் காஞ்சிவாய்ப் பேரூர் என்னுமிடத்தில் திருமாலுக்கு மிக பெரிய கோயிலை எடுப்பித்தான்.

'காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத்
திருமாலுக்குக் கமர்ந்துறைக்
குன்றமன்னதோர் கோயிலாக்கியும்'
—(*சீவரமங்கலச் செப்பேடுகள்*)

### ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்

பெரியாழ்வார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவரான ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் என்ற அரசன் வைணவனாகத் திகழ்ந்தான்; ஆனால் அவனுடைய மகன் இரண்டாம் வரகுணன் சிறந்த சிவபக்தனாக வாழ்ந்தான். மேலும் அவனுடைய சகோதரன் வீரநாராயணன் என்பவன் வைணவத்தைப் பின்பற்றினான். இந்து மதத்தில் இவ்வாறு தந்தை சைவனாகவும் மகன் வைணவனாகவும் இருந்த நிலையைப் பார்க்கும்போது, அக்காலத்தில் இப்பாகுபாடு மிகைப் படுத்தப்படவில்லை என்று தெரிகிறது. வைதிக இந்து மதத்தில் இரு கண்களாக அவை கருதப்பட்டனவேயன்றி வெவ்வேறு கூறுகளாகக் கருதப்படவில்லை.

### பொன்வேய்ந்த பெருமான்

பாண்டிய அரசர்கள் எல்லோருமே பொது நோக்குடன் நடுநிலை வகித்துள்ளனர். இரண்டாம் பாண்டியப் பேரரசின் தலைசிறந்த மன்னனான சடையவர்மன் சுந்தரபாண்டியன், சிதம்பரம் கோவிலுக்கும், ஸ்ரீரங்கம் கோவிலுக்கும் வேறுபாடின்றிப் பல அரிய திருப்பணிகள் புரிந்தான். இவ்விரண்டு கோயில்களில் உள்ள விமானங்களுக்குப் பொன் வேய்ந்தமையால் அவன் "பொன்வேய்ந்த பெருமான்" என்று சிறப்புடன் அழைக்கப்பட்டான்.

### கொடையளித்த கோமான்கள்

பாண்டிய அரசர்கள் மதுரையில் உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலுக்கும், திருநெல்வேலியில் உள்ள நெல்லை

யப்பர் கோவிலுக்கும், திருச்சியிலுள்ள ஜம்புகேஸ்வரம் கோவிலுக்கும், சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோவிலுக்கும் பிற சைவ ஆலயங்களுக்கும் வரையாது கொடையளித்துப் போற்றி வந்தனர். மேலும் ஸ்ரீரங்கம், அழகர்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி ஆகிய வைணவத் தலங்களும் பாண்டியர்களின் பேராதரவைப் பெற்றன.

இந்துமத முக்கடவுளரான நான்முகன், திருமால், சிவன் ஆகிய கடவுளர்களைத் தங்களது செப்பேடுகளில் தோத்திரப் பாடல்களில் பல பாடியுள்ளனர். அவர்களின் செப்பேடு களில் இத்தகைய உன்னத பரந்த நோக்கிற்குப் பல சான்றுகளைக் காட்ட முடியும். பாண்டியர்கள் சைவம், வைணவம், சௌர்யம், காணபத்தியம், கௌமாரம், சாக்தம் ஆகிய இந்துமதத்தின் ஆறு வழிபாட்டுக் கூறுகளுக்கும் தங்களின் மேலான ஆதரவை நல்கினர். அவற்றை (அறு சமயம்) என்று இவர்களின் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கணேசர், முருகன், சிவன், விஷ்ணு, சூர்யன், சக்தி என்னும் ஆறு தெய்வங்களுக்குக் கட்டப்பட்ட கோவில் களினால், பல தெய்வ வழிபாட்டுக் கூறுகளையும் ஒன்றாய் இணைந்ததொரு சமய வழிபாட்டைப் பாண்டியர் ஆதரித் தனர் என்பது விளங்கும். திருச்சியிலும், திருப்பரங்குன்றத் திலுமுள்ள அவர்களது குகைக்கோவில்களில் மேற்சொன்ன தெய்வங்களுக்கு எழுப்பிய சிற்பங்களை நாம் கண்டு இன்புற லாம்.

பாண்டியர்களின் சமய நெறிமுறைகளையும் கோட்பாடு களையும், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்க் கீர்த்தியால் நாம் நன்குணரலாம்.

'மூவகை தமிழ் முறைமையின் விளங்க
நால்வகை வேதமும் நவின்றுடன் வளர
ஐவகை வேள்வியுஞ் செய்வினை யியற்ற

அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ
எழுவகைப் பாடலுமியலுடன் பரவ ......''

## மொழிகள் வளர்ந்தன

பாண்டிய அரசர்கள் மொழித் துறையிலும் பரந்த நோக்கு கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் தமிழையும், சமஸ்கிருதத்தையும் ஒருங்கே போற்றியும் ஆதரவை நல்கியும் வந்துள்ளனர். இருமொழிகளும் இரு கண்களெனப் பாராட்டி ஒன்றுக்கொன்று ஈடுபாடு கொண்டவை என்று எண்ணிப் பெருமை கொண்டனர்.

'உளமிக்கி மதியதனு லொண்டமிழும் வடமொழியும்
பழுதறத்தா ஞராய்ந்து...'

(சின்னமனூர்ச் செப்பேடுகள்)

'தமிழும் ஆரியமு மறுசமயத் தறநெறியுந்
திருத்துகின்ற மனுநெறியுந் திறம்பாது தழைத்தோங்க!

(ஜடாவர்மன் சுந்தரனின் மெய்க்கீர்த்தி)

'முந்தையோர் தவத்து முனையென வளர்ந்து
தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து''

(அரிகேசரி பராக்கிரமப் பாண்டியனின் மெய்க்கீர்த்தி)

அவர்களுடைய இப்பண்புநலன்களை இன்னும் பல எடுத்துக்காட்டுகள் கொண்டு விளக்க முடியும். பாண்டியர் மதம், மொழி, கலாசாரம் ஆகியவை பற்றி அவர்கள் கொண்டிருந்த தெளிவான பரந்த நோக்கிற்கு மேற்கூறிய செய்திகள் சான்றுகும். ஆரியம் அல்லது வடமொழிக்கு அவர்கள் நல்கிய ஆதரவைப் போல, தமிழ் வளர்ச்சிக்கு மதுரையில் சங்கம் நிறுவுவதில் மிக்க பெருமை கொண்டனர்.

அவர்கள் போற்றி வளர்த்த சமயப் போக்கு குறுகிய மனப் பான்மை கொண்டதல்ல. அது வேத தர்மத்தின் அடிப்படையாக விளங்கியது. இந்துமதத்தின் ஆறு வழிபாட்டு முறைகள் நாடு முழுவதும் பரவியிருந்தன. பாண்டிய வம்சத்தினரைப் போல எந்த வம்சத்தினரும் கலாசார மத மேம்பாட்டையும், பண்பட்ட நலன்களையும் போற்றவில்லை என்று கூறலாம். மேலும் இவர்களின் புகழ்பெற்ற சிறந்த கல்வெட்டுகளும், தாமிரச் செப்பேடுகளும் நேர்த்தியான முறையில் இவர்களுடைய செயல்திறனை வெளியிட்டுள்ளன.

# 10

# தமிழ் பிராமி கல்வெட்டுகள்— ஒரு வரலாற்று மதிப்பீடு

தமிழக வரலாற்றின் தொன்மைபற்றிய ஏதொரு ஆய்விலும் பாண்டிநாடு என்று அழைக்கப்படும் தமிழகத்தின் தென் பகுதியிலுள்ள மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் மொழிக் கல்வெட்டுகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

இந்நூற்றுண்டின் முதல் இருபது ஆண்டுகளில் கண்டு பிடிக்கப்பட்ட இக்கல்வெட்டுகள் மிக அண்மைக்காலம் வரைக்கும் புரியாத புதிராகவும், வகைப்படுத்த இயலாத தாயும் இருந்தன. ஹெச். கிருஷ்ண சாஸ்திரி, கே.வி சுப்பிரமணிய அய்யர், கோபிநாதராவ் போன்ற தலை சிறந்த ஆரம்பகாலக் கல்வெட்டறிஞர்களால் இந்நிலையைப் போக்க பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவ்வறிஞர்கள் பல புதிய சொற்களைக் கண்டுபிடித்தும், அசோகர், பட்டிப்புரோலு பிராமி கல்வெட்டுகளின் உதவியுடனும் இவற்றை வாசிக்க முனைந்தனர்.

எனினும் இக்கல்வெட்டுகளை வாசிக்க இயலாவண்ணம் விளங்காத பல எழுத்துக்களும், சொல் அமைப்புகளும்

இடையூருக இருந்தன. வியக்கத்தகுந்த உள்ளுணர்வுடன் கே. வி. சுப்பிரமணிய அய்யர் இக்கல்வெட்டுகள் வேற்றுப் புலத்திலிருந்து பெற்ற பிராமி வரி வடிவத்தில் எழுதப்பட்ட தமிழ் மொழிக் கல்வெட்டுகள் என்றறிந்தார். ஆயினும் பல எழுத்துக்களைப் பற்றித் தெளிவாக அறிய இயலவில்லை. ஆகையால், பல சொல் அமைப்புகளின் தொடர்ச்சி அறு பட்டும், முடிவுறுதனவுமாகத் தென்பட்டது. அண்மைக் காலத்தில் இக்குறை நீக்கப்பட்டுத் தெளிவாகப் படிப்பதிலும் ஓரளவு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. குறிப்பாக ஐராவதம் மஹாதேவன்[1] என்பார். தூய தமிழ்ச் சொற்களை இக்கல்வெட்டுகளில் காண்பதற்குத் துணைபுரிந்தார்.

மக்கட் பெயர், ஊர்ப் பெயர், தானவிவரம் ஆகியவற்றுடன் கூடிய பொருள் பொதிந்த சொற்றொடர்களும் புலப் பட்டன.

அசோகர் காலக் கல்வெட்டுகள் மற்றும் புத்தமதம் வழக்கிலிருந்த ஆந்திரப் பகுதியைச் சேர்ந்த படிப்புரோலு போன்ற பகுதிகளில் கிடைத்த தொன்மையான கல்வெட்டு களில் காணப்படும் எழுத்து வடிவம், பொருள்வைப்பு ஆகிய பண்புகளுடன் ஒப்பாய்வு நடத்தி இக்கல்வெட்டு களின் காலத்தை நிர்ணயம் செய்கிறோம்.

தமிழகத்தில் அரிக்கமேடு அகழ்வாய்வுகளில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் பலவும் கிடைத்துள்ளன. இப்பானை ஓடுகள் கால நிர்ணயம் செய் வதற்கு எளிதான அடுக்குகளில் கிடைப்பது சிறப்பாகும். எழுத்துக்கள் பொறித்த இவை போன்ற பானை ஓடுகள் அழகரை, உறையூர், (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), கொற்கை (திருநெல்வேலி மாவட்டம்) போன்ற இடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ளன. இவ் விடங்களில் எல்லாம் இப்பானை ஓடுகளின் காலம் மேலே குறித்த கால அளவை ஒட்டியதாகும். (டி.வி. மகாலிங்கம்,

அழகரை, உறையூரில் கிடைத்த எழுத்துக்கள் பொறிக்கப் பட்ட பானை ஓடுகள்).

இக்கல்வெட்டுகள் துண்டு துண்டானவை; சற்று பிராகிருதம் கலந்த பேச்சு வழக்குத் தமிழில் எழுதப் பட்டவை. கடும் தவம் புரிய இயற்கையாக அமைந்த குகைகளிலும், மலைப் பொடவு(குகை)களிலும் வாழ்ந்த சமண முனிவர்களுக்குத் தரப்பட்ட தானங்களைக் குறிப்பனவாம். இத்தானங்களை அளித்தவர்களுள் பெரும்பாலோர் வணிகர்கள் (இவர்கள் சமணராகலாம்). அரசர்கள் குறுநில மன்னர்கள், சாதாரணக் குடிமக்கள் ஆகியோரும் தான மளித்துள்ளனர்.

## பக்திக் கடன்

தானங்களில் பல, முனிவர்கள் உறங்குவதற்காக வழு வழுப்பான படுக்கையை கற்குகையின் தரையில் வெட்டித் தந்ததாக இருக்கும்; அல்லது குகைக்கூறையின் மேலிருந்து நீர் ஒழுகாமல் இருக்கக் கூறையின் முகப்பில் நீர் ஒழுகுங் கால்வாய் வெட்டித் தந்ததாக இருக்கும்; அல்லது சூரிய வெளிச்சத்தைத் தடுப்பதற்காக குகை, வாயிலுக்கு முன்னர் பனை ஓலைக் கூறை வேய்ந்ததற்காக இருக்கும்.

குகையின் தலைவாயில் பெரும்பாலும் கிழக்கு நோக்கியே உள்ளது. இதனால் காலையில் எழும் சூரியனின் ஒளி நேராக குகையில் உட்புக ஏதுவாகும். அண்மையில் கண்டு பிடிக் கப்பட்ட அரிட்டாபட்டி கல்வெட்டு ஒன்றில் குகை, 'முழகை' என்று விளிக்கப்படுகிறது. உயர்ந்த வேள்வி நடாத்தும் முனிவர்களுக்கு இவ்வகையில் செய்யும் உதவியை மிகவும் சிறந்த பக்திக் கடனாக அக்கால மக்கள் கருதினர்.

தொன்மைக்காலத் தமிழக வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்களில் மொழிவகைச் சிறப்பியல்புகள் இல்லாத

இக் கல்வெட்டுகள் முக்கியமானவையாகும். அரசர், குறுநிலத் தலைவர், ராஜபரம்பரை போன்ற பெயர்கள், மக்கட் பெயர், பட்டங்கள், கிராம நகரங்களின் பெயர்கள், பல்வகைப்பட்ட சமூகப் பிரிவினர்களால் தானமாக அளிக்கப்பட்ட பொருட்கள் இன்ன பிறவற்றைப் பற்றியும் இக்கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். இவ்வகையான செய்திகளைச் சிறப்பாக ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கம்.

## அரச மரபினர் பெயர்கள்

சழிவன்: அண்மையில் கண்டெடுக்கப்பட்ட அரிட்டாபட்டி[2] கல்வெட்டில் 'அதன[3] என்னும் பெயர்ச் சொல்லின் முன்பகுதியாக இது காணப்படுகிறது. சழியன் என்ற பெயரின் மற்றொரு வடிவமாகவே இதனைக் கருத வேண்டும். சங்க, மற்றும் சங்க பிற்கால இலக்கியங்களிலும் பாண்டியர்கள் சழியன் என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளனர். மாங்குளம் கல்வெட்டிலும் இதே சொல்லாட்சியைக் காணலாம். நெடுஞ்செழியன் என்ற பெயர்ச் சொல்லின் பின் பகுதியாக இச்சொல் ஆங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம்.

வழுதி, கடவன், அனவன்: இச்சொற்கள் அனைத்தும் நெடுஞ்செழியன் என்னும் பெயர்ச் சொல்லின் முன்பகுதியாக வருகின்றன. இவை பாண்டிய அரச மரபினரின் பிற பெயர்களாகும்.[3]

### பாண்டிய மன்னர்

நெடுஞ்செழியன்: இப்பெயர் மாங்குளம் கல்வெட்டில் காணப்படுகிறது. அவ்வூரிலுள்ள பாழிக்கு இம்மன்னன் அளித்த கொடையைக் கல்வெட்டு குறிக்கிறது. இதே பாழிக்கு இளஞ்சடிகனின் தந்தை, சடிகன் அளித்த கொடையை வேறொரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவன்

நெடுஞ்சழியனின் சாலகன் (மைத்துனன்) என்று குறிப்பிடப் படுகிறான்.

இவற்றிலிருந்து பாண்டிய மன்னர்களும் அவன் உறவினர்களும் சமண மத குருக்களுக்கு நல்லாதரவு நல்கியமை புலப்படும். இக்கல்வெட்டு ஏறக்குறைய கி. மு. 3–ஆம் நூற்றாண்டினதாதலால் இது குறிப்பிடும் நெடுஞ்சழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், மற்றும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆகிய சங்க மன்னர்களைவிடத் தொன்மையானவனாகக் கருதப்பட வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர் (ஐ. மகாதேவன்). ஆனால், இது மேலும் உன்னிப்பாக ஆராயப்பட வேண்டும்.

## சேர மன்னர்

ஆதன் சேரல் இரும்பொறையின் மகன் பெருங்கடுங்கோன்; இவன் மகன் இளங்கடுங்கோ, ஆகிய சேர மன்னர்களைப் பற்றிப் புகழூர்க் கல்வெட்டு உரைக்கிறது. இவற்றில் கடைசியாகக் குறிப்பிட்ட மன்னன் இளவரசாகப் பொறுப்பேற்ற பின்னர் சமண முனிவருக்குப் புகழூரில் உறைவிடமாகக் குகையொன்றைத் தானமாக வழங்கினான். சங்க இலக்கியமான பதிற்றுப்பத்திலும் இதே சேர மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதை மனத்தில் கொண்டால் கால முறைமை மரபுவழி ஆகியவற்றை நிர்ணயம் செய்வதற்கு முக்கிய சான்றாக இச் சம காலக் கல்வெட்டு அமையும்.[4]

## குறுநிலத் தலைவர்

ஆதன்: பக்கனூரைச் சேர்ந்த பெரிதன் என்பானது பெயரின் பின்பகுதியாகக் கொங்கர் புளியங்குளம் கல்வெட்டில் காணப்படுகிறது. இது, இவனது குடும்பப் பெயராகலாம்.

இப்பெயர் சேர மன்னன் ஆதன் செல் இரும் பொறையின் பெயரில் முன்பகுதியில் காணப்படுகிறது (புகழூர்–56) குன்றக்குடி கல்வெட்டில் ஆதன் சாத்தன் பெயருக்கு முன் வந்துள்ளது (69). அழகர்கோவிலில் ஒரு பொற்கொல்லன் மற்றும் ஒரு அறுவை வணிகன் ஆகியோரின் இயற்பெயராக இச்சொல் காணப்படுகிறது.

அதனன் சழிவன் வெளியன்: இவன் அரிட்டாபட்டியில் குகையொன்றைத் தானமாக வழங்கியுள்ளான்.

அந்தை சேந்தன்: மேட்டுப்பட்டி கல்வெட்டில் இப்பெயர் காணப்படுகிறது.

கணிமான்: தேனூரை வென்ற குறுநில மன்னன்; மாமண்டூர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளான்.

பெருபரணன்: பிள்ளையார்ப்பட்டி கல்வெட்டில் (75) குறிப்பிடப்பட்டுள்ள எருக்காட்டூர் குறுநில மன்னன்.

கீரன் ஓரி: புகழூர்க் கல்வெட்டில் காணப்படுகிறுன். ஓரி மரபைச் சார்ந்தவனுக இருக்கலாம்.

பித்தன்: கல்லியூர் சேரன் கீழ்ப் பணியாற்றிய அலுவலராக இருக்கலாம்.

திண்ணன் எதிரான சேந்தன்: ஆண்டிப்பட்டியில் கிடைத்த காசுகளில் குறிக்கப்பட்ட குறுநில வேந்தன் அல்லது மன்னனுக இருக்கலாம்.

## முனிவர்கள்

கணியநந்த ஆசிரியர்: மாங்குளம் பாழியில் வசித்து வந்தவர் (1, 2). நெடுஞ்சழியனும் இவன் சாலகனும் பாழிக்குத் தானங்கள் வழங்கியுள்ளனர்.

குவடி ஈதென் (காவுடி ஈதென்): சித்தன்னவாசல் கல்வெட்டு குறிப்பிடும் முனிவர். எருமி நாட்டு குமுழூரில் பிறந்தவர் (27).

ஏழையூர் அரிதி: கருங்காலக் குடியில் (28) உள்ள பாழியில் தங்கியவர்.

*காசபன்:* அழகர்கோவில் கல்வெட்டு குறிப்பிடும் முனிவர் (41).

*நாதன்:* குன்றத்தூரில் வதிந்தவன். (55)

செங்காயபன் : யாற்றூரிலிருந்து வந்து புகழூர் குகையில் வசித்த சமண (அமண்ணன்) முனிவர். சேர மன்னன் இளங் கடுங்கோ படுக்கைத் தளங்களை ஆக்கித் தந்தான் (56, 60).

செங்காயபன் : திருச்சி குகையில் வாழ்ந்தவன் (68).

செங்காயபன் : திருநாதர் குன்றில் 57 நாட்கள் வரை உண்ணாநோன்பு நோற்று மாண்டவர். (76).

*சபமித... :* என்னுமிடத்திலிருந்து வந்த தாதி (அழகர் கோயில் 36).

*வெண்காசிபன்:* மருகால் தலையில் (29) படுக்கைத் தளத்தை ஆக்கித் தானமாக வழங்கியவன்.

## வணிகர்களும் வணிகக் குழுக்களும்

இக்குகைகளைத் தானமாக அளித்தோரில் பெரும்பாலானவர்கள் வணிகர்கள், மற்றும் தொழில் புரிந்தோராவர். ‘நிகமம்’ என்னும் வணிகக் குழுக்கள் இப்பகுதியில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தன. இடைக்காலப் பகுதியிலும்கூடத் தொழில் நடத்தும் குழுக்கள் பலவும் சமண சமயத்தைப் புரந்தன.

வெள்ளறை நிகமத்தோர் மாங்குளத்தில் இவ்வணிகக் குழு படுக்கைத் தளத்தைத் தானமாக அளித்துள்ளது. மேலூர் தாலுக்காவில் மாங்குளம் அருகே உள்ள

வெள்ளறைப்பட்டியே இவ்வாறு 'வெள்ளரை' என்று குறிப்பிடப்பட்டிருக்கலாம் (மாங்குளம்-6).

இதே வணிகக் குழு பிறிதோரிடத்தில் சன்னல் போன்ற திரை ஒன்றைத் தானமாக வழங்கியுள்ளது. (மாங்குளம்-3)

வியகன் கனடிகன் : இவ் உப்பு வணிகன் அழகர் கோயில் குகையில் கற்படுக்கை ஒன்றைத் தானமாக வழங்கியுள்ளான் (34).

நெடுமலன் : பணித வணிகனுன (சருக்கரை வாணிகம்) இவன் அக் குகைக்குத் தானம் வழங்கியுள்ளான் (37).

எலசந்தன் : இரும்பு வணிகனுன இவனும், தானம் வழங்கியுள்ளான் (38).

எலவ அதன் : இவன் வேண்பள்ளியைச் சார்ந்த அறுவை வணிகன். தானம் வழங்கியுள்ளான் (43).

அத்தி : இவன் கருவூர் பொன் வணிகன்; புகழூரில் கற்படுக்கை அளித்தவன் (66).

தேவன் சாத்தன் : நவரத்தின மணி வணிகன்; (மணிய் வண்ணகன்) ஏழு படுக்கைகளைத் தந்தவன் (72).

காழிதிக அந்தை : வெள்ளறையில் வாழ்ந்த வணிக குல இளவல் (மாங்குளம் 3),

## இடப் பெயர்கள்

வெள்ளரை : மேலூர் தாலுகாவில் உள்ள மாங்குளம் அருகே உள்ள வெள்ளறைப் பட்டியாக இருக்கலாம். ஒரு வணிகக் குழு இவ்விடத்தில் இருந்தது.

தொண்டி : கீழைக் கடற்கரையின் புகழ் வாய்ந்த துறைமுகமான தொண்டியாக இருக்கலாம்; இங்கு வாழ்ந்த இளவன் என்போன் (12) கீழவளவு குகைக்குக் கொடையொன்றை அளித்துள்ளான்.

பாக்கனூர் : இவ்வூரில் வாழ்ந்த பேரதன் பிட்டன் கூறை ஒன்றை 'கொங்கர் புளியங் குளத்தில் வேய்ந்தான். அது இக்கால பாகனூராக இருக்கலாம். (12)

பெதலே : விக்கிரமங்கலம் கல்வெட்டில் (14) குறிக்கப் பட்ட ஊர்.

பதினூர் : மேட்டுப்பட்டி கல்வெட்டில் (23) குறிப்பிட் டுள்ள ஊர்.

சிறுபாவில் : சித்தன்னவாசல் கல்வெட்டில் குறிப்பிட் டுள்ள ஊர்.

குழூமூர் : எருமி நாட்டில் உள்ள ஓர் ஊர் என்று சித்தன்னவாசல் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளது.

எ(இ)லேயூர் : அரிதி முனிவர் இவ்வூரைச் சார்ந்தவர் (28).

மதிரை : மதுரையின் (அழகர் கோவில் 4) மற்றொரு பெயர்.

வேண்பள் : இவ்வூரைச் சார்ந்த அறுவை வணிகனைப் பற்றிக் கல்வெட்டுக் குறிக்கிறது (43).

எருக்காட்டூர் : ஈழத்துப் பொலாலேயன் என்போன் இவ்வூரைச் சார்ந்தவன் (51).

ஈழம் : இலங்கை : இவ்விடத்தைச் சார்ந்த குடிமகன் திருப்பரங்குன்றத்தில் (51) தானம் ஒன்றை வழங்கியுள்ளான்.

விந்தையூர் : முட்டுப்பட்டி குகைக்கு சையளன் (ஈழத்தோன்) என்போன் தானம் வழங்கியுள்ளான் (52).

நாகப்பேரூர் : மேலே குறித்த இடத்திலியே சொல்லப் பட்டுள்ளது. முட்டுப் பட்டிக்கு வெகு அருகே உள்ள நாக மலையின் பழம் பெயர் போலும் (53).

யாற்றூர் : இவ்வூரைச் சார்ந்த செங்காயபன் என்னும் சமண முனிவர் புகளூர் குகையில் வாழ்ந்திருந்தார். இக் குகைக்குச் சேர மன்னர்கள் தானங்களை வழங்கியுள்ளனர்.

தற்கால சேலத்திற்கு அருகேயுள்ள ஆற்றூராக இருக் கலாம். இவ்வூர் புகளூருக்கு வெகு அருகில் இருப்பது கவனிக்கத்தக்கது (56–60).

நல்லியூர் : புகளூர்க் கல்வெட்டில் கீரன், மற்றும் ஓரி ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர் (58–59). கோசர்களது நல்லூராகவும் இது இருக்கலாம் [5].

கருர் : இவ்வூரைச் சார்ந்த பொன் வாணிகன் புகளூரில் கற்படுக்கை ஒன்றைத் தானமாக அளித்தான்.

தேனூர் : கணிமான் என்னும் மலை நாட்டுத் தலைவனால் இவ்வூர் கைப்பற்றப்பட்டது (மாமண்டூர்–71).

எருக்காட்டூர் : இவ்விடத்தின் தலைவன் பெருபரணன். இவனது தானம் குறித்த கல்வெட்டு பிள்ளையார்ப் பட்டியில் உள்ளது (75).

நெல்வேலி : இவ்வூரைச் சார்ந்த அதனன், அரிட்டா பட்டி குகைக்குத் தானம் வழங்கியுள்ளான்.

எருமி நாடு : சித்தன்னவாசல் கல்வெட்டில் காணப்படு கிறது. (27) உள் நாட்டுப் பிரிவினைக் குறிக்கும் 'நாடு' என்னும் சொல்லாட்சி அக்காலத்திலேயே வழக்கிலிருந்தது சிறப்பானதாகும்.

## பெயர் குறிக்கும் சொற்கள்

அரசர்கள், குறுநிலத்தவர்கள், முனிவர்கள், வணிகர்கள் ஆகியோர் பெயர்களைத் தவிர இன்னும் பல பெயர்கள் காணப்படுகின்றன.

சடிகன் : இளஞ்சடிகனின் தந்தையும், நெடுஞ் செழியனின் மைத்துனன் (சாலகன்) ஆவான் (2).

சந்தரிதன் : மாங்குளத்தில் உள்ள கற்படுக்கை, ஒன்றைத் தானமாகத் தந்தவன் (5).

அரிதன் : திருவாதவூரில் (7) கற்படுக்கை ஒன்றைத் தந்தவன்.

ஈழவன் : தொண்டியில் வாழ்ந்த சமணன் (9).

உப்பருவன் : இவன் சமய வழிபாடு செய்வோன் (10).

சேறுவாதன் : குகையின் முன் வாசலில் வைக்கும் பின்னிய பனை ஓலைத் தடுப்பைக் கொடுத்தவன் (11).

அந்தை : பிகன் (13).

குவிரன் – பேதலை என்னும் ஊரைச் சார்ந்தவன் (14).

செங்குவிரன் (15)

குவிரதன் (16)

சாதன் (17) அரிக்க மேட்டுப் பானையில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களிலும் (9), காணப்படுகின்ற பெயர்.

முடிகுலரன் (அரிக்க மேடு – 15)

யதுவலபூத (அரிக்கமேடு – 20)

இரவி, இவன் மகன் காசி நாகனும், கணியநந்தன் என்பவனும் கொடுத்த தானங்கள் (32). பிற்காலத்தில் சேரர்கள் 'இரவி' என்பதனைத் தங்கள் பெயருக்கு முன்பாகச் சேர்த்துக் கொண்டனர்.

அந்துவன் : திருப்பரங்குன்றக் கல்வெட்டில் காணப்படும் கொடையாளி (48). சங்க இலக்கியத்திலும் இப்பெயர் காணப்படுகின்றது.

## வரலாற்று மதிப்பீடு

மேலே குறித்த செய்திகளிலிருந்து வரலாறு எழுதுதற்கு அக் கல்வெட்டுகள் மிக்க பயனுள்ளவை என அறியலாம்.

முதலாவதாக, இந்திய நாட்டின் பகுதிகளுக்கு அசோகர் கல்வெட்டுகள் மிகத் தொன்மையான ஆதாரங்களாக அமைந்துள்ளதுபோல் தமிழக வரலாற்றுக்குத் தமிழ் பிராமி கல்வெட்டுகள் மிகத் தொன்மையுடைய சான்றுகளாகும். தமிழகத்திலும், கேரளத்திலும் அசோகர் கல்வெட்டுகள் ஒன்று கூட இதுகாறும் கண்டெடுக்கப்படவில்லை ; மைசூர் (கர்நாடக) மாநிலத்தில் மட்டும்தான் அசோகர் கல்வெட்டுகள் கிடைக்கின்றன என்பதை வரலாற்று உலகம் அறியும்.

தமிழ் மொழிக் கோட்பாடுகளுக்கு ஒப்ப சில பல மாறுதல்களை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் ஓரளவு அசோகர் காலத்தை ஒட்டியும் ஒரே எழுத்து வடிவத்தில் எழுதப்பட்ட இக்கல்வெட்டுகள் மிகவும் சிறப்பினை உடையனவாகும். மொழிவகைப் பிரிவினைகள் இருந்த போதிலும், வரிவடிவ ஒற்றுமை இந்தியத் துணைக்கண்டத்தில் இருந்துள்ளது என்பதனை இக்கல்லெழுத்துகள் திண்ணமாக வலியுறுத்தும்.

### இலங்கையில் பிராகிருதம்

இவ்வகையான ஒத்த முறையே இலங்கையிலும் பின்பற்றப்பட்டுள்ளது என்பதை ஈண்டு குறித்தல் தகும். இலங்கையில் பிராகிருத மொழிக்கு, பிராமி எழுத்து வடிவம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே, பிறநாட்டுப் பகுதிகளுடன் தென்னிந்தியா வரிவடிவத்தில் பிணைக்கப்பட்டது. மேலும் பிராகிருதச் சொற்கள் உள்நாட்டு மொழியில் கலக்கப்பட்டிருந்தன.

### மக்கள் ஏற்றனர்

அசோகர் காலத்திற்கு வெகுகாலம் முன்பாகவே இந்தியத் துணைக்கண்டம் மற்றும் இலங்கை ஆகிய இடங்களில் பொதுவாக மக்கள் பயன்படுத்தும் சக்தி வாய்ந்த மொழியாக பிராகிருதம் திகழ்ந்துள்ளது எனலாம்.

தமிழகமும் இப்பெரும் வளர்ச்சியில் நல்ல பங்கேற்றது. பிராகிருதச் சொற்கள் பலவும் பிராமி கல்வெட்டுகளில் பயன் படுத்தப்பட்டுள்ள தென்பதனைக் கொண்டு இப்பகுதி மக்கள் பிராகிருத மொழியை ஏற்றதைக் குறிக்கலாம்.

பிராமி வரிவடிவம் தமிழகத்திற்கு வருவதற்குப் பல்லாண்டுகள் முன்னரே தமிழக மக்கள் பிராகிருதச் சொற்களை நன்கு அறிந்திருந்தனர். பிராகிருத மொழித் தொடர்பு அசோகருக்கு முற்பட்ட காலத்தது. அதாவது பிராமணக் கோட்பாடுகள் தமிழகத்தை வந்தடைந்த தொன்மைக் காலத்துடன் நாம் தொடர்பு படுத்தலாம். பழைமையான இக் கல்வெட்டுகளால் தமிழகத்தில் பிராகிருத மொழி நன்ருகப் புரிந்து கொள்ளப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது எனலாம்.

தமிழ் நாட்டின் பகுதிகளில் பிராமி கல்வெட்டுகள் பரவலாகக் கிடைப்பதை இரண்டாவதாகக் குறிப்பிடலாம். உள்நாட்டு மொழியைக் கற்று வந்த மொழியறியாத சில சமணக் குரவர்கள் மட்டும் பயன்படுத்தினர் என்னும் கருத்து இப்போது ஏற்கத்தக்கதல்ல. திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்கள் பலவற்றிலும் கிடைக்கும் பிராமி எழுத்துக் களின் வடிவ ஒற்றுமையைக் கொண்டு தொலை தூரங்களிலும் இவ்வரிவடிவம் புரிந்து கொள்ளப்பட்டு நிலையாக ஏற்கப் பட்டுவிட்டது என்பது புலனுகின்றது.

இவ்வரிவடிவம், சமணம் அல்லது புத்த மடாலயங்களில் மட்டுமே அப்போது பயன்படுத்தப்படவில்லை, பொது மக்களாலும் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. பாண்டிச்சேரிக் கருகிலமைந்த அரிக்கமேடு என்னும் இடத்தில் கிடைத்த மட்பாண்டங்களில் உள்ள இவ் எழுத்துகள் அதிக அளவில் கிடைத்துள்ளதை அனைவரும் நன்கு அறிவர். மேலும் கொற்கை, உறையூர், அழகரை,

காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நடத்திய அகழ்வாய்வுகளில் கிடைத்த மட்பாண்ட எழுத்துகளும் இக்கருத்தை உறுதி செய்கின்றன. இவ் எழுத்துகளை அண்மையில் வட ஆர்க்காடு மாவட்டம் ஆண்டிப்பட்டி என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட காசுகளிலும் காணலாம். இவை அனைத்தும் பிராமி எழுத்து முறையைப் பொதுவாக மக்கள் நன்கு அறிந்து நடைமுறையில் பயன்படுத்தினர் என்பதனை உறுதியாகப் புலப்படுத்துகின்றன. நுண்புலமையோர் மட்டுமின்றிச் சாதாரண கல்வி அறிவுள்ள மக்களும் இதே வரிவடிவத்தைப் பயன்படுத்தினர். இவ்வகை மக்களுக்கே கல்வெட்டுகளும் எழுதப்பட்டன. கலயங்களில் தம் பெயரைக் குயவர் எழுதினர்; மதுரைக்கருகிலுள்ள மாங்குளத்தில் தன் தானத்தைப் பதிவு செய்ய மன்னன் நெடுஞ்செழியன் இவ்வரிவடிவத்தைப் பயன்படுத்தினான். திருச்சிக்கருகமைந்த புகளூரில் சேர அரசர் இளவல் இதே வரிவடிவத்தைப் பயன்படுத்தித் தமது கொடையைப் பதிவு செய்தார்[7].

தேனூரைக் கைப்பற்றிய குறுநிலத் தலைவன் தான் அளித்த கொடையை இதே வரிவடிவத்தில் காஞ்சிக் கருகமைந்த மாமண்டூரில் பொறித்துள்ளான். இவற்றிலிருந்து காஞ்சி முதல் திருநெல்வேலி வரையிலும் இவ்வரிவடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அறியலாம். உண்மையில் கடல் கடந்து இலங்கைவரைப் பெருமளவில் இவ்வெழுத்துக்கள் பரவியுள்ளன[8].

### மொழியறிவின் ஆற்றல்

மேலும் ழ், ள், ற், ன் போன்ற எழுத்துகள் தமிழ் மொழியின் சிறப்பான ஒலி அமைதிக் கொப்ப மாற்றிப் பயன் படுத்தியமையால் எச்சரிக்கையுடன் கணித்து இவற்றைத் தமிழில் ஏற்றுக் கொண்டனர் எனலாம். இவ்வாறு எச்சரிக்கை உணர்வுடன், மொழியின் கூறுபாடுகளை

அறிந்து, மாற்றங்களை விளைவிப்பதாவது இம்மொழி வல்லுநராலன்றி வேற்று மொழியினரால் ஆகக் கூடிய காரியமன்று. அயல் மொழியினரால் மட்டுமே இவ்வரிவடிவம் பயன்படுத்தப்பட்டிருப்பின், இந்தியாவின் மற்ற பகுதிகளில் வழக்கிலிருந்த வரிவடிவத்தையே எவ்வித மாற்றமுமின்றிப் பூரணமாக ஏற்றுக் கொண்டிருப்பர். வழக்கிலுள்ள அக்கால மொழிகளில் இல்லாத, தமிழ் மொழியில் மட்டுமே உள்ள சிறப்பான ஒலி வடிவங்களுக்கு எழுத்துருவங்களை உருவாக்கவோ அல்லது வளர்ச்சியடைய செய்யவோ, தமிழ் மொழியில் அல்லது மொழிக் கூறுபாடுகளில் ஆழ்ந்த உள்ளறிவு உடையவர்களால்தான் முடியும்.

### கிளாரன்ஸ் மலோனிக் கருத்து

இக்கல்வெட்டுகள் கிடைக்கும் ஊர்களையும் முக்கியமாக கவனிக்க வேண்டும். இதன் மூலம் பல்வகை பண்பாடுகளின் முன்னேற்றங்களை அல்லது பண்பாட்டு வளர்ச்சியினை அறிய முடியும். இப் பண்பாடுகளைப் பற்றிப் பாராட்டும் வகையில் கிளாரன்ஸ் மலோனி என்பவர் ஒரு விளக்கம் தந்துள்ளார். சங்க காலத்தில் கிறிஸ்து சகாப்தத்தின் (முதல் மூன்று நூற்றுண்டுகள்) தென்னிந்தியா அப்போதிருந்த பொருளாதாரத்தை அடைய முற்பட்ட நிலைமைகளையும் மற்றும் சமய முறைகளைச் சீரமைத்தும் சமூகப் படிநிலைகளை உருவமைத்தும் நிலையான கட்டடங்களையும், எழுத்து முறைகளையும் எவ்வாறு ஆக்கிக் கொண்டது என்பதை அவர் தெளிவாகக் காட்டியுள்ளார்.

சங்க காலத்தில் நன்கு வளர்ச்சியுற்றிருந்த இலக்கிய மரபுகள் பலவற்றிற்கும் கி.மு. 3,2–ஆம் நூற்றுண்டு பிராமி கல்வெட்டுகளே ஆணிவேர்த் தோற்றமாகக் காணப்படுகிறது என்பது அவர் கருத்தாகும்[10].

### பழமைச் சான்றுகள்

தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் சான்றுகள் இலக்கியங்களைவிட ஏறக்குறைய மூன்று நூற்றுண்டுகட்கு

முற்பட்ட சான்றுகளாக அமைகின்றன. இவை நாகரிக வளர்ச்சி மற்றும் ஒருமித்த பண்பாட்டுப் பிணைப்பின் முக்கிய கால கட்டமாகத் தோன்றுகின்றன. வரிவடிவத்தை அந்நிலையில் ஏற்றுக் கொள்வதானது இயற்கையே என்றும் அது பல பண்பாட்டுப் பிணைப்பு வளர்ச்சியுடன் ஒத்ததே என்றும் அவர் வலிமையான தொல்லியல் இலக்கிய அடிப்படைகளின் மீது சுட்டிக் காட்டியுள்ளார்.

### வட்டெழுத்து...

பிற்காலத் தமிழ் வட்டெழுத்துடன் சம்பந்தமின்றித் தமிழ் பிராமி எழுத்துக்கள் தனித்து நிற்கின்றன என்ற பொதுவான கருத்து இனிமேல் ஏற்புடையதாகாது. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் கி. பி. 5, 6–ஆம் நூற்றுண்டுகளைச் சார்ந்த நாடுகள் கல்வெட்டுகள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. வட்டெழுத்துகள் பிராமியினின்றும் தோன்றியிருக்கலாம் என்பதை இத் தொடர்புகள் காட்டுகின்றன.[11] இதற்குப் பிற்காலத்தில் பிராமி எழுத்துகளின் வளர்ச்சியில் எவ்விதத் தடங்கலும் இல்லை. எழுத்து வடிவ வளர்ச்சியில் உள்ள சிறந்த தொடர்பை இது தெளிவாகக் காட்டுகிறது.

### பல்கலைச் செல்வர் தெ. பொ. மீ. கருத்து

தமிழ் நாட்டு மொழியியல் மற்றும், இலக்கிய வளர்ச்சியில் இக்கல்வெட்டுகள் எந்த ஒருபடி நிலையையும் சார்ந்தனவாகக் கருத முடியாது என்பது சிலரது வாதம். பேச்சு, வழக்கு மொழியினை இக்கல்வெட்டுகள் பயன்படுத்தியுள்ளதைப் பெருங்குறையாக இவர்கள் கருதுகின்றனர்.[12] மற்றும் கல்வெட்டுகள் இலக்கியங்களைப் போல காலம் காலமாக எழுதப்பட்டும், பின்னர் இவையும் பிறிதொரு காலத்தில் பெயர்த்து எழுதப்படவும் இல்லையாதலால் கல்வெட்டுகளில் இடைச் செருகல்கள் இல்லை. இதனால்

இக்கல்வெட்டுகளைப் போன்ற சிறப்பான சமகால வரலாற்றுச் சான்று ஏதொன்றும் இருக்க முடியாது. மொழியியல் ஆய்வுக்குக் கல்வெட்டுகளின் முக்கியத்துவம் தற்போது பரவலாக நன்கு அறியப்பட்டுள்ளது எனில் அது மிகையாகாது. "கல்வெட்டுகளில், அவை எழுதப்பட்ட காலங்களைச் சார்ந்த வெவ்வேறு மக்களின், பேச்சு வழக்கு மொழிகளே அதிகம் உள்ளன" எனச் சரியாக அறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ஆராய்ந்துள்ளார்.[13]

பேச்சு வழக்கு மொழிகளும், எழுத்துப் பிழைகளும்கூட, பொதுமக்கள் தங்களுக்குத் தெரிந்த பேச்சு வழக்கு மொழிகளில் தம் கருத்தைப் பரிமாறிக் கொண்டனர் என்ற அடிப்படைக் கருத்தை உறுதி செய்கின்றன. எழுத்து, ஒலி மதிப்பு முறைகளில் ஏற்பட்ட வியத்தகு மாறுதல்களைக் கல்வெட்டுகளின் மூலம்தான் ஆய்வாளர்கள் காண முடியும். வட்டார வேறுபாடுகளும் கூட இக் கல்வெட்டுகளில் பிரதிபலிக்கின்றன.

இக் கருத்துக்கள் அனைத்தையும் மனத்தில் நிறுத்தித் தமிழ் வரி வடிவத்தின் முன்னோடி எனப்படும் தமிழ் பிராமி கல்வெட்டுகளை மதிப்பீடு செய்ய வேண்டும்.

## சுருக்கம் காண்போம்

இக்கல்வெட்டுகளின் செய்திகள் கல்வெட்டு வடிவத்தைப் போல் மிக முக்கியமானவையாகும். இச் செய்திகள் பலவும் பல்வேறு துணைத் தலைப்புகளின் கீழ் முன்பே கண்டோம்.

சமயக் குழுக்கள் அவைகளின் முறைகள், வணிகர்கள், வணிகக் குழுக்கள், சமூகப் பொருளாதார நிறுவனங்கள் மற்றும் அரசர்கள், குறுநிலத் தலைவர்கள் பெயர்கள், இடப் பெயர்கள் ஆகியவை பற்றிய செய்திகளை இவற்றால் அறிய முடிகிறது; சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்ட கருத்துக்

களை ஒப்பிட்டுப் பார்க்கத்தக்க சிறந்த செய்திகளை இவை தருகின்றன. மேலும் இலங்கை அரசர்கள், சாதவாகனர், அசோகர் போன்ற பிறரது கல்வெட்டுகளில் கிடைக்கும் செய்திகளுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்க செய்திகளையும் சில சமயம் இவை நல்குகின்றன. மேலும் விரிவாக இச் செய்தி களை ஆய்வு செய்கையில் கீழ்க் கண்ட பொதுக் கருத்துக் களையும் சேகரிக்க முடியும்.

### அரசர் பட்டயங்கள்

பழைமையான அரசர் செயல்களைக் காணும்போது பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன், மாங்குளத்தில் சமண முனிவருக்குத் தானம் வழங்கிய கல்வெட்டைச் சிறப்புடன் குறிக்கத் தோன்றுகிறது. இவ்வாறே சேர இளவரசன் இளங் கடுங்கோ, சமண முனிவர் ஒருவருக்குத் தானமளித்ததைப் புகழூர்க் கல்வெட்டு பதிவு செய்கிறது. அக்காலத்தைச் சார்ந்த எழுத்து வரிவடிவத்தில் தமிழகத்தில் கிடைக்கும் மிகத் தொன்மையான–அரசர் வெளியிட்டவை இரண்டு கல் வெட்டுகளாகும். எனவே இவை பொது அமைப்பு முறை, மொழி, வடிவம், எழுத்து ஆகிய தன்மைகளை அறிய முக்கிய மானவையாகும். அக்கால அரசு மொழியென்பதையும் இவ்வரிவடித்தைப் பார்த்த முதற் பார்வையிலேயே குறிப் பிட இயலும். பதிற்றுப்பத்தில் கண்ட சேர மன்னர் வழியையும் ஏற்கனவே விரிவாக திரு. மகாதேவன் அவர்கள் நன்கு ஆராய்ந்துள்ளதால் அதை மறுபடியும் இங்கே குறிப் பிட வேண்டியதில்லை. மாங்குளம் அரச தானத்திற்கும், புகழூர்க் கல்வெட்டுக்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசத்தை மட்டும் கூற விழைகிறேன்.

முன்னே குறித்த மாங்குளம் கல்வெட்டு அரசன் ஆட்சி யாண்டைக் குறிப்பிடவில்லை. ஆனால் பின்னர் உள்ள (புகழூர்) கல்வெட்டு, இளவரசனை பின்னர் அளிக்கப் பட்டது என்று தெளிவாகக் குறிப்பிடுகிறது. மேலும்,

புகழூர் கல்வெட்டு கொடையளித்தவனின் தந்தையின் பெயரையும் (பெருங்கடுங்கோன்), பாட்டன் பெயரையும் ஆதன் சேரல் இரும்பொறை), பிற்கால செப்புப் பட்டயங் கள் பரம்பரைப் பெயர்களைக் குறிப்பதுபோல் குறித்துள்ளன. இச் செப்புப் பட்டயங்களில் தானமளித்தோனின் பரம் பரைப் பட்டியல் இடம் பெற்றிருக்கும். எனவே, பல்வேறு பகுதிகளில் காணப்படும் உண்மையான இந்திய வழக்காறு கள் அடிப்படையில் பெற்ற அரசப் பட்டயங்களையொத்தது புகழூர்க் கல்வெட்டு என்று குறிப்பிடலாம். முற்பட்ட சாதவாகனர் கால அரசர் பட்டயங்களையும் இத்துடன் ஒப்பிடலாம்.

### பரம்பரைப் பெயர்கள்

கல்வெட்டுகளில் காணப்படும் பலவகையான அரசப் பரம்பரைப் பெயர்களும் சிறப்பானவை. பாண்டியரைக் குறிப்பிட வரும் வழுதி, செழியன், கடலன், பணவன் ஆகிய பெயர்ச் சொற்கள் பாண்டிய மன்னரைப் பற்றி அக்காலத் தமிழ் வழக்காறுகள் இக் கல்வெட்டுகளில் எந்த அளவுக்கு நிலைத்திருக்க வேண்டும் எனக் காட்டுகிறது. புதியதாக மொழி கற்போரும், மொழி தெரியாதவர்களும் இவ்வகை யான சிறந்த மதிப்பு வாய்ந்த பெயர்களைப் பயன்படுத்த மாட்டார்கள். தர்மம் என்பதை தம்மம் என்றும், ஸ்தானம் (இடம்) என்பதைத் தானம் (55) என்றும், இன்னும் மிகத் தெளிவாக இலங்கை என்பதை இருக்கை என்றும் தூய தமிழில் எழுதியுள்ளனர்.

செய்யளம் என்றும் ஈழம் (52) என்றும் ஒன்றைக் குறிக்க பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### சமணம்

சமண சமய வரலாற்றில் இலக்கியச் சான்றுகள் அளிக்காத பல்வேறு செய்திகளைக் கல்வெட்டுகள் புலப்

படுத்தியுள்ளன. மக்கள் எளிதில் நெருங்க முடியாத தொலை தூரத்திலுள்ள கிராமங்கள் மற்றும் குன்றுகளில் இக் கல்வெட்டுகள் கிடைப்பதைக் கொண்டு, சமண சமயம் எந்த அளவு தமிழகத்தின் உட்பகுதிகளுள் ஊடுருவியுள்ளது என்று நாம் அறியலாம். அழகர் மலை, திருப்பரங்குன்றம், திருவாதவூர், குன்றக்குடி ஆகிய ஊர்கள் வைணவம் அல்லது சைவ சமயத்தைச் சார்ந்த முக்கிய இடங்கள் என்று இலக்கிய வாயிலாக அறிகிறோம்.

மேலும், சமணர்கள் தங்களைச் சங்கங்களாக பலவகைப் படுத்தி, 'கணம்' என்னும் குழுக்களாக அமைத்துக் கொண்டனர். மாங்குளம் கல்வெட்டில் காணப்படும் 'கணி' என்னும் சொல் 'கண' என்பதனை எளிதாகக் குறித்ததெனலாம் (R. நாகசாமி).

நன்கு தெரிந்த சமண கணங்கள் பலவற்றுள்ளும், ஒன்றான நந்தி கணத்தின் குருவாக (ஆசிரியராக) கணிய நந்த ஆசிரியரைக் கருத இயலுமா என்பது ஒரு கேள்வி. தேவாரம் பாடிய ஞானசம்பந்தர் தம்முடைய மதுரைப் பதிகத்தில் ஆனைமலையைச் சுற்றி வழங்கி வந்த பல்வேறு சமண கணங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். கலிங்கம் கருநாடகம் போன்று தமிழ் நாடும் புத்த மதத்தைவிட சமண சமயத்திற்கு அதிக ஆதரவு காட்டியது என்றும் எனக்குத் தோன்றுகிறது.

### மொழி

தமிழ்ச் சொற்கள் தமிழ் பிராமிக் கல்வெட்டுகளில் பயன் படுத்தப் பட்டுள்ளன. மேலும் அறுத்த, அறுப்பித்த (56) மற்றும் செய்த, செய்வித்த, பண்ணுவித்த (71, 72) மற்றும் குடுத்த, குடுப்பித்த போன்ற இறுதி மாறுபட்ட சொல் அமைப்புடன் கூடிய சொற்கள் பலவும் பயன் படுத்தப் பட்டுள்ளன. இவற்றை நுணுகி ஆராயின், இக் கல்வெட்டுகளை வடித்தவர்கள் தமிழ்மொழிக் கோட்பாடுகளில் நுண்

புலமை பெற்றிருப்பர் என்று முடிவு செய்யலாம். தம்மம், அதிட்டானம், நிகமம், உபாசக, நிசிதிகை போன்ற பல பிராகிருதச் சொற்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுடன் தூய தமிழ் சொற்களான இருக்கை, உறை, உப்பு, அறுவை வணிகன், மகன், ஐம்பத்தேழு போன்ற தூய தமிழ்ச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவைகளைக் கொண்டு பிராகிருதமும், தமிழும், ஏற்கெனவே ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருந்தது எனவும் தமிழ்மக்கள் இதனை ஏற்றுக் கொண்டனர் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. எனவே இக் கல்வெட்டுகளை வெட்டியவர்கள் இவ்விரண்டு மொழிகளுள் எம் மொழிக்கும் அயலார் அன்று.

தமிழ் மொழிவடிவத்தில் நன்கு இணைந்து விட்ட சில பிராகிருத மொழிச் சொற்களுக்குச் சில சான்றுகளைக் கீழே காணலாம். நிகமம் என்னும் பிராகிருதச் சொல், வணிகக் குழு; மற்றும் வணிகக் குழு உறுப்பினரைக் குறிக்கும். தமிழ் மொழியில் இது நிகமத்தோர் என வழங்கப் பெற்றுள்ளது;(6) சுத என்னும் சொல், சுதன் என்று தமிழில் மாற்றிக் கொள்ளப்பட்டது. குடும்பிக என்னும் சொல் குடும்பிகன் என்று தமிழில் ஆயிற்று(51). இவை அனைத்தும் சேர்ந்து, இக் கல்வெட்டுகளை வெட்டியவர்கள் அவ்வப் பகுதியில் வாழ்ந்த மக்கள் என்று தெளிவாகச் சொல்லலாம். இவர்கள், பிராகிருத மொழியைத் தக்க மாறுதல்களைச் செய்து தம் மொழியுடன் இணைத்துக் கொண்டனர்.

இக் கல்வெட்டுகளில் வணிகர்களைக் குறிக்கப் பயன்படும் பல்வேறு சொற்களுடன் சாதவாகன பிராமி கல்வெட்டுகள் குறிக்கும் சொற்களை ஒப்பு நோக்குதல் சிறப்பானதாகும். சாதவாகன கல்வெட்டுகளில் திலபிஷ்டக (எண்ணெய் வியாபாரிகள்); ஸ்வர்ணகாரா(பொற் கொல்லர்); மணிகாரா (நவமணி வியாபாரிகள்); கும்பகாரா (குயவர்) ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர். ஆனல் தமிழ்பிராமி கல்வெட்டுகளில் முறையே கலுவ வாணிகன்;பொன் வாணிகன்,

அறுவை வாணிகன் போன்ற தமிழ்ச் சொற்களிலேயே குறிக்கப்பட்டுள்ளனர். இச் சான்றுகளும் அக் கல்வெட்டுகளை எழுதியவர்கள், தமிழ் மொழியில் சிறந்த புலமை உடையவர்கள் என்பதைப் புலப்படுத்தும். எனவே, மாற்றிக் கொள்ளுதலிலும், ஏற்றுக் கொள்ளுதலிலும் இரண்டு படிநிலைகளை நாம் கருதலாம்.

தமிழ்ச் சொல் உருவில் பிராகிருதச் சொற்களை ஏற்றுக் கொள்ளுதல் என்பது ஒருநிலை. இம்மாறுதலின் ஆரம்பம் மிகத் தொன்மையான காலத்தில் புதையுண்டு கிடக்கிறது. அசோகர் காலத்திற்கு வெகு காலம் முன்னரே ஆரம்பித்த பிராகிருத மொழி ஊடுருவலின் ஒரு பகுதி என்று மட்டும் நாம் சொல்லலாம்.

தமிழ் நாட்டுப் பிராமி கல்வெட்டுகள் நன்கு குறிப்பிடத் தக்க படி நிலையைக் குறிப்பிடுகிறது. முன்னே சுட்டிக் காட்டியதைப் போன்று பிராகிருதச் சொற்கள் தமிழ் மொழியின் வடிவத்திற்கும், நுண்மைக்கும் ஏற்ப கவனமாகவும் திருப்திகரமாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

அசோகர் ஆதரவின் கீழ் (கி. மு. 3–ஆம்நூற்றுண்டு) இந்தியா முழுமைக்கும் இலங்கைக்கும், பிராமி எழுத்துக்கள் ஊடுருவலாகும். இப்புதிய அலையினின்று தமிழகம் தனித்தியங்கவில்லை. தமிழ் ஒலியன்களின் சிறப்பிற்கேற்ப பிராமி எழுத்து வடிவம் ஏற்கப்பட்டது. ழ், ள், ற் மற்றும் ன் போன்ற எழுத்துகள் இதுவரை எழுத்து வடிவத்திற்குப் புதியவை. இப் புதிய பிராமிக்கு மாறுபட்ட ஒலி வடிவங்கள் தமிழ்க் கல்வெட்டுகளில் சேர்க்கப்பட்டன. வேற்றோராலோ, அல்லது மொழியினைக் கற்றுக் கொள்ளும் ஆரம்பநிலை மாணவர்களாலோ இம்மாறுதல் ஏற்பட்டிருக்க முடியாது. முன்னொரு முறை தமிழகத்தில் மாற்றங்களை ஏற்படுத்திய பிராகிருத மொழியில் வல்லுநர்களாயும், தமிழ் மொழிப் புலமையும் பெற்ற சிறந்த புலவரைப் போன்றோராலேயே இம்மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டவையாகும்.

தமிழ் மொழிக்கென்று இவ்வரிவடிவம் ஏற்றுக்கொள்ளப் பட்டவுடன், தொடர்ந்த காலங்களில் மேலும் வளர்ச்சியுற ஆரம்பித்தது. தமிழகத்தில் அண்மைக் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட வீரக் கற்களில் காணப்படும் வட்டெழுத்து கள் பிராமி எழுத்துக்களின் நியாயபூர்வமான வளர்ச்சியே யாகும், என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். பிராமிக் கல்வெட்டுகள் தனித்து நிற்கவில்லை என்பதையும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வளர்ச்சி அடைந்து உள்ளன என்பதையும் மீண்டும் இது உறுதி செய்யும்.

தமிழ் பிராமிக் கல்வெட்டுகளில் கிடைத்த செய்தி களையும் பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல் காப்பியச் செய்திகளையும் ஒப்பிட்டு நோக்குதல் சரியானதே. இவ்வகை ஒப்பாய்வினைப் பல ஆசிரியர்கள் நடத்தி சிறந்த பிரச்னைகளைப் பற்றி விளக்கம் அளித்துள்ளபடியால் மீண்டும் இப்பிரச்னையை இங்கே ஆராய்வது தேவையற்றது. இக் கல்வெட்டுகளில், தொன்மையானவை, தொல்காப்பி யத்திற்கு[15] முற்பட்டவையாயும், பிற்பட்ட கல்வெட்டுகள் தொல்காப்பியத்தின் காலத்தோடு பொருந்துவது என்றும் நிர்ணயம் செய்ய உதவும். இவ்வகையில் இவை எழுத்து வடிவ, மொழி வளர்ச்சியில் நம்பத்தக்க முக்கிய படிநிலைகளை அமைக்க உதவும்.

### இலங்கையின் செல்வாக்கு

இக்கல்வெட்டுகள் காணப்பட்ட இடம், அவை காணப்படுகின்ற ஊர் ஆகியவையும் ஒரு தொடர்பான கருத்தைச் சொல்லுகின்றன. எல்லாவற்றிலும் தொன்மை யான கல்வெட்டுகள் அனைத்தும் பாண்டிய நாட்டிலே தொகுப்பாகக் கிடைக்கின்றன. உதாரணமாக மாங்குளம், மேட்டுப்பட்டி, விக்கிர மங்கலம், கருங்காலக்குடி, கீழ வளவு, கொங்கர் புளியங்குளம், சித்தன்ன வாசல், திருவாதவூர் போன்ற ஊர்களைக் குறிக்கலாம்.

பிற்காலத்தைச் சார்ந்த இரண்டு கல்வெட்டுகளும் தொண்டை மண்டலத்தில் கிடைக்கின்றன (மாமண்டூர், திருநாதர் குன்று). ஈரோட்டுக்கருகிலுள்ள அரச்சலூர், திருச்சிராப்பள்ளிக்கடுத்த புகலூர் ஆகிய ஊர்களில் கிடைப்பவையும் சற்று பிற்காலத்தைச் சார்ந்தவையாகும். திருச்சிராப்பள்ளிக்கு மேற்கேயும், தெற்கேயும் தொன்மையான பிராமிக் கல்வெட்டுகள் கிடைத்தில என்ற செய்தியை இதுவரை கிடைத்த ஆதாரங்கள் காட்டுகின்றன.

தமிழகத்தில் பிராமி வரி வடிவத்தின் வளர்ச்சிக்கு மதுரைப் பகுதி முக்கிய இடமாய் அமைந்தது என்பதையும் தொண்டை மண்டலம் ஓரப் பகுதியாய் அமைந்தது என்பதையும் இது காட்டலாம். மதுரையில் எவ்வாறு இவ்வரி வடிவம் உருவாகியது?

இலங்கையில் இதே போன்று பல பிராமிக் கல்வெட்டுக்கள் ஒட்டு மொத்தமாகக் கிடைக்கின்றன. இதனால் இலங்கையிலிருந்து, இவ்வரி வடிவம் மதுரைக்கு ஊடுருவியிருக்கக் கூடும் என்று எண்ணலாம். குஜராத் அல்லது கலிங்கத்திலிருந்து கடல் வழியாக பிராகிருதம் பிராமி ஆகிய வடிவங்களை இலங்கை பெற்றிருக்கிறது.[16]

ஈழக்குடி மகன் (ஈழக்குடும்பிகன்) திருப்பரங்குன்றம் மடத்திற்குத் தானம் வழங்கியுள்ளான். முத்துப்பட்டி கல்வெட்டு வேறு ஒரு ஈழத்தோனைப் பற்றிக் குறிப்பிடுகிறது. பாண்டியப் பகுதிகளில், பிராமி வரி வடிவம் பரவியதற்கு இலங்கையின் செல்வாக்கு மிக முக்கியமானதாகும் என்ற கருத்துக்கு இவ்விரண்டு செய்திகளும் தக்க ஆதரவு நல்கும். J. சுந்தரம்[17] அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல் இவ்விரண்டு பகுதிகளிலும் காணப்படும் குகைகளில் ஒரு ஒற்றுமை நிலவியுள்ளது; இக்கல்வெட்டுகள் பெரும்பாலும், குகைகளின் வாயிலின்

மேல்விளிம்பிலேயே செதுக்கப்பட்டுள்ளன. இச் சான்றுகள் எல்லாம் பாண்டி நாட்டுப் பிராமிக் கல்வெட்டுகளுடன் இலங்கையை இணைத்துப் பேசுகின்றன; முக்கியமாக ஊடுருவலுக்கு, இலங்கையின் செல்வாக்கு, பாண்டி மண்டலத்தின் மீது இருந்திருக்கலாம்.

### ஆந்திரமும் துணை

ஆந்திரத்திலுள்ள பட்டிப்புரோலுவில் கிடைத்த தென பகுதி பிராமி எழுத்து வகையுடன் தமிழ்ப்பிராமி எழுத்து வகை சற்று ஒப்புமை உடையது. ஆயினும் இவ் விரண்டையும் நேர்ப்பட இணைக்க `இயலாது. ஏனெனில் இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட நிலப் பகுதியில் ஒப்பு தலுக்கான வலிமையான சான்றுகள் ஏதும் கிடைத்தில. முன்னே குறித்தது போன்று தொண்டை மண்டலம் மற்றும் திருச்சி வரையிலான சோழ மண்டலப் பகுதிகள் உட்பட்ட வடதமிழ் நாட்டில் பட்டிப்புரோலு கல்வெட்டு களுடன் ஒப்பிடத் தக்க கால அளவுடைய தொன்மையான பிராமிக் சுல்வெட்டுகள் ஏதும் இதுகாறும் கிடைத்தில. தொன்மையான கல்வெட்டுகள் அனைத்தும் தமிழகத்தின் தென் கோடியிலே கிடைத்துள்ளன என்பதால், அருக மைந்த இலங்கைத் தீவின் தொடர்பையே இது காட்டு கின்றது. இக்கருத்தை ஊன்றி ஆராய வேண்டும். மேலும் இலங்கை பிராமிக் கல்வெட்டுகளையும் தமிழ் பிராமிக் கல்வெட்டுகளையும் ஒப்புமைப்படுத்தி நுணுகி மேலும் ஆய்தல் வேண்டும்.

தமிழகத்தின் பல்வேறு இடங்களிலுள்ள குகை இருப்பிடங்களில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகளும் பல்வேறு அகழ்வாய்வுகளில் கிடைத்த பிராமி எழுத்துக்கள் பொறித்த பானையோடுகளும், தமிழகத் தொன்மை வரலாறு எழுதுவதற்கு மிக முக்கியமான வரலாற்றுச் சான்றுக அமைகின்றன. இச் சான்றுகள் தமிழ் மக்களின் எழுத்து,

மொழி வளர்ச்சி, சமண சமய நிலை மற்றும் அவர்கள் சமூக, அரசியல் பொருளாதார நிலை பற்றிய விளக்கங்களைத் தருகின்றன. இவற்றில் மிகப் பழமையான கல்வெட்டுகள் சங்க முற்காலத்தினைச் சார்ந்தவை என்றும், பல சங்க இலக்கிய காலத்துடன் சம்பந்தப்பட்டவை என்பதாலும், இவற்றின் மதிப்பு மேலும் அதிகமாகின்றது. இக் கல்வெட்டுகளில் வரலாற்றுத் தெளிவுடன் குறிக்கப் பட்டுள்ள தமிழ் சமூக விரிவு, மொழி, எழுத்து வடிவம், ஆகிய வரலாற்றுச் செய்திகள் மிகக் கவனத்துடன் கருத்தூன்றிப் படிக்கத் தக்கனவாம்.

**புதிய பலகணி**

இன்னும் பல குகைக் கல்வெட்டுகள் கண்டுபிடிப் பதற்கான நல்வாய்ப்புகள் உள்ளன. எழுத்துக்கள் வரையப்பட்ட பானை ஓடுகள் அகழ்வாய்வில் கிடைப்பதும் அதிகரித்துக் கொண்டுள்ளன. இவை அனைத்தும் ஆய்வுக் களத்தில் புதிய பலகணிகளைத் திறந்து வைப்பதைப் போலாகும். தமிழகத்தின் தொன்மையான காசுகள் நமக்குத் தக்க சான்று அளிக்காமல் நழுவி ஓடுகின்றன. ஆண்டிப்பட்டி காசுப் புதையல் மற்றும் சாதவாகனரது இருமொழி பொறித்த காசுகளைத் தவிர மற்ற பழைய பாண்டியர், சோழர் காசுகள் அனைத்தும் எவ்வித எழுத்தும் இல்லாமல் உள்ளன.[18] ஆயினும் தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட காசுகளைக் கண்டெடுக்கும் நாள் கூடிய விரைவில் வரும். அப்போது பிராமி எழுத்துக்கள் பற்றிய புதுக் கருத்துகள் தோன்றிச் சிறக்கும்.

அடிக்குறிப்பு :

1. ஐ. மகாதேவன் Corpus of Tamil Brahmi Inscription (சென்னை–1968)

2. கே.வி. ராமன், ஒய். சுப்பராயலு, "A new Tamil Brahmi Inscription at Arittapatti". (Journal of Indian History) (ஆகஸ்டு 1871). சீரான வடிவத்திற்குப் பார்க்க...K.V. ராமன் Some aspects of pandyan History (சென்னை–1971).

3. R. நாகசாமி, கல்வெட்டியல், பக். 53.

3a. அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள். ஐ. மகாதேவன் Corpus of Tamil Brahmi Inscription கட்டுரையில் உள்ள கல்வெட்டு எண்களைக் குறிக்கும்.

4. இவ்வடிவம் பிற்காலக் கல்வெட்டுகளிலும் காணப் படுகிறது. இது பொது வடிவம். ஓராசிரியரது கருத்துபோல் இது தவருன வடிவமன்று: (Journal of Indian History vol. I, பகுதி–II)

5. நல்லியூர் என்று ஐ. மகாதேவனும், நல்பியூர் என்று R. நாகசாமியும் வாசிக்கின்றனர்.

6. அசோகருக்கு முற்பட்ட காலத்திற்கு அர்த்த சாத்திரம் சான்ருக மிளிர்கிறது. இந்நூல் தக்ஷிணபத (தக்காணம்)த்தின் வணிகச் சிறப்பினை உரைக்கிறது. முக்கியமாக பாண்டிய நாட்டின் தாமிரவருணி ஆற்றின் நன்முத்துக்களைப் பற்றியும் (பாண்டிய கவாட), மதுரையின் பருத்தித் துணிகளைப் பற்றியும் குறிக்கின்றது. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, A History of South India, பக். 84.

7. K. V. சௌந்தரராஜன், குகைக் கல்வெட்டுகளுக்கும், பாளை ஓட்டுக்கீறல்களுக்கும் இடையில் வித்தியாசம் காண்கிறார். இவற்றுள் முன்னது ஆரம்பகால (earlier) நிலையையும் பின்னது பொது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பரவிடும் பிற்கால நிலையையும் உணர்த்தும் என்கிறார். Journal of Kerala Studies Vol. I No. 2 and 3, பக். 144.

8. W. S. குணரத்னேயின் கருத்தை கிளாரன்ஸ் மலோனி (Clarence Maloney) தம் நூலான Archaeology in South India வில் குறிப்பிடுகிறார்.

9. கிளாரன்ஸ் மலோனி, Archaeology in South India 'Accomplishment and prospects'.

10. கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சாதவாகனர் காலத்திலும் இம்மாதிரியான நகர வாழ்க்கை அமைப்பு முறை (Urbanisations) வணிக உறவுகள் தொடக்கம், எழுத்து அறிமுகம் ஆகியவை இருந்தது. இவர்கள் கல்வெட்டுகளில் வணிக, வணிகக் குழுக்கள், மற்றும் பிரதிஷ்ட்டான, அமராவதி போன்ற நகரங்களைப் பற்றிய பல குறிப்புகள் நிறைந்துள்ளன.

11. R. நாகசாமி, முன் குறித்த நூல்—பக். 27.

12. Journal of Indian History, முன் குறித்த கட்டுரை பக். 309. இக்கட்டுரையாசிரியர் தற்காலத்தில் பயன்படுத்தும் சொற்களைக் கருத்தில் கொண்டு கல்வெட்டுகளில் வழங்கும் தொன்மையான சொற்களைத் தவறு என்றோ, 'பிழை' என்றோ கருதுகிறார். ஆயினும் ஆய்வுக்கு ஏற்புடையதன்று.

13. T. P. மீனாட்சி சுந்தரம், A History of Tamil Language (Poona 1966) பக். 7.

14. R. நாகசாமி முன் குறித்த நூல்.

15. சா. கணேசன் கல்வெட்டுக் கருத்தரங்கு பக். 54–55 வேறு பல ஆய்வாளர்களாலும் இக்கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயின் ஓர் ஆய்வாளர் மட்டும் இக்கருத்தை விரிவாக ஆராய மனமின்றி, கல்வெட்டுகளைத் தொல்காப்பியத்துடன் ஒப்பிட்டு ஆய்வது எவ்விதப்பயனையும் தராது என்று மேற்போக்காகச் சொல்லியுள்ளார். Journal of Indian History ஆகஸ்டு 73, பக். 309.

16. கடல் வழி ஆதிக்கத் தொடர்பு பற்றி விளக்கத்திற்கு இலாரன்ஸ் மலோனியின், 'Beginnings of Civilisation in South India' என்ற நூலைப் பார்க்க.

17. கல்வெட்டுக் கருத்தரங்கு பக். 76.

18. சாதவாக மன்னர்களில் முதல் சாதகர்ணி (177 B. C.) கூட தன் பெயர் பொறித்த காசுகளை வெளியிட்டுள்ளார். கௌதமி புத்திர சாதகர்ணி (முதல் நூற்றுண்டு A.D.)யின் காசுகள் ஆயிரக்கணக்கில் கிடைத்துள்ளன. எனவே இவ்வாறுன தன்மை உண்மையிலேயே ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. C. M. Rama Rao, Studies in the Early History of Andhra Desa. P. 30 and 37).

★

## மூலக் கட்டுரைகள்

The papers included in this book were originally published in variors journals. The following are the details.

1. Some ancient arts, crafts and Technology of Tamilnadu as revealed in the Excavations. Proceedings of II International Tamil Conference, Madras, 1968.

2. Excavations in Pumpuhar - Handbook - Published II International Tamil Conference, Madras, 1968.

3. Excavations in Uraiyur - to be published in the Dictionary of Archaeology, I. C. H. R. - New Delhi.

4. Archaeological Investigations in Kerala - Published in the Araichi, 1970.

5. Robert Bruce Foote's Contributions to the Neolithic Studies in India.

Paper presented to the Seminar on Bruce Foote organised by the G.S.I., Madras, April 1976.

6. Uggirankottai – A fortified Pandyan City. Journal of Indian History – Vol, LVII, .974.

7. Some Hero-Stones in Pandyan Country Seminar on Hero-Stones, published by the Dept. of Archaeology, Government of Tamilnadu.

8. Jainism in Tondaimandalam – Published in the Journal of the Institute of Traditional Cultures, Madras.

9. Religious Inheritance of the Pandyas. Madurai Minakshi Amman Temple Kumbhabishekam Malar, Madurai.

10. Brahmi Inscriptions of Tamilnadu–A Historical Assessment, Journal of Epigraphical Studies – Vol. I.